# ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி
# (EARLY CHILDHOOD EDUCATION)

பொதுக் கலைமானிப் பட்டத்திற்குரியது

கல்வி ஆண்டு 2016 – 17
முதலாம் வருடம், பருவம் - 1

பாடநூல்

பேராசிரியர் க. கணேசராசா

வெளியீடு
வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம்
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2023

**The South Eastern University Publication**

University Park, Oluvil, Sri Lanka

First Publish  - 2023

ISBN -

@ 2023 South Eastern University Publication

All rights reserved. No part of this text book be produced or transmitted in my form or by any means, electric or mechanical, including photocopying and recording of from any information stored in a retrieval system, without permission in writing from both the author of this text book and South Eastern University of Sri Lanka.

## நன்றியுரை

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் நடாத்தும் வெளிவாரிப் பட்டப்படிப்பினைப் பயிலும் மாணவர்களுக்கு பாடவிதானங்களுக்கான பாடநூலை (Text book) வெளிக் கொணரும் முயற்சி பாராட்டுக்குரியதாகும். சமூக விஞ்ஞானங்கள் துறையில் கல்வி நீண்டகாலமாக கற்பிக்கப்படும் ஒரு பாடமாகும். இப்பாடத்தின் மூன்றாம் வருட முதலாம் பருவ மாணவர்களுக்கான பாடப்பரப்பில் 'ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி'என்ற பாடத்தைக் கற்க வேண்டியுள்ளதால் இப்பாடநூல் அம்மாணவர்களின் பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வது தொடர்பான முயற்சிக்கு அடிப்படையாக இருக்கும் என்று நம்புகின்றேன். ஆரம்ப கற்றல் கற்பித்தல் சார்ந்த பிரச்சினைகளைப் பற்றிய ஆய்வாக இது காணப்படுகிறது. கல்வியியல் தொடர்பான எண்ணக்கருக்களையும் கோட்பாடுகளையும், மற்றும் பிரச்சினைகளையும் இந்நூலின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

இப்பாடநூல் வெளிவருவதற்கு காரணமாக இருந்த எனது ஆசிரியர்களுக்கும் அனுமதியளித்த பல்கலைக்கழக உபவேந்தர், பீடாதிபதி, துறைத்தலைவர் மற்றும் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள், தொழில்சார் கற்கைகள் நிலைய இயக்குனருக்கும் அங்கு கடமை புரியும் உத்தியோகத்தினர்களுக்கும், எனது துறை சார்ந்த விரிவுரையாளர்களுக்கும் எனது குடும்ப அங்கத்தவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் இதனைக் கணினி மூலம் ஒழுங்கமைப்பதற்கு உதவிய நண்பர்களுக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன். இப்பாடநூலை மீள்பார்வை செய்து ஒழுங்குபடுத்திய (Reviewer) மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர்-------------------------------------------------------------- அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் இப் பாடநூலில் ஏதாவது தவறுகள் காணப்படுமாயின் அவை அடுத்த வருட மாணவர்களுக்கு திருத்தி வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**பேராசிரியர் க. கணேசராஜா**

07.04.2023

# ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி

**நன்றியுரை**

**பொருளடக்கம்**

**அத்தியாயம் 01** **ஆரம்பப் பிள்ளைப்பருவ பராமரிப்பும் கல்வியும்**

**அத்தியாயம் 02** **குழந்தைகளின் வளார்ச்சியும் விருத்தியும்**

**அத்தியாயம் 03** **சுயபாதுகாப்பு, ஆரோக்கியம் போசாக்கு**

**அத்தியாயம் 04** **ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்விசார் கலைத்திட்டம்**

**அத்தியாயம் 05** **ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வித்திட்டமிடலும் முகாமைத்துவமும்**

**அத்தியாயம் 06** **குழந்தைமைய நிகழ்ச்சிகளை தூண்டுதல்**

**அத்தியாயம் 07** **குழந்தைகளின் விருத்தியும் கற்றலும் பற்றிய மதிப்பீட்டு முறைகள்**

## பொருளடக்கம்

1.1 ஆரம்பப் பிள்ளைப்பருவப் பராமரிப்பும் கல்வியும் - அறிமுகம்
1.2 ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வியின் குறிக்கோளும் நோக்கமும்
1.3 ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்விச் சிந்தனையாளர்களும் அவர்களது பங்களிப்பும்
1.4 இலங்கையில் ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி நிறுவனங்கள்

2. குழந்தைகளின் வளர்ச்சியும் விருத்தியும் - அறிமுகம்
2.1 குழந்தை விருத்திப் படிநிலைகள்
2.2 விருத்தியில் : உடலியல், மனவெழுச்சி, இயக்க வளர்ச்சி

3. சுயபாதுகாப்பு, ஆரோக்கியம் போசாக்கு - அறிமுகம்

3.1 ஆரோக்கியத்தைப்பாதிக்கும் காரணிகள்

3.2 முன்பள்ளி கல்வி குழந்தைகள் தொடர்பான நோய்கள்

3.3. முன்பள்ளி கல்வி குழந்தைகளின் உணவுப்பழக்கங்கள்

3.4 ஆளுமை விருத்தி

3.5 ஆளுமையைப்பாதிக்கும் காரணிகள்

4. ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்விசார் ̇ திட்டமிடல்.

4.1 ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி கலைத்திட்ட உட்கூறுகள்
4.2 ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்விமுறை
4.3 குழந்தைகளின் விருத்தியில் விளையாட்டின் முக்கியத்துவம்

5. ஆரம்பப் பிள்ளைப்பருவக் கலைத்திட்டமிடலும் முகாமைத்துவமும்
5.1 செயற்பாடுகளுக்கான திட்ட மிடல்
5.2 குறுங்கால நீணடகால திட்டமிடல்
5.3 ஆரம்பப் பாடசாலைக்கான முகாமைத்துவம்

6. குழந்தைமைய நிகழ்ச்சிகளைத் தூண்டுதல்

6.1 உடல் வளர்ச்சி செயற்பாடுகள்

6.2 இயக்க வளர்ச்சி செயற்பாடுகள்

6.3 அறிவு வளர்ச்சி செயற்பாடுகள்

6.4 மனவெழுச்சி வளர்ச்சி செயற்பாடுகள்

6.5 மொழி வளர்ச்சி செயற்பாடுகள்

6.6 சமூக வளர்ச்சி செயற்பாடுகள்

7. மதிப்பீட்டு முறைகள்

7.1 கற்றல் செயற்பாட்டைமதிப்பிடுவதற்கான கருவிகள்

உசார்த்துணை நூல்கள்

## பாடவிதான அறிமுகம்

பாடத்தலைப்பு : ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி

பாடக்குறியீடு : EDM 11013

வருடம் : 01

பருவம் : 02

பெறுமானப்புள்ளி : 02

மணித்தியாலங்கள் : 30

---

### அறிமுகம்

ஒரு குழந்தையின் வளர்ச்சியில் 3 முதல் 6 வயது வரையுள்ள பருவம் மிக முக்கியமானதாகும்.இவ்வயதிலுள்ள குழந்தைகளின் உடல் உள அறிவு வளர்ச்சிகளில் ஆர்வம் செலுத்துகின்றனர். இப் பருவத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் அனுபவங்களே அவர்களது பிற்கால வாழ்க்கைக்கு அடிகோலுகிறது. இதனை உணர்ந்து இப்பருவத்தினருக்கு ஏற்ற அனுபவக் கல்வியை அழிப்பது இன்றியமையாதது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்திட வேண்டும். குறிப்பாக பெற்றோர்களும், ஆசிரியர்களும் உணர்ந்திட வேண்டும்.

### நோக்கங்கள் (Objective)

1. பிள்ளைகளின் விருத்தி உளவியலினது தோற்றம் வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வர்.
2. ஆரம்ப கல்வி உளவியல் அதன் பிரிவுகள் பற்றி அறிவர்.
3. முன்பள்ளிக்கல்விப் பிரிவு பற்றி விளங்கிக் கொள்வர்.
4. சமகாலத்தில் முன்பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் பிரச்சினைகள் அதிகமாக உள்ளது என்பதை புரிந்து கொள்வர்.

### கற்றல் பெறுபேறுகள் ( Learning out comes)

1. மாணவர்கள் ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி பற்றி அறிந்து கொள்வர்.
2. ஏனைய துறைகளை விட ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி உளவியல் அவசியமானது என்பதைப் புரிந்து கொள்வர்.
3. ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி உளவியல் ஒவ்வொரு பருவத்தினருக்கும் உதவுவதை அறிந்து கொள்வர்.

4. மனிதனிடம் சமநிலை ஆளுமையை வளர்க்க ஆரம்பக் கல்வி அவசியம் என்பதை உணர்ந்து கொள்வர்.

**கற்பித்தல் முறைகள்** (Teaching and Learning methods)

இப்பாட அலகானது கற்றல் கற்பித்தல் முறைகளாக பின்வரும் முறைகளைக் கையாளுகின்றது.

விரிவுரைகள் (Lectures)

கலந்துரையாடல் (Group discussion)

சமர்ப்பித்தல் (Presentation)

**தொடர் மதிப்பீட்டு முறை** (Evaluvation Method)

மாணவர்களுக்கான பருவ இறுதி எழுத்துப்பரீட்சை மூலமாகவும் தொடர்ச்சியான கணப்பீடுகள் மூலமாகவும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

பருவ இறுதிப்பரீட்சை : 100 புள்ளிகள்

தொடர்கணிப்பீட்டு முறை : வகுப்பறைக் கருத்தரங்குப் பரீட்சைகள். (15+15)

---

# அத்தியாயம் - 01

## ஆரம்ப பிள்ளைப்பருவ பராமரிப்பும் கல்வியும்

அறிமுகம்

பிரதான சொற்கள்

நோக்கங்கள்

கற்றல் பெறுபேறு

1. ஆரம்பப் பிள்ளைப்பருவப் பராமரிப்பும் கல்வியும் - அறிமுகம்
   - 1.1 ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வியின் குறிக்கோளும் நோக்கமும்
   - 1.2 ஆரம்பப் பிள்ளைப்பருவப கல்விச் சிந்தனையாளர்களும் அவர்களது பங்களிப்பும்
   - 1.3 இலங்கையில் ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி நிறுவனங்கள்
     - அத்தியாயச் சுருக்கம்
     - பயிற்சி வினாக்கள்
     - பயன்படுத்தப்பட்ட நூல்கள்

**அத்தியாயம் பற்றிய சுருக்கம்**

ஆரம்பப் பிள்ளைப்பருவத்தினர் என்போர் 3 வயதுக்கும் 5 வயதுக்குமிடைப்பட்டோர் ஆவர். இளம் குழந்தைகள் அக்கறையுடன் விருத்தியாக்கப்படவேண்டிய உணர்வுகள், எண்ணங்கள், கற்பனைகள் முதலியவற்றைக் கொண்ட முழுமையான ஆட்களாகும் என்ற கருத்தினை ஆரம்பக் கல்வியியலாளர்கள் முன்வைத்தார்கள். இளம் வயதினர் நாள் முழுவதும் மேசைகளில் அமர்ந்திருப்பவர்கள் அல்ல. வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் பலதரப்பட்ட செயல்களில் சுதந்திரமாகச் செயற்படுபவர்கள் ஆவர். அத்தோடு இவர்களுக்கு பிள்ளைமையக் கல்வி அணுகுமுறைதான் பொருத்தமானதாகும். ஆரம்பப் பிள்ளைப்பருவத்தினர் அகவூக்கலுக்கு உட்பட்டவர்கள். கற்பதற்கு இயற்கையாகவே மிக்க ஆர்வமும் விருப்பமும் உடையவர்கள்.

-------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**திறவுச் சொற்கள்**

கல்விஉளவியல், அகவூக்கல், பிள்ளைமையக்கல்வி, வெளிப்புறச் செயற்பாடுகள்

**அத்தியாயத்தின் நோக்கம்**

- ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி பற்றி அறியச் செய்தல்

- கல்வி உளவியலில் ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி ஒரு பிரிவு என்பதை விளங்கச் செய்தல்
- ஆரம்ப கல்வி முக்கியத்துவத்தை உணரச் செய்தல்
- விளையாட்டுக்கல்வி, இசைக்கல்வியின் முக்கியத்துவம் பற்றி உணர்த்துதல்.

**கற்றல் பேறுகள்**

- உளவியலின் இயல்புகள், பரப்பு பற்றி அறிந்து கொள்வார்
- ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வார்
- முாணவர்கள் கற்பதனால் ஏற்படும் நன்மை, தீமைகளை அறிந்து கொள்வார்
- எதிர்காலத்தில் கல்வியின் அவசியத்தை உணரச் செய்தல்

---

## 1.1 ஆரம்பப் பிள்ளைப்பருவப் பராமரிப்பும் கல்வியும் - அறிமுகம்

Education என்ற ஆங்கிலச் சொலுக்காக ‘‘கல்வி’’ என்ற சொல் தமிழில் பயன்படுத்தப் படுகிறது. Education என்ற ஆங்கிலச் சொல் ‘‘Educate’’ என்ற இலத்தீன் மொழி சொல்லின் திரிபாகும். ‘‘Educate’’ என்ற இலத்தீன் சொல் அப்பால் கொண்டு செல்லுதல் அல்லது வெளிக்கொண்டு வருதல் என பொருள்படும். மெய்யியல் பரந்தது, ஆழ்ந்தது, நமக்கு மெய்யறிவை அளிக்க வல்லது நமது வாழ்க்கை பற்றியும் நாம் வாழும் உலகம் பற்றியும் பலவித அறிவியல் அறிவினை ஒருமைப்படுத்தவும் தொடர்புபடுத்தி முழுமை பெற்ற அறிவாகும் தன்மையை அது கொண்டது.(சந்திரசேகரம்,2011) கல்வி எனும் சொல்லுக்கு கல்லுதல், தோன்டுதல், கிளறுதல் எனும் கருத்துக்கள் உள்ளது.

‘‘மனிதர்களின் உடல், உள்ளம் ஆன்மா ஆகியவற்றின் இயற்கை பேறுகளை வெளிக்கொண்டு வந்து விளக்கம் பெறச் செய்வதே கல்வி’’ என காந்தியடிகள் கூறினார்.‘‘கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டீஸ் ஒவ்வொரு மனிதனும் தன்னை அறிதல் வேண்டும் என கூறி இதற்கு ஏற்ற கருவிகள் கல்வியே தத்துவமே என கொள்வார்.ஆங்கில கவிவாணர் வில்லியம் வேட்ஸ்வர்த் ‘‘மனிதத்தன்மையினை மனிதன் பெற உறுதுணையாக அமைவது கல்வி’’ என்று வரையறுக்கின்றார் (சந்திரசேகரம்,2002). ஆர்.எல்..பீட்டஸ் கல்வியின் மூலம் ஆழமான அறிவையும் விளக்கத்தையும் பெற்றுக்கொள்ளலாம் என்கின்றார். குறிப்பாக றோமர் (Roemer) என்பவர் கல்வி பற்றி கூறும் போது ‘‘சமூகத்தின் தொடர்பாடலை இலகுபடுத்தும் முகமாக குடும்பம், கலாச்சாரம், குழு, சமூதாயம் என்பவற்றின் வெற்றிகரமான அங்கத்தவர்களாவதற்கு சமூதாயத்தின் விழுமியங்கள்,

நம்பிக்கைகள், அறிவு, குறியீடு களானான கருத்துக்கள் ஆகியவற்றைத் தமது சமூதாய அங்கத்தவர்களுக்கு கடத்தும் செயன்முறையே கல்வியாகும் எனக் கூறுகிறார் (செல்வராஜா.மா.2009).

**கல்வி உளவியலின் முக்கியத்துவம்.**

கல்வி உளவியல் (Education Psychology)

ஒரு மனிதன் பிறந்தது முதல் பல விடயங்களை அறிய ஆரம்பித்தான். இவ்வாறு ஆரம்பித்தது முதல் அவனது தேடல் நாட்டம் ஒரு துறையில் மட்டுமல்ல பல துறைகளில் ஏற்பட்டது. வேட்டைபுரிதல், பண்டமாற்று முறை, சிறு பயிர் நடல், போன்ற பல செயற்பாடுகளின் மூலம் தனது தேவைகளை நிறைவு செய்தான். சில வேளை ஒன்றையும் இன்னும் ஒன்றையும் கொண்டு புதியவற்றைக் கண்டுபிடித்தான். இங்குதான் கல்லுதல் அல்லது தோண்டி எடுத்தல் கல்வி என பரிநாமம் பெறுகிறது. இருப்பதை தோண்டி எடுத்தல், இல்லாததைத் தோண்டி எடுத்தல் எனப்படுகிறது. இருப்பதைப் பெறுவதற்கு தனது சுயத்தை (Self) பயன்படுத்தினான். மாறாக இல்லாததைப் பெறுவதற்கு கருவியாக மற்றவர்களின் உதவியை நாடினான். மற்றவர்கள் எனும் போது துறை சார்ந்த கைவினையாளர்களினதும், புலமையாளர்களினதும உதவியை நாடினார்கள். இதில் இருந்துதான் கல்வியின் ஆரம்பம் ஏற்படுகிறது.

இன்று நாம் கூறும் முறைசார், முறைசாரா, முறையில் கல்வி முறைகள் அன்று பெரிதாக வளராவிட்டாலும் அதன் ஆரம்பம் பழங்குடி மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்டுள்ளது. பழங்குடி மக்களினது சமூகம்சார் சிந்தனைகள் இதற்கு அடிப்படையாக இருந்துள்ளன என்பதை தொல்காப்பியம் புறநானூறு, அகநானூறு போன்ற தமிழ் இலக்கியங்களில் இருந்து அறியமுடிகின்றது. அத்தோடு உலகம் எவ்வாறு செயற்படுகின்றதோ அதற்கு ஏற்ப இசைந்து செல்லலே அறிவன்ற கருத்து அறத்தை வலியுறுத்தும் திருவள்ளுவரால் எடுத்துக்கூறப்படலாயிற்று. மனிதச் செயற்பாடுகள் அனைத்துக்கும் அகம் அல்லது சுயம் அடிப்படை என்ற கருத்து மேலோங்கிய காலம் பழங்காலமாகும். இச்சிந்தனையில் இருந்து அகச் செயற்பாடுகள் பற்றிய தேடல் வளர ஆரம்பித்தது. இதற்கு மெய்யியலோடு உளவியல் சேர்ந்து இருந்தது. பிளேட்டோவின் மாணவரான அரிஸ்ரோட்டில் முதலில் எழுதிய ‘‘ஆன்மாவின் இயல்புகள்’’ எனும் நூலே உளவியலின் முதல் நூலாக கருதப்படுகின்றது.

கல்வி உளவியலானது பிரயோக உளவியல் பிரிவாக காணப்படுகின்றது. கல்வி உளவியலானது கல்வி, உளவியல் என்ற இரு விடயங்களை கொண்டுள்ளது. கல்வி தொடர்பான பிரச்சினைக்கு அல்லது இடர், சிக்கல்களுக்கு உளவியலின் விதிகள் உதவியுடன் தீர்வு காண்பதே கல்வி உளவியலாகும். அத்தோடு இது கற்றலும் பயிற்றலுமான உளவியல் எனவும் கருதப்படுகின்றது. ஆண்டெர்ஸன் (Anderson) கல்வி உளவியல் பற்றி

கருதும் போது கல்வி உளவியலானது அறிவினைத் தரும் விரிந்த ஒரு பகுதி ஆய்வுக்குரிய ஒருதுறை, அறிவு தேங்கும் இடத்திலிருந்து சமூக நிலை வரை விதிகளையும் கொள்கைகளையும் புகுத்தி ஆராயும் ஒரு துறை, ஆராயும் களம், தொழில் நுணுக்கதிறன் கருவிகள் ஆகியன அடங்கிய ஒன்று. இ.ஸ்கின்னர் என்பவர் (E.Skinner) கல்வி உளவியல் பற்றி கூறும் போது கற்றல் கற்பித்தலைச் செய்கின்ற ஓர் உளவியல் பிரிவே கல்வி உளவியலாகும் என்றார். வூல்வோர்க் (Woolfolk) என்பவர் கல்வி உளவியல் என்பது பற்றி கூறும் போது கற்றல் கற்பித்தல் செயன்முறைகளை விளங்கிக் கொள்வதற்கும் அச் செயல்களை விருத்தி செய்வதற்குமான நுட்ப முறைகளை விளங்கிக் கொள்வதற்குமான நுட்ப முறைகளை வலியுறுத்துகின்றது என்றார். மேலும் லிண்ட்கிறின் (Lindgren) என்பவர் கல்வி உளவியல் பற்றி கூறும் போது கற்பவர், கற்றல் செயன்முறை கற்றல் சந்தர்ப்பங்கள் ஆகிய மூன்று அம்சங்களையும் உள்ளடக்கியது என அவர் சுட்டிக் காட்டுகிறார்.

மேற்கூறிய வரைவிலக்கணங்களிலிருந்து தொகுத்து நோக்கும் போது கல்வி உளவியலானது கற்றல் கற்பித்தல் செயன்முறையை திறனுள்ளதாக மாற்றுவதற்கும், கல்வித் திட்டத்தை செயற்படுத்துவதாகும். ஆசிரியர் மாணவர்களது உடல், உள நலம் பெற்று வாழவது பற்றியும் மதீப்பீடு கற்பித்தலின் போது வகுப்பறை நிர்வாகம் பேணுதலில் ஏற்படக் கூடிய பல வகைப்பட்ட பிரச்சினையை தீர்வு காணும் வகையில் மாணவர்களது தேவைகளை அறியவும் கல்வி உளவியல் உதவுகின்றது. உளவியலின் படியே உண்மையான கல்வி அமைய வேண்டும் என்பதில் கீழைத்தேய சிந்தனை மரபில் ரவீந்திரநாத் தாகூர், காந்தியடிகள் கூறினார்கள். அதே போல் மேலைத்தேய சிந்தனை மரபில் ரூசோ, ஜான்டுயி, மொண்டிசோரி, பிரோபெல் போன்றோர்கள் கூறினார்கள்.

**சிறந்த கற்பித்தலின் பண்புகள்**

கல்வி கோட்பாடுகள், கல்வி உளவியல், கற்பித்தல் நுட்பங்கள் போன்ற வற்றின் வளர்ச்சியினூடாகச் சிறந்த கற்பித்தலுக்குரிய பண்புகளாக கீழ்வருவன காணப்படுகின்றன.அதாவது மாணவரின் நற்பண்பு மற்றும் தன்னிலை எண்ணக்கரு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு துணை செய்வதாயிருத்தல். வாழ்க்கையின் தரத்தையும் கல்வியின் தரத்தையும் முன்னெடுப்பதாய் அமைந்திருத்தல். தமது கற்றலை மாணவர் மேலும் முன்னெடுத்துச் செல்வதற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல். கற்பித்தல் சுவையும், ஆவலைத் தூண்டும் வகையில் அமைத்தல். தனியாள் ஒவ்வொருவரையும் நோக்கி கற்பித்தலை மேற்கொள்ளல். கற்றலின் தேவையை மாணவரிடத்து உணரச் செய்தலும் கற்றலை வளப்படுத்தலும். அறிகை நிலை, எழுச்சி மற்றும் உடலியக்க நிலைகளில் ஆக்க விளைவுகளை உருவாக்கும் விளைவு கொண்டதாயிருத்தல். மாணவரிடத்துச் சோர்வு தோற்றம் பெறும் வேளை அதனைத் மாற்றுவதற்குரிய

உபாயங்களைக் கடைப்பிடித்தல். மாணவர், ஆசிரியர் மற்றும் கற்கும் பொருள் போன்றவைகளுக்கு இடையே நல்ல தொடர்பு காணப்படுதல். கற்பித்துக் கொண்டிருக்கும் பொழுதே குறுவினாக்களைக் கேட்டல். மாணவர்களிடம் ஒத்த உணர்வு உடல்மொழி மதிப்பளித்தல் மற்றும் ஊக்கப்படுத்துதல். மாணவர்களை வலுவூட்டுதல். மாணவாகளுக்கு தன்னம்பிக்கையை கட்டியெழுப்புதல்.இவ்வாறான கற்றல் கற்பித்தலின் நிறைவிலே மாணவரது உள்ளத்திலே பயனுள்ள கற்றலை மேற்கொண்டோம் என்ற திருப்தி முக்கியமானதாகும்.

## ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வியின் இன்றியமையாமை

ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி என்பது 3- 5 வயதுடைய பிள்ளைகளுக்கு அவர்களது உள, உடல், மனவெழுச்சி, மொழி, சமூக விருத்தியை ஊக்குவிப்பதற்காக தோற்றுவிக்கப்பட்டதாகும். இதனை கல்வியியராளர்கள் பாலர் பாடசாலை, முன்பாடசாலை, முற்பட்ட கல்வி குழந்தைப்பாடசாலை போன்ற பதங்களால் அழைக்கின்றனர். பிள்ளையின் சரியான ஆளுமை வளர்ச்சிக்கு ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்விஇன்றியமையாததாகும்.இன்று இக்கல்வியானது எல்லாராலும் முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது. இவ் ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வியானது ஆரம்ப இரண்டாம் நிலைக்கல்வியில் பாரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமையும். ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வியில் பெறப்படும் மனப்பாங்குகளும் பழக்கவழக்கங்களும் ஆழமாகப்பதிகின்றன. இப்பருவத்திலேயே ஆராயும் ஊக்கமும் ஆக்கமும் வினைத்திறனுடையதாகும். ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வியின் மூலம் பிறருடனான சமூகத் தொடர்புகள் அதிகரிகப்பதோடு ஆராயும் ஊக்கமும் ஆக்கத்திறனும் அதிகரிக்கின்றன. மேலும் தொடர்பாடல் திறனாக மொழி விருத்தியடைகின்றது. பொதுவாகக் கூறுவோமாயின் ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வியானது ஆராயும் ஊக்கத்தின் விருத்திக்கும் சிந்தனைத்திறனுக்கும் கோட்பாடு உருவாக்கத்திற்கும் மொழி விருத்திக்கும் முக்கியமான பருவமாகும்.இப்பருவத்தில் ஏற்படும் விருத்தியாகும் சமூகத்திறன்களே எதிர்காலத்தில் சிறந்த பொருத்தப்பட்டைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்றது.இவ் ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வியினைபெறுவதற்கு வசதியற்ற பிள்ளைகள் எதிர்காலத்தில் பல சவால்களை எதிர் நோக்குகின்றார்கள்.

## 1.2 ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வியின் குறிக்கோளும் நோக்கமும்

முன்பள்ளிக் கல்வியின் நோக்கம்.

எந்த ஒரு நிறுவனத்துக்கோ, பாடசாலைக்கோ, தொழிற்சாலைகளுக்கோ தெளிவாக வரையறுக்கப்பட்ட குறிகோள்களும் நோக்கங்களும் உள்ளன. அதே போன்று முன்பள்ளிகளுக்கும் இருத்தல் வேண்டும். பிள்ளையின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்குத் தேவையான நோக்கங்கள்,

குறிக்கோள்கள் என்பன பற்றி எல்லா முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியர்களும், கல்வியாளர்களும் அறிந்திருத்தல் அவசியம்.

முன்பள்ளியின் முக்கியமான பங்குகளாக: குழந்தையின் கற்கும் அனுபவத்தைப் பரந்து விரிந்ததாக ஆக்குதல். அவர்களை மன உறுதி கொண்டவர்களாக ஆக்குதல். தொடர்ந்து கற்பதற்கு ஆர்வம் கொண்டவர்களாக ஆக்குதல். என்பனவாகும்.

**ஆரம்பப் பிள்ளைப் பருவப் பள்ளியின் முக்கியத்துவம்**

ஒரு குழந்தையின் ஆரம்பகாலப் பருவம் மிக விரைவான வளர்ச்சியினையும், விருத்தியையும் கொண்டதாய் அமைந்துள்ளது. அவர்கள் முன்பள்ளிக்கு வருகின்ற போது ஏற்கனவே அவர்களது, குடும்பம்,நண்பர்கள்,உறவினர்கள்,அயலவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட அனுபவங்களுடன் வருகின்றார்கள். முன்பள்ளியில் அவர்கள் ஏனைய குழந்தைகளிடம் உறவாடுகின்றனர். இதன் மூலமும், சேர்ந்து விளையாடுவதன் மூலமும் தொடர்ந்து அனுபவத்தை வளர்த்துக் கொள்கிறார்கள். அதே வேளை அவர்கள் மிக முக்கிய அனுபவங்களை, நமது சமூகத்தில் இருந்தும் குடும்பத்தில் இருந்தும் தொடர்ந்தும் பெற்றுக் கொண்டே இருக்கின்றனர். அதனால் முன்பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளது பெற்றோர்களுடன் நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

**ஆரம்பப் பிள்ளைப் பருவப் பாடசாலையின் இலக்குகள்**

பொதுவாகவே முன்பள்ளிகளின் இலக்குகள் முக்கியமானதாகும். ஏனெனில் குழந்தைகளை ஊக்குவித்தல். மகிழ்ச்சியையும் பாதுகாப்பையும் வழங்குதல்.குழந்தைகளது மனவெழுச்சி, சமூகம், உடல் வளர்ச்சி, ஆக்கத்திறன், அறிவு வளர்ச்சி என்பவற்றை வளர்த்தல். குழந்தைகளின் நலன்களை பேணுதல்.குழந்தைகளை உறுதியான மனநோக்கு கொண்டவர்காளாக வளர்த்தல். சுதந்திரமாக கருத்தக்களை சொல்வதற்கு ஏற்ற ஒரு இடமாக பேணுதல். குழந்தைகள் விளையாடுவதற்கு ஏற்ற வசதிகளை வழங்குதல்.சூழலை மதிப்பவர்களாகவும் அதை விரும்புபவர்களாகவும் சூழலைப் பாதுகாப்பவர்களாகவும் குழந்தைகளை ஆக்குதல். குழந்தைகள் தங்களது கருத்துக்களையும், உணர்வுகளையும் பல்வேறு வழிமுறைகளில் வெளியிடுவதற்கு ஆற்றல் கொண்டவர்களாக ஆக்குதல். புலன்கள் வாயிலாக அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதான மனோரம்யமான பாதுகாப்புடன் கூடிய சூழலை வழங்குதல். அன்றாட செயற்பாடுகளுக்கும் நற்பண்பு, நல்லொழுக்க நடத்தைக் கோலத்தை விருத்தியடையச் செய்யக் கூடியதான, விருப்பத்துக்குரிய கதை கூறப்பழகுவதற்கு சந்தர்ப்பம் அளித்தல்.விரும்பத்தக்க சுகாதாரப் பழக்கவழக்கங்களை பழக்கப்படுத்திக் கொள்வதற்கு வழிகாட்டுதல். நற்குணங்களை வளர்ப்பதற்கு ஏற்ற சூழலை வழங்குதல். தினசரி கடமைகளை ஒழுங்காகச் செய்யும் திறனை விருத்தி

செய்தல்.சவால்களுக்கு முகங்கொடுக்கும் ஆற்றலைப் பெருக்குதல். பிள்ளைகளுக்கு ஆரம்பப் பிள்ளைப் பராயத்தினை விருப்புடனும் மிக்க மகிழ்ச்சியுடனும் கற்பதற்கான வசதிளை அளித்தல். போன்றவை முக்கியமானதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

## ஆரம்பப் பிள்ளைப் பருவப் பாடசாலையின் குறிக்கோள்கள்

ஆரம்பப் பிள்ளைப் பருவப் பள்ளியானது நியம வரன்முறையான பாடசாலை அல்ல. அது ஒரு இயற்கைக்கூடம், அழகியல்மாடம், சிறுவர் விளையாட்டுத்திடல், மகிழ்ச்சியோடு ஓடி விளையாட வாருங்கள் எனப்பிள்ளைகளை அழைப்பது போல அவை இருத்தல் வேண்டும்

ஆரம்பப் பிள்ளைப் பருவப் பள்ளிச் சிறுவர்களின் விருத்திகளை வளர்த்தெடுப்பதில் முன்பள்ளி ஆசிரியர்களின் முகாமைத்துவம் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதை தெரிந்துகொள்க.

இச்செயற்பாடுகளில் ஏற்படும் சவால்களை பட்டியற்படுத்திய பின் அதனை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் எனத் தெரிந்துக்கொள்க. மகிழ்ச்சியாகவும், சுதந்திரமாகவும் செயற்பாட்டுடன் கூடிய அனுபவங்களை பிள்ளைகள் பெற்றுக் கொள்ளல். நற்பண்பு, நல்லொழுக்கம் போன்ற நடத்தைக் கோலத்தைக் கட்டியெழுப்புதல். உடல் விருத்திக்கு வேண்டிய சந்தர்ப்பத்தினை வழங்கல். அறிவு ஆற்றலை விருத்தி செய்தல். தன்னம்பிக்கையை ஏற்படுத்தல்.நற்சுகாதார பழக்கங்களை ஏற்படுத்தல். தினசரிக் கடமைகளை ஒழுங்காகச் செய்யும் திறனை விருத்தி செய்தல். பிள்ளை சூழலுக்கு ஏற்ப தம்மை இயைபுபடுத்துவதற்கு உதவுதல.

## பாடசாலைகள்

சமூகமயமாக்கள் நிறுவனங்களின் ஒரு பிரிவாக பாடசாலைகள் காணப்படுகின்றன. இப்பாடசாலைகள் கீழ்வருமாறு வகைப்படுத்த முடியும்

- முன்பள்ளிப் பாடசாலை
- ஆரம்ப பாடசாலை
- இரண்டாம் நிலை பாடசாலை
- மூன்றாம் நிலை பாடசாலை :
  பல்கலைக்கழகங்கள்
  தொழில்நுட்பக் கல்லூரிகள்
  கல்விக் கல்லூரிகள்
  கல்விக்கலாசாலைகள்

உலகக் கல்வியை வழங்குகின்ற நிறுவனங்களாக பாடசாலைகள் விளங்குகின்றன.கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளைத் தனது பொறுப்பாக ஏற்றுக் கொண்ட நிறுவனங்களாகும். புாடசாலைகள் ஊடாக வினைத்திறன் பொருந்திய உற்பத்தியினை மேற்கொள்ளக் கூடிய பிரஜைகளை உருவாக்குகின்ற செயற்பாடுகளே நடைபெறுகின்றன.சமூக உறுப்பினர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு தேவையான அறிவையும் (Knowledge), திறன்களையும் (Skills), மனப்பாங்கு (Attitude) களையும்,

விழுமியங்களையும் (values), தன்னம்பிக்கைகளையும் (Confidete), வழங்குகின்ற ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்களே பாடசாலைகளாகும். முறைசார் மற்றும் முறைமையில் அனுபவங்களாலான ஒரு கலவை வாயிலாகப் பிள்ளைக்கேற்ப உரிய வாழ்வை நோக்கிய பயணத்திற்கு வழிகாட்டுகின்ற நிறுவனங்களே பாடசாலைகளாகும்.

**பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்புவதன் நோக்கம்**

அறிவுடையராக்குதல்

திறனும் ஆக்க சிந்தனையும் உடையவராக்குதல்

சிறந்த ஆளுமை விருத்திப் பண்புடையோராக்குதல்

சுய நம்பிக்கை உடையோராகுதல்

நேர் மனப்பான்மையை வளர்ப்பதற்கு

சமூகத்தால் சேர்க்கப்பட்ட ஒழுக்கமும் ஒழுங்கும் உடையோராக்குதல்

இரசனை உணர்வுடையோராக இருத்தல்

**பாடசாலைக்கு பிள்ளைகள் செல்லாததற்கான காரணங்கள்**

உள ஊனமுற்றோர்

அகதிகளாக வாழ்வோர்

ஓன்றை பெற்றோர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்

தீவிர நோய்க்குட்பட்டோர்

வறிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள்

கல்வி அறிவு குறைந்த அல்லது அற்ற பெற்றோரின் பிள்ளைகள்

**பிள்ளைகளின் இடைவிலகலுக்கான காரணிகள்**

கல்வியில் வெறுப்பு
ஆசிரியரில் வெறுப்பு
நண்பர்களின் நெருக்கீடு
பெற்றோரின் அறிவீனம்
தண்டனை
வறுமை

**பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்கள்**

குறைவான அடிப்படை வசதி (நீர், சுகாதாரம், கட்டிடங்கள்)

பரீட்சை அழுத்தம் , நெருக்கீடு

குறைவான கற்றல் அடைவுகள்

திருப்பியற்ற மாணவர் நல சேவைகள்

சிறுவர்கள் பாதிக்கப்படல் அல்லது துஸ்பிரயோகத்திற்கு உட்படல்

அடிமைப்படுத்தல் அல்லது மட்டம் தட்டல்

நேர்மையற்ற ஆசிரியர்கள், அதிபர்கள்

போசாக்கு குறைந்த பிள்ளைகள்

**கற்றல் இடர்பாட்டுக்கான காரணங்கள்**

பரம்பரைக் காரணிகள் தாக்கம் செலுத்துதல்
ஆசிரியரால் வகுப்பறையில் பயன்படுத்தப்படும் வினைத்திறனற்ற கற்பித்தல் முறைகள்
பிள்ளைகள் மீது பற்றின்மை
கற்றல் திறன் விருத்தியின்மை
பிள்ளைகளின் பிறப்புக்கு முன்னதான காரணிகள் (தாய் பயன்படுத்தும் மருந்துகள், தாய்க்கு ஏற்படும் தொற்று நோய்கள், கடுமையான காய்ச்சல்)
பிறப்பிலுள்ள பிரச்சினைகள் - மூளையில் ஏற்படும் காய்ச்சல்
நரம்புத் தொகுதி மாற்றம்
முன்பள்ளி பாடசாலைக்கு செல்லாமை
விபத்துக்கள்
மூளைத்தாக்கங்கள்
ஆபத்தான பதார்த்தங்களை உட்கொள்ளல் - காரீயம்,மை, மண்ணெண்ணை

**விசேட பாடசாலைக்கு எதிரான கருத்துக்கள்**

விசேட பள்ளிகள் மீது ஒரு அழியாத கறை உண்டு.

விசேட பள்ளிகளில் சேர்க்கப்பட்ட பின்னர் பிள்ளைகளிடம் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டது என்பதற்கு சான்றுகள் எளிதாக இல்லை.

இப்பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகள் சேர்க்கப்பட்டிருப்பதால் பெற்றோர்கள் அதிகமாக கவலைப்படுவதுண்டு.

இப்பாடசாலைகளின் கலைத்திட்டம் என்பது வேறுபாடானது.

சாதாரண பிள்ளைகளோடு இப்பிள்ளைகள் தொடர்பு கொள்வதற்கான சந்தர்ப்பம் குறைவு அல்லது மறுக்கப்படுகின்றது.

விசேடப் பாடசாலைக் கல்வியைப் பெறுவதற்கு பிள்ளைகள் வேறு இடங்களுக்கு செல்வதால் தமது நண்பர்களோடு கலந்து கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை இழக்கின்றனர்.

விசேட கல்வியில் தேர்ச்சி பெற்ற பிள்ளைகள் சாதாரணப் பாடசாலைக்கு வருவதற்கான சந்தர்ப்பம் குறைவு.

இடவசதி தொடர்பான பிரச்சினை.

வள ஒதுக்கீடு தொடர்பான சிக்கல்கள்.

**கற்றல் இடர்பாடுடைய ஒரு பிள்ளையின் இயல்புகள்**

உருவங்களைப் பார்ப்பதன் மூலமே கற்பவனாக இருப்பான்.

மாணவர்கள் தாங்களாகவே கற்காத நிலை.

தகவல்களை விளங்கிக் கொண்டது போல் தோற்றமளித்தாலும், பரீட்சைகளில் சரியாக விடையளிப்பதில்லை.

பார்த்தல் அல்லது கேட்டல் தொடர்பான பிரச்சினைகளுடன் காணப்படுதல்.

தனது செயல்களில் ஏற்ற இறக்கத்தை வெளிப்படுத்தல்.

தான் கற்ற திறன்களை பொதுமைப்படுத்த முடியாத நிலையில் இருத்தல்.

எண்கணிதத் தரவுகளை ஒழுங்குப்படுத்த முடியாதிருத்தல்.

மென்மையான உணர்வுகளான அன்பு, நட்பு, கூட்டுறவு, ஏமாற்றம், துக்கம், சந்தோசம் போன்றவற்றை புரிந்துக் கொள்ள முடியாதவர்களாக இருப்பர்.

குறிப்பெடுக்க முடியாதவர்களாகவும் சீரற்று எழுதும் இயல்பைக் கொண்டவராகவும் இருப்பர்.

ஒரு விடயத்தைப் பூர்த்தி செய்யத் தேவையான நேரத்தைப் பற்றியோ நேரத்தின் பெறுமதி பற்றியோ புரிந்துக் கொள்ளாதவராகக் காணப்படுவர்.

சுவரொட்டிகளையோ சமிங்சைப் பலகைகளையோ விளங்கிக் கொள்ளத் தவறிவிடுவார்கள்.

## 1.3 ஆரம்பப் பிள்ளைப்பருவ கல்விச் சிந்தனையாளர்களும் அவர்களது பங்களிப்பும்

**பிளேட்டோ**

**அறிமுகம்**

மேலைத்தேய சிந்தனை மரபில் சோக்ரடீஸின் மாணவராகவும் அரிஸ்டோட்டிலின் ஆசிரியராகவும் பிளேட்டோ காணப்படுகிறார்.இவர் 36 க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இந்நூலில் "The Republic" (குடியரசு) எனும் நூல் மிகப் பெரிய படைப்பாகவுள்ளது. இவர் அந்நூலில் மனிதன், சிந்தனை, சமூகம் பற்றி ஆராய்ந்தார். இக்குடியரசில் 10 அத்தியாயங்கள் காணப்படுகின்றது. ஒவ்வொரு அத்தியாயமும் உரையாடல் வடிவில் உள்ளதை அவதானிக்கலாம். இவரின் காலத்தில் நீதிப்பிரச்சினை இருந்தது. இதனால் இவர் அதைப் பற்றி ஆராய்ந்தார். பிளேட்டோ தனது சிந்தனைகளில் எல்லாம் கருத்துவாதத்தைப் போதித்தார். உரையாடல் வடிவில் அமைந்துள்ளன இந்நூலை நாடக பாணியில் உருவாக்கி உள்ளார். இந்த உரையாடல்கள் சாதாரண உரையாடல்களில் இருந்து வேறுபட்டவை. சோக்ரடீஸின் தத்துவார்த்த உரையாடல்

(Interlaxual Talk) பண்புகள் எல்லாம் இந்நூலில் பிரதிபலிக்கின்றது. பிளேட்டோவின் உரையாடல்கள் எல்லாம் மிகவும் மதிக்கத்தக்கதாகவும் ஆழமானதாகவும் அமைந்து காணப்பட்டது. மிகவும் எளிமையான மொழிநடைகள் மொழிபெயர்ப்பில் அமையாவிடினும் விவாதிக்கப்படும் விடயமானது மிகவும் முக்கியமானதாகும். இன்றைய அறிஞுர்கள் வியக்கத்தவகையில் பல அம்சங்களை கருத்தியல்ரீதியாக பிளேட்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

''குடியரசு'' எனும் நூல் கருத்தியல் தத்துவங்களுக்கு மூலமாக விளங்குகின்றது. மனிதனது வாழ்வின் அர்த்தத்தை (Meaning of life) பல கதாபாத்திரங்கள் மூலம் எடுத்துக்காட்டும் சிறந்த உரையாடலாகக் கருதப்படுகிறது. மனிதன் பற்றியும் மனிதனின் இயல்பையும் சமூக அமைப்பையும் வெளிக்காட்டும் நூல் என்றும் அந்நூலைக் குறிப்பிட முடிகின்றது. இந் நூலில் காணப்படும் உரையாடல்களை நான்கு பெரும்பகுதிகளாக பிரித்து நோக்கலாம். பிளேட்டோவின் ஒழுக்கவியல் கருத்துக்கள், அரசியல் கருத்துக்கள், இரசனையியல் கருத்துக்கள், பிளேட்டோவின் கல்விக் கருத்துக்கள் இவ்வாறான கருத்துக்களில் இக்கட்டரையானது பிளேட்டோவின் கல்விக்கருத்துக்களையும் இரசனையியல் கருத்துக்களையும் வெளிக் கொணர்வதாக அமையப் பெற்றுள்ளது.

பிளேட்டோவினுடைய கருத்துக்களில் கல்வி பற்றிய கருத்துக்கள் அவரது சட்டம் குடியரசு போன்ற நூல்களில் வெளிப்படுத்தப்படுகிறது. குழந்தைகளினுடைய வளர்ப்பு முறை, கல்வி செயற்பாட்டுடன் இணைந்த இணைப்பாடவிதான செயற்பாடுகள், அழகியற்கல்வி, வாழ்க்கை நீடித்த கல்வி, ஆண் பெண் கூட்டுக்கல்வி முறை, தேடிக்கற்றல் கொள்கை, ஆசிரியர்வாண்மை, கல்வியில் வர்க்க ரீதியான வேறுபாட்டுத் தன்மை போன்றவை தொடர்பாகவும் பல கருத்துக்களை சுட்டிக்காட்டினார். அதேபோல் தனது கல்வி தொடர்பான கருத்தினை துக்களானது குடியரசு நூலின் இரண்டாம், மூன்றாம் அத்தியாயம் மற்றும் நான்காம், ஐந்தாம் அத்தியாயங்களிலும் கல்வி தொடர்பான கருத்துக்களை குறித்துக் காட்டுகின்றது.

கல்வி கற்றவர்கள் பொருளாதார நிலையில் உயர்வதோடு பண்பாட்டு கலாசார நிலையிலும் விருத்தி பெறுவர். தத்துவஞானிகளை, கல்வி மூலம் வர்க்க வேறுபாடுகள் ஒழிய வேண்டும், அதேபோல் மனிதனின் அறிவு வளர்ச்சி மூலம் சமூகம் வளம் பெறும், எனும் கருத்தினையும் இவர் வலியுறுத்தினார். கல்வியே வாழ்க்கையின் அடித்தளம் என்று கூறிய பிளேட்டோ, அரசே கல்வியின் ஏகபோக உரிமையை ஏற்கவேண்டும் என்ற கருத்தினை முதன்முதலாக வலியுறுத்தினார். இன்று ஒவ்வொரு அரசும் தனது நாட்டிலுள்ள வளத்தை அபிவிருத்தி செய்ய முற்படுகின்றது. அதற்கு கல்வியே அடிப்படை தேவையாக விளங்குகின்றது. (சந்திரசேகரம்,ப., 2011) இதனால் கல்வி உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும் என்றும். பொதுக்கல்வி எல்லோருக்கும் உரியது என்றும் மாணவர்களின் உளம் சார்ந்த அம்சங்களை வெளிக் கொணர்தல் ஆசிரியர்களின் கடமையாகும் என வலியுறுத்தினார். கல்வி மனிதனின் சமநிலை ஆளுமையை வளரச் செய்ய வேண்டும். அதேபோல் பகுத்தறிவையும் உண்மையான நம்பிக்கை யையும் கல்வியின் மூலம் அடைபவன் முதியவயதை அடைந்தாலும் ஆனந்தமாயிருப்பார்

என்று பிளேட்டோ கூறுகிறார். மேலும் கல்வி கற்பதற்குரிய இயல்பும் சக்தியும் ஒவ்வொருவருக்குள்ளும் ஏற்கனவே இருக்கிறது என்பதுதான் அவரது வாதம் (குடியரசு. ப.518). கல்வி என்பது குழந்தைகளிடம் இயற்கையாக அமைந்துள்ள இயல்பின் முதல் உணர்வுக்கு ஏற்றவாறு பழக்கங்களைக் கொடுக்கும் முயற்சிதான் என்று நான் கருதுகிறேன். குழந்தைகளுக்கு ஆரம்பக்கல்வியானது வேடிக்கை விளையாட்டாகவே கற்பிக்கப்பட வேண்டும். ஆரம்பத்தில் அறிவு நூல்களைக் கட்டாயப்படுத்திச் சொல்லிக் கொடுத்தால் அவை குழந்தைகளின் மனதில் பதிவதில்லை என்றார்.

மேலும் இவரது குடியரசு நூலிலுள்ள 169 -171 பக்க உரையாடல் வரிகளை அவதானிக்கும்போது இவற்றைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

சாக்ரடீஸ் : எனதருமை அதைமாந்தஸ், நாம் கொடுக்கும் சட்ட திட்டங்கள் அனைத்தும் அற்பமானவையே. புல, மிக உயர்ந்த கருத்துக்கள் போலத் தோன்றினும், உலக வசனப்படியான, ஒரு பெரிய செயலைக் குறித்து மட்டும் கவனம் செலுத்தப்படின், அவை அவ்வாறு தோன்ற, இதை பெரிய காரியம் என்று நான் குறிப்பிடமாட்டேன் நமது நோக்கத்துக்குப் போதுமானது என்று வேண்டுமானால் கூறலாம்.

அதைமாந்தஸ் : அது தான் என்ன?

சாக்ரடீஸ் : கல்வியும் வளர்ப்பும் தான். நமது குடிகள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டு, அறிவுள்ளவர்களாக வளர்ந்தால் இவை யாவற்றையும், நான் சொல்லாமல் விட்ட மற்றைய காரணங்களையும் குறித்து , தங்கள் வழியைத் தாங்களே அறிந்து கொள்வார்கள். உதாரணமாக, திருமணம், பெண்களை கொல்லுதல், பிள்ளைப்பேறு முதலிய யாவும் ''நண்பர்கள் எல்லாவற்றையும் பொதுவாக வைத்துக் கொள்வர்'' என்ற பழமொழி கூறுவது போல், ஒரு பொதுவான தத்துவ அடிப்படையினின்றும் தொடர்வதாகத் தெரிந்து கொள்வர்.

அதைமாந்தஸ் : அதுவே அவர்களை தக்க பாதையில் அமைப்பதாகும்.

சாக்ரடீஸ் : அரசாங்கம் நன்முறையில் தொடங்கினால், ஒரு சக்கரம் போன்று தன் விசையைப் பெருக்கிக் கொண்டு இயங்கும். ஏனெனில் நல்ல வளர்ப்பும், படிப்பும் நல்ல நல்ல திட்டங்களை வேரூன்றச் செய்கின்றன. இந்த நல்ல திட்டங்கள் நல்ல கல்வியில் வேரூண்டியுள்ள காரணத்தால், மென் மேலும் உயர்வடைகின்றன. இந்த உயர்வே மற்ற விலங்குகளில் அவற்றின் தரம் உயர்வது போன்று, மனிதனின் தரத்தை உயர்த்தும் வகையில் செயற்படுகிறது.

சாக்ரடீஸ் : நமது இளைஞர்கள் நான் கூறியபடி ஆரம்பம் முதலே, கட்டுப்பாடுள்ள முறையில் பயிற்றப்படல் வேண்டும். ஏனெனில் இனிய பொழுது போக்கானது சட்ட வரம்பைக் கடந்துவிடின், வாலிபரும் சட்டத்தை மீறுவர். மேலும் அவர்கள் நன்கு நடாத்தப்பட்டு நல்லொழுக்கமுடைய குடிமக்களாக வளரமுடியாது.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மையான பேச்சு.

சாக்ரடீஸ் : நல்ல முறையில் விளையாட்டிலே தொடங்கி, இன்னிசையின் மூலம் நல்லொழுக்கமுறையை பழக்கமாக கொள்வார்களானால், பிறகு அவர்களுடைய செம்மை நிறைந்த பழக்கம் - பிறரது சீர்கேடான விளையாட்டுப் போலன்றி – அவர்களது எல்லாச் செயல்களிலும் தொடர்ந்து வரும். அதுவே அவர்கள்

வளர்ச்சியடைய உதவும் ஒரு தத்துவமாக இருக்கும். நாட்டில் எங்காவது வீழ்ச்சியிருப்பினும், அதுவே அவற்றைப் பழையபடி உயர்த்திவிடும்.

அதைமாந்தஸ் : முற்றிலும் உண்மையே.

சாக்ரடீஸ் : இவ்வாறு அவர்கள் கல்வி பயிற்றப்பட்டால், தங்களது முன்னோர்கள் அடியோடு விட்டுவிட்ட முக்கியமில்லாத நியமங்களை அவர்கள் தாங்களாகவே அழைத்துக் கொள்வர். என்றவாறு அமையப் பெற்றுள்ளது.

இவ் உரையாடலின் மூலம் பிளேட்டோவினது கல்விச் சிந்தனையானது சில குறைபாடுகளைக் கொண்டதாக காணப்படுகின்றது. இவர் உயர் குடிமக்களில் கூடிய கவனம் செலுத்தினார். உயர்தத்துவ ஞானியை உயர் நிருவாகியாக எண்ணினார். அரசு எல்லாவற்றையும் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கூறுவது கவனிக்கத்தக்கதாகும்.கருத்தியல்ரீதியபன நோக்கில் பல கருத்துக்களை வெளிப்படுத்தியதன் காரணமாக சில விடயங்கள் நடைமுறைரீதியாக விமர்சனத்திற்கு உட்பட்டது.

## பிரெட்ரிக் புரோபல்

### அறிமுகம்

“குழந்தைப் பூங்கா முறையின் தந்தை எனப் போற்றப்படும் பிரெட்டிக் புரோபல் ஜெர்மன் நாட்டுக் காட்டுப்பகுதியின் ஒரு சிற்றுரில் 1782 ஏப்ரல் 21 ஆம் திகதி ஜோஹன் ஜேக்கப், ஜேக்கேபின் ஆகியோருக்கு “Oberweibach Schwaburg Rudolstadt பிறந்தார். இவர் குழந்தைகளின் இயக்கத்தையும் அவர்கள் கற்கும் உத்திகளையும் தெளிவாக விளக்கியதோடு, குழந்தைகள் தம்மைப் பற்றியும் நாம் வாழும் உலகு பற்றியும் விழிப்புணர்வு பெறுவதற்கு முன்னர் ஏராளமான சுய அனுபவங்கள் அவசியம் என்பதையும் வலியுறுத்தினார்.

குழந்தைப் பருவத்தைப் பொருத்த வரை விளையாட்டு என்பதை அற்பமாக கருத முடியாது. காரணம் குழந்தைகளைப் பொருத்த வரை விளையாட்டு காத்திரமான பங்கு வகிக்கிறது, இன்றியமையாதது பொருள் பொதிந்துள்ளது. குழந்தைகளின் எதிர்காலத்தின் மூலாதாரம் ஆகும். குழந்தைகளின் உள்ளத்தின் உணர்ச்சிகரமான இயல்புகளோடும் குழந்தை முழு ஆளாக விருத்தி பெற்று வெளிக்காட்டப்படுவதற்கு இவ் விளையாட்டு குழந்தைகள் உலகில் பெரிது என்றும் குழந்தை விளையாட்டினுடாகவே கற்றுக் கொள்கிறது என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு புரோபல் கூறினார்.

புரோபல் விளையாட்டு என்பது தற்செயலானதல்ல. அது இன்றியமையாதது என்பதை அவரின் கூற்றின் மூலம் நிருபிக்க முடிகிறது. “விளையாட்டினூடாகக் கற்றுக் கொள்வதனாலேயே விருபத்துடனும் அதிகளவிலும் குழந்தைக் கற்றுக் கொள்கிறது. கற்றல் செயற்படுதல் என்பன போன்று விளையாட்டு அதற்கே உரித்தான திட்டவட்டமான ஒரு காலவரையறையைக் கொண்டிருப்பதுடன் அது ஆரம்ப கால கட்டத்திலிருந்து

விலக்கப்பட முடியாததுமாயிருக்கிறது. விளையாட்டு மிக முக்கியமானதாகையால் அதனை ஆற்றுப்படுத்தல் மட்டுமன்றி முதலில் இவ்வகையில் விளையாட்டினைக் கற்பிக்கவும் வேண்டும்''. அத்தோடு, இவர் ஏராளமான விளையாட்டுக்களையும், விளையாட்டுப் பொருட்களையும் வடிவமைத்தார். இவர் வடிவமைத்த விளையாட்டுப் பொருட்களில் அல்லது வெகுமதிகளில் ஆறு தொகுதிக்கும் பல மென்பந்துக்கள் மத்தியிலான கோளங்கள் கனக்குற்றிகள் உருளை என்பவையும் வரைதல் அல்லது மாதிரியுரு அமைத்தல் போன்ற செயற்பாடுகளில் பயிற்சியளிக்கும் செயற்பாடுகளையும் முன்வைத்தார். உள்ளார்ந்த எண்ணங்கள் குறித்த புரோபலின் சித்தாந்த அடிப்படைக் கூறுகள் வெகுமதிகள், செயற்பாடுகள், என்பனவாகும். அவற்றின் குறியீட்டுப் பண்பை நீக்கி பார்த்தல் அவையே எக்காலத்திலும் பிள்ளைப் பருவத்தினரின் விளையாட்டுப் பொருட்களாகும். பந்துகள், பலகை, மணல், களிமண் போன்றன குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களாக இருந்து வந்துள்ளன என்பதே இதற்கு சிறந்த உதாரணமாகும்.

குழந்தை பிள்ளைகளின் காலகட்டத்தினை அக்காலத்தில் என்ன எழுத்து, வாசிப்பு என்று இருந்த குழந்தைப் பள்ளிக்கு மாறாக வெகுமதிகள், செயற்பாடுகள், பாடல்கள், விளையாட்டுக்கள், கதைகள், உரையாடல்கள் என்பவற்றைப் புரோபல் 1990 இல் குழந்தைகளின் தேவைக்கேற்ப திருத்தியமைத்து முன்னிலைப்படுத்தினார். இக்கால முன்பள்ளிகள் என்பதற்கு புரோபல் தான் காரண கருத்தாவாக இருந்திருக்கிறார்.

அவர் ''இலவச வேலை'' என்ற கருத்தை கல்வியில் அறிமுகப்படுத்தினார் , மற்றும் ''விளையாட்டை'' குழந்தைப் பருவத்தில் வாழ்க்கை எடுத்த வழக்கமான வடிவமாகவும் விளையாட்டின் கல்வி மதிப்பாகவும் நிறுவினார். முதல் மழைலையர் பள்ளியின் செயற்பாடுகளில் ஃப்ரோபல் பரிசுகளுடன் பாடல், நடனம், தோட்டக்கலை மற்றும் சுயமாக இயக்கிய நாடகம் ஆகியவை அடங்கும். குழந்தை கல்விக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். மற்றும் பேட் பிராங்கன் பார்க்கில் விளையாட்டுப் பொருட்களை தயாரிக்கத் தொடங்கினார்.

1837 இல் பேட் பிளாங்கன் பார்க்கில் சிறு குழந்தைகளுக்கான பராமரிப்பு விளையாட்டு மற்றும் செயற்பாட்டு நிறுவனத்தை நிறுவினார். அமெரிக்காவில் அவரது பிறந்த நாள் ஏப்ரல் 21 அன்று தேசிய மழலையர் பள்ளி தினம் அனுசரிக்கப்படுகின்றது. 1826 ஆம் ஆண்டு உலக புகழ் பெற்ற The Education Of Man புத்தகம் எழுதினார். மேலும், இன்டர் கண்ட்டன் ஆசிரியவியல், அன்னை விளையாட்டும் செவிலிப்பாடலும் படிப்படியான வளர்ச்சி மூலம் கல்வி போன்ற நூல்களையும் இயற்றினார். 1851 இல் மழலையர் பள்ளிகளைத் தடை செய்தனர். இது புரோபலை அதிர்ச்சியடைய செய்தது. அவர் 1852 ஆம் ஆண்டு மரியற்தலில் இறந்தார்.

## மரியா மொன்ரிசோரி

### அறிமுகம்

1870 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 மரியா மொன்ரிசோரி Chanavalle இல் பிறந்தார். இவர் இத்தாலியைச் சேர்ந்த கவியாளர். மனோதத்துவ மருத்துவர். இத்தாலியில் மருத்துவ பட்டம் பெற்ற முதல் பெண். இவர் சிறு குழந்தைகளை பயிற்றுவிக்க ஒரு புதிய முறையை உருவாக்கி ஜனவரி 06 1907 இல் ரோம் நகரில் தனது பள்ளியில் அறிமுகப்படுத்தினார். இம் மொன்ரிசோரி அம்மையார் உணர்வு ரீதியாகவும், சமூக ரீதியாகவும் குறைப்பாடுள்ள குழந்தைகளுக்கு பணிபுரிந்தவராவார். இவர் 20 ஆம் நூற்றாண்டுக்கு முற்பகுதியில் இவரது செயற்பாடு பிரித்தானியாவை விட அமெரிக்காவில் பெரிய பங்கு வகிக்கிறது.

இவருக்கு முன் செயற்பட்டோர்கள் புரோபல், பென்ரபோகி ஆகியோரின் அடிச்சுவட்டில் அழிய வடுக்கல், குழந்தைகளின் விருத்தி ஒவ்வொருவரின் உணர்திறன் பருவங்களினூடாக முன்னேறுகிறது என்ற முடிவுக்கு வந்தார். அந்த படிநிலைகள் 6 - 12, 12 – 18 எனும் காலப்பகுதிகளை கொண்டிருந்தன. குழந்தைகள் சுயசெயற்பாடுகள் மூலம் கற்கின்றனர். எனவே ஏற்பாடு செய்யப்பட்ட சூழல் மற்றையவிடவற்றையும் முக்கியமானது என நம்பினார் மொன்ரிசோரி அம்மையார்.

இவ் அம்மையாரின் முறையை பின்பற்றி கல்வி கற்ற குழந்தைகள் சிறு வயதிலேயே விளையாட்டை விட வேலையில் சாதிக்க அதிக ஆர்வம் காட்டினார். மற்றும் தொடர்ந்து மூளைக்கு வேலை கொடுத்தாலும் அதிகம் களைப்படைவதில்லை. இதனால் இவரது முறையை ஐரோப்பா முழுவதும் பயன்படுத்த ஆரம்பித்தனர். நெதர்லாந்தில் மிக புகழ் வாய்ந்த ஆசிரியப் பயிற்சி பள்ளியை நிறுவினார். பிற்பட்ட காலப்பகுதியில் 1939 முதல் 1947 வரை இந்தியாவிலும் இலங்கையிலும் பணியாற்றினார். அம்மையாரின் கல்வி முறை குழந்தைகள் தாமாக முன் வந்து செயற்படுவதற்கும் தனது தேவைகளை தானே செய்து கொள்ளவும் வழி செய்கிறது. இந்த முறையில் நடக்கும் வகுப்புக்களில் ‘‘ஆசிரியர்கள்’’ இல்லை. மாறாக அவர்கள் வழிநடத்துவார்கள் என்றே கருதப்படுகின்றார்கள். குழந்தைகள் புதியவற்றை தாமாக முன்வந்து ஆர்வமுடன் கற்றுக் கொள்ளவும் அவர்கள் தவறான பழக்கங்களை கற்றுக் கொள்ளாமலும் குழந்தைகளின் முயற்சிகள் வினாகிப்போகாமலும் பார்த்துக் கொள்வதே வழிநடத்துபவர்களின் (ஆசிரியர்களின்) பணி என்று எடுத்துரைத்தார். இவரது மிக சிறந்த புத்தகங்கள் “The Abosobent Mind” ,“The Discover of ThE Ohibl” என்பனவாகும்.

மருத்துவம் படிக்க சென்ற அவர் பெண் என்று இழிவுப்படுத்தப்பட்டதால் அவர் மனம் வெறுத்தார். இருந்த போதும் பட்டம் பெற்று வந்து உளவியலில் ஆர்வம் செலுத்தி பிள்ளைகளுக்கு கண்காணிப்பாளராக இருந்தார்.

பிள்ளைகளை மிரட்டுவதோ அடிப்பதோ பிடிக்காத அவர் அன்பாக நடத்த வேண்டும் என்றார். நோட்டு புத்தகங்களுக்கு பதில் பொம்மைகளை அவர்களின் கையில் கொடுத்தார். எழுத்துக்களை சொல்லித்தருவதற்கு முன்னர் அவற்றை உணரும் வகையில் பொருட்களைக் காட்டினார். வீட்டில் குழந்தைகளை வேலை செய்யக்கூடாது என்று கூறியதோடு எளிய செயல்களை செய்ய வைத்து பிள்ளைகளை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வார்.

மாணவர்களை ஆசிரியர்கள் கவனிக்க வைக்க நாம் முயலக்கூடாது. ஆசிரியர் மாணவனை கவனித்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னவர். அப்படியே பிள்ளைகளை நடத்தினார். வண்ண அட்டைகள், ஒலி எழுப்பும் கருவிகள், ஓவியங்கள், வண்ணத் தாள்கள், பட்டிகள் என்று குழந்தைகளின் கற்றலை வண்ணமயமானதாக வகுப்புக்களை மாற்றினார். இவரின் கல்வி முறையில் படித்து வந்தவர்கள் தான் கூகுள் மற்றும் அமேசன் நிறுவனத்தவர்களாவர். இன்று உலகம் முழுவதும் 20000 பள்ளிகள் 110 நாடுகள் என்று விரிந்திருக்கும் அவரின் கனவு குழந்தைகளுக்கானது.

இவரின் முக்கிய கருத்துக்களாக ‘‘பிள்ளைகள் பிறரில் தங்கியிருக்கக் கூடாது, சுதந்திரமாக செயற்பட வேண்டும்’’ ,மனப்பாடம் செய்வதை விட புலன்களின் பயிற்சி முக்கியமானது. தொடுகை உணர்ச்சி அடிப்படை பிள்ளையின் கற்றல் ஆனது காலம் தீர்மானிக்கிறது. என பல உள்ளன. இவரது பங்களிப்பு இலங்கையிலும் காணப்பட்டது. இங்கு செயற்படும் Good Shepherd Maria Monlessori ஐ கூறலாம். 1944 (கொட்டாஞ்செனை நல்லாயன் மடம்) இவர் 1939 – 1947 வரை இலங்கையிலும் இந்தியாவிலும் பணியாற்றி இருக்கிறார். இவ்வாறு மொன்டசோரி கல்வி முறையை அறிமுகப்படுத்தி அயராது உழைத்த மரியா மொன்டசோரி அம்மையார் 1952 மே 06 ம் திகதி தனது 82 ம் வயதில் உயிரிழந்தார்.

**மார்க்கரட் மக்மிலன்**

**அறிமுகம்**

ஆரம்ப பாடசாலைகளின் கல்விக்கு பலமான அத்தியாயத்தை இடவேண்டும் என்று சிந்தித்த இவர் இங்கிலாந்தில் 1818 இல் ஆரம்பப்பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு வித்திட்டார். பிளேட்டோ, ரூசோ, புரோபல், மொண்டிசூரி போன்றோரின் வரிசையில் இவர் முக்கியமானவராகும்.வேறுபட்ட குடும்ப சூழல்கள் குழந்தைகளின் செயற்பாட்டிலும் சுகத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை அறிந்து கொண்ட முந்நாள் ஆளுநராகக் கடமையாற்றிய இவர்தனிப்பட்ட குடும்பங்களில் வளரும் குழந்தைகளும் குழந்தை பராமரிப்பு நிலையங்களில் வளரும் குழந்தைகள் பற்றியும் சிந்தித்தார். இவரது கருத்துப்படி வீடும் சமூகமும் சிறுவர்களின் கல்விக்குப் பங்களிப்புச் செய்பவை என்றும் பிள்ளையின் விருத்தியில் வாழ்வின் முதற்சில வருடங்கள் அதிமுக்கியமானவை என்று கூறினார். பிள்ளையின்

முன்னேற்றத்திற்கு அன்பும் பாதுகாப்பும் மிகவும் இன்றியமையாதது என்பதை ஏற்றுக் கொண்ட இவர் தனது ‘சிறுவர் பள்ளி’(1919) என்ற நூலில் வெளிப்படுத்தினார்.குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்தில் பெற்றோர் கூடியளவு பங்களிப்பு செய்யவேண்டும் என்றார். ஆரம்பப் பாடசாலையால் மட்டும் சமூகசீர்கேட்டை வெற்றி கொள்ளலாம் என்பதை ஏற்றுக்கொள்ளாத இவர் வீட்டுக்கும் பாடசாலைக்கும் இடையே நெருங்கிய தொடர்பும் ஒத்துழைப்பும் இருக்கவேண்டும. என வலியுறுத்தினார்.

**அத்தியாயச் சுருக்கம்**

கல்வி என்பது பல நாடுகளிலும் காணப்படும் முக்கியமான ஒரு துறையாகும். இத் துறையானது ஏனைய பல துறைகளோடு இணைந்த துறையாகக் காணப்படுகிறது. மனிதவிருத்தியானது கற்றல் கறிபித்தல் செயற்பாட்டில் தங்கியுள்ளது.அனுபவம் அறிவு சார்ந்த விடயங்கள் கற்றலில் செல்வாக்குச் செலுத்துவதோடு சமூக செயற்பாட்டு இயக்கமாக பாடசாலைகாணப்படுகிறது. ஆரம்பப் பிள்ளைகளின் கல்விதொடர்பான பல கோட்பாடுகளையும் எண்ணக்கருக்களையும் மீள்பார்வைக்கு உட்படுத்துவதோடு அது தொடர்பான விமர்சனத்தையும் கொண்டுள்ளது.

**பயிற்சி வினாக்கள்**

1. ஆரம்ப பிள்ளைப்பருவம் என்றால் என்ன?
2. ஆரம்ப பிள்ளைப்பருவ கல்விநிலையங்களுக்கும் சமூகத்திற்குமிடையேயுள்ள தொடப்பினை விளக்குக.
3. ஆரம்ப பிள்ளைப்பருவ கல்விபற்றிய சிந்தனையாளர்களின் கருத்துக்களை விளக்குக.

**உசாத்துணை நூல்கள்**


1. செல்வராஜா.மா(2006), முன்பள்ளிக்கல்வி, மட்டக்களப்பு, எவகீறின் அச்சகம்.
2. சந்திரசேகரம், ப., (2011), கல்வித் தத்துவம், சேமமடு பொத்தகசாலை, யுஜி 50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு -11.
3. சார்ள்ஸ் வெரேக்கர், (1973), அரசியற் கொள்கையின் வளர்ச்சி, கல்வியியல் வெளியீடு, கொழும்பு.
4. நாரயணன். க., (2003), அரசியல் சிற்பிகள், மாரி பதிப்பகம், ‘சிவகலை’ இல்லம், கொட்டுப்பாளையம், புதுச்சேரி – 8
5. John, D.W and Johnson, R.T (1986). Coumputer assisted cooperative learning, Educational Technology, No.26.
6. Kochhar, N. (2006). Methods and Techniques of Teuching, New Delhi, Sterling publishers, Pvt.

# அத்தியாயம் 02

## 2. குழந்தைகளின் வளர்ச்சியும் விருத்தியும்

அறிமுகம்

பிரதான சொற்கள்

நோக்கங்கள்

கற்றல் பெறுபேறுகள்

2.1 குழந்தைகளின் வளர்ச்சியும் விருத்தியும்
2.2 குழந்தை விருத்திப் படிநிலைகள்
2.3 விருத்தியில் : உடலியல், மனவெழுச்சி, இயக்க
அத்தியாயச் சுருக்கம்
பயிற்சி வினாக்கள்
பயன்படுத்தப்பட்ட நூல்கள்

**அத்தியாயம் பற்றிய அறிமுகம்**

இயற்கையில் இருந்து மனிதன் தம்மைப் பாதுகாக்கவும் தப்பிப்பிழைக்கவும் மனிதன் தன்னைத் தயார்படுத்திக் கொள்கின்றான். இவ்வாறாக மனிதன் ஒவ்வொரு விடயங்களையும் தமது அனுபவங்கள் மூலமாகவும், தம் முன்னொர் மூலமாகவும் கற்றலை மேற்கொள்கின்றான். மேலும் தமது வயதிற்கேற்ப ஒவ்வொரு விருத்தி நிலைகளை மனிதன் பெறுகின்றான். இவ் விருத்தி நிலைகளை அறிஞர்களும், ஆய்வாளர்களும் தமது கருத்துக்களினூடாகத் தெளிவுபடுத்தியுள்ளனர். எனவே இவ் அறிஞர்களின் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

---

**திறவுச் சொற்கள்**

அறிகை, மனவெழுச்சி, வளர்ச்சி,விருத்தி,இயக்கம்

**கற்றல் நோக்கம்**

- விருத்தி நிலைசார் கோட்பாடுகள் பற்றி அறியச் செய்தல்
- பரம்பரையின் முக்கியத்துவம் பற்றிய சிந்தனையை ஏற்படுத்துதல்
- சூழல் காரனிகளின் செல்வாக்கை அறியச் செய்தல்
- குழந்தைகளின் விருத்தியில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றதுஎன்பது தொடர்பான விளக்கத்தை உருவாக்குதல்

**கற்றல் பெறுபேறுகள்**

- மனிதனது வளர்ச்சியிலும் விருத்தியிலும் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை அறிந்து கொள்வர்.
- வளர்ச்சிக் கோட்பாடுகள் பற்றிய சிந்தனையை ஏற்படுத்திக் கொள்வார்
- விசேட தேவையுடைய பிள்ளைகள் தொடர்பான செயற்பாடுகளை அறிந்து செயற்படுவர்

---

## 2.1 குழந்தைகளின் வளர்ச்சியும் விருத்தியும்

**விருத்தி உளவியல்** (Development Psychology)

**அறிமுகம்**

உலகிலுள்ள ஒவ்வொரு தாய் தந்தையரும் தங்களுடைய மகள் அல்லது மகன் வாழும் சமூகத்தில் மிக உயர்ந்தவர்களாக வரவேண்டும் என்று நினைப்பதுண்டு. ஆனால் அது நடப்பதுண்டா? அதேபோல் தம்மால் அடைய முடியாத வெற்றிகளை தம்முடைய குழந்தைகள் மூலமாக அடைய நினைக்கின்றோம். இது சாத்தியப்படுவதுண்டா? இல்லையா? இல்லையாயின் அதற்கானகாரணம்யாது? நாம் சொல்லிக்கொடுத்தவற்றுக்கு ஏற்ப பிள்ளைகள் வளர்கிறார்களா அல்லது அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப அவர்கள் வளர்கிறார்களா ஏன்ற ஆய்வு மிகவும் முக்கியமானதாகும். கருவில் உருவான முதல்நாளில் இருந்து அந்தக் குழந்தை வெளியே வரும் வரை அதன் ஒவ்வொரு வளர்ச்சியும் நம்மால் அவதானிக்க முடியும். அதேபோல் பிறந்தது முதல் அவர்களது வளர்ச்சியையும் அவதானிக்கமுடியும். ஆனால் அவர்களைப்புரிந்து கொள்ளுதல் என்பது உளவியலில் முக்கியமான ஒன்றாகும். பிள்ளை தாய்தந்தையர்களைப் புரிந்து கொள்வதும், தாய்தந்தைகள் பிள்ளைகளைப்புரிந்து கொள்வதும் அவசியமாகவுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்ற துறையாக விருத்திசார் உளவியல் காணப்படுகின்றது. அதாவது கருவுற்ற நாள்முதல் உள்ளும் வெளியிலும் ஏற்படுகின்ற மனிதன் தொட்பான பல மாற்றங்களைப்பற்றிய ஒரு தேடலும் ஆராய்ச்சியும் இன்று உளவியலில் ஒரு பிரிவாக வளர்ந்துள்ளது அதுவே விருத்தி உளவியலாகும்.

ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனினதும் மனிதனுக்குள்ளேயும் நடைபெறுகின்ற வளர்ச்சி மாற்றங்களே விருத்தி உளவியலாக கருதப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனும் வாழ்நாளில் உட்புற மற்றும் வெளிப்புற மாற்றங்கள் அவனது ஒவ்வொரு காலப்பகுதியிலும் நிகழ்கின்றதை அவதானிக்கலாம். ஒரு உயிரியானது தாயின் வயிற்றில் கருக்கொண்டது முதல் குழந்தையாக உருவாகி, பிறந்து அது பல்வேறு பருவங்களை தாண்டி இறுதியில் முதுமை நிலையை அடைகிறது இவ்வாறு பிறப்பு முதல் இறப்பு வரையான காலப் பகுதியில் மனிதனின் நடத்தைகளை விபரிப்பதாகவும் விளக்குவதாகவும்

எதிர்வு கூறுவதாகவும் சிலசமயங்களில் மாற்றியமைப்பதாகவும் இயல்பினைக் கொண்டுள்ளது. அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாகவே இவ் விருத்தி உளவியல் அமைகின்றது. ‘வன்டெர்சன்டென்’ என்பவர் ‘‘ஒருமனிதனது உடல் உள சமூக ஆன்மீகம் சார்ந்த வளர்ச்சியின் காரணமாக வெளித் தெரிகின்ற பெரிய மாற்றமே விருத்தி என்று கூறுகிறார்.

இவ் விருத்தி உளவியலானது மூன்று வகைகளில் குறிப்பிடப்படுகின்றது. அவை குழந்தை விருத்தி உளவியல், இளையோர் விருத்தி உளவியல் , முதிர்நிலை விருத்தி உளவியல் போன்ற மூன்று வளர்ச்சிக் கட்டங்கள் ஊடாக தெளிவுபடுத்தப்படுகின்றது. அது மட்டுமல்லாது மனிதனது விருத்தி மற்றும் நடத்தை மாற்றங்கள் என்பவற்றை ஆராய்ச்சிக்குட்படுத்துகின்றது. இது உளவியல் விருத்தியில் பயன்தரக்கூடியதொன்றாகும்.




மேலும் இவ்விருத்தி உளவியல் வாழ்நாள் உளவியல் என்றும் குறிப்பிடுகின்றது. அதாவது ஒரு மனிதனுடைய வாழ்நாள் முழுவதுமான வளர்ச்சிக் கட்டங்களை இது மையப்படுத்துகின்றமையாலும் பிறப்பு முதல் இறப்பு வரையான அனைத்திலும் செல்வாக்கு செலுத்துவதனால் இது வாழ்நாள் உளவியல் என்றும் அழைக்கப்படுகின்றது. விருத்தி உளவியலானது வாழ்நாள்காலத்தில் பின்வரும் விருத்திகள் பற்றி ஆராய்கிறது.

உடல் விருத்தி, உளவிருத்தி,விழுமிய அறநெறி விருத்தி, கலாசார விருத்தி, ஆத்மீக விருத்தி, பால்நிலை விருத்தி, அறிவு விருத்தி, ஆளுமை விருத்தி, மனவெழுச்சி விருத்தி மற்றும் நடத்தை மாற்றம் என்பவற்றை அறிவியல் கண்ணோட்டத்தில் ஆராய்கின்றது. இத்துறையானது இரண்டு கேள்விகளினூடாக தனது ஆய்வை மேற்கொள்கிறது. அவை:

1. மனிதனுடைய விருத்தி அல்லது வளர்ச்சி மாற்றங்கள் எவ்வாறு நடைபெறுகின்றது?
2. மனிதனுடைய விருத்தியை நிர்ணயிக்கின்ற காரணிகள் யாவை? இவ்வாறு கேள்விகளை முன்வைத்து விருத்தி உளவியல் ஆராய்கிறது.

இவ்விருத்தி உளவியலில் விருத்தி செய்யப்படுகின்ற விடயங்கள் கருக்கட்டலில் ஆரம்பித்து குழந்தை பிறந்து அதன் ஆரம்ப வளர்ச்சி கட்டங்கள் பின்னர் கட்டிளமைப் பருவம், நடுத்தர வயது, முதிர்ப்பருவம்

பின்னர் இறப்பு வரை இவ்வாறே உளவியல் விருத்தியடைந்து கொண்டு செல்கிறது.இதனடிப்படையில் ஒரு மனிதனுடைய விருத்தியினை இரண்டு விடயங்களின் அடிப்படையில் நோக்கலாம். அவை

1. எண்ணிக்கையின் அடிப்படையில் (Quantity)
   இங்கு உடலமைப்புக்களை குறிப்பிடலாம். புலன்கள் தலைமுடி, பற்கள், நகம் ஏனைய உடலுறுப்புக்களின் விருத்தியை எம்மால் அறிந்து கொள்ளலாம். இங்கு அவதானத்தின் மூலம் நேரடியாக புரிந்து கொள்ள முடிகின்றது.
2. பண்பின் அடிப்படையில் (Quality)
   இங்கு நுண்ணறிவு, அறிவு, ஆளுமை, மற்றும் நடத்தை மாற்றங்கள் என்பவற்றினுடைய விருத்திகள் இங்கு நேரடி அவதானத்தின் மூலம் புரிந்து கொள்ள முடியாது. இங்கு நடத்தைகளையும் அதன் பண்புகள் ரீதியாகவுமே எம்மால் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு இரண்டு வழிமுறைகளின் அடிப்படையிலும் விருத்தி உளவியல் என்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு மனிதனுடைய உட்புற மற்றும் வெளிப்புற அனைத்து மாற்றங்களையும் தெளிவுபடுத்தக் கூடியதொரு முக்கியமான பகுதியாக இந்த விருத்தி உளவியல் காணப்படுகின்றது. இவ்விருத்தியில் பரம்பரையும் சூழலும் வெல்வாக்குச் செலுத்துகின்றது. மரபு நிலைவாதிகள் மரபின் பின் புலங்கள் பற்றி கவனம் செலுத்துகின்றார்கள். அதேபோல் சூழ்நிலை வாதிகள் வீட்டுச்சூழல் சமூகம் பாடசாலை என்பன செல்வாக்குச் செலுத்துவதாகக் கூறுகின்றார்கள்.

**பரம்பரையும் சூழலும்**

குழந்தைகள் பிறந்ததிலிருந்து பருமன், பாலியற்பண்புகள், நடத்தைகளில் பல்வேறு பட்ட வளர்ச்சி வேறுபாடுகளைக் காணலாம். காலம் செல்ல செல்ல தனியாள் வேறுபாடுகள் மேலும் அதிகரிக்கின்றன.

வளர்ச்சியடையும் போது தனியாள் வேறுபாடு அதிகரிப்பதற்கு காரணம்

1) சில உளவியலாளர்கள் பரம்பரை இயல்புகளையும்
2) சில உளவியலாளர்கள் சூழலின் இயல்புகளையும் காரணிகளாக கூறுவர்.

உண்மையில் இவ்விரு இயல்புகளும் இணைந்தே நமது உடல் உள வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன. இதில் ஒன்று மட்டும் காணப்படின் உயிரியை உருவாக்க முடியாது

**பரம்பரை**

ஒரு தலைமுறையிலிருந்து மற்றுமொரு தலைமுறைக்கு மரபு ரீதியாக பண்புகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. என்ற கூற்றினை கிரிகர்மெண்டேல்

( Gregor Mendel) என்ற ரோமன் கத்தோலிக்கப்பாதிரியார் தாவரங்களிலுள்ள தலைமுறைகளை உருவாக்குவதன் மூலம் மரபுநிலையின் (Genes) நுட்பச் செயலை ஆராய்ந்தர். அவரது ஆய்வின் அல்லது பரிசோதனை முடிவில் கருவில் காணப்படும் சில கூறுகள் ஒரு தலை முறையிலிருந்து மற்றோரு தலை முறைக்கு மரபுநிலைப் பண்புகளை ஊடனுப்புவதற்குக் காரணமாக இருக்கின்றனவென்று முடிவு செய்தார் ஒவ்வொரு மரபுநிலை பண்புக் கூறுகளுக்கும் உடலில் இருக்கும் சில நுண் பொருட்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன. எனினும் இந்த நுண் பொருட்கள் மாற்றம் ஏதுமின்றி அப்படியே ஒரு தலைமுறையிலிருந்து மற்றுமொரு தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றதென்றும் அவர் நம்புகின்றார். இதனால் குழந்தைகளினது பண்புக் கூறுகளில் ஒன்றை தன் தந்தையிடமிருந்தும் மற்றதொன்றை தாயிடமிருந்தும் பெறுகிறது.

மனிதர்களின் நடத்தை அவர்களின் மரபு நிலையினையும் சூழ்நிலையையும் பொறுத்து அமைகின்றது. மரபு வழி பெறப்பட்ட பண்புகள் சூழ்நிலையில் காணப்படும் பல்வேறு காரணங்களால் மாற்றங்களுக்குள்ளாக்கப்படுகின்றன. உடலமைப்பு, பருமன், நிறம், பரம்பரை நோய், நுண்ணறியும் ஆற்றல் என்பவற்றை பெரும்பாலும் பரம்பரை தீர்மானிக்கும்.

**சூழல்**

சூழ்நிலை என்ற சொற்றொடர் உளவியல் ஆய்வில் உயிரியைச் சுற்றியிருந்து ஆட்சி செய்யும் பல்வேறு இரசாயணச் சேர்க்கைகள் மற்றும் உடலமைப்பு இன சமூக காரணிகளைக் குறிக்கும்.

சூழலை இரு வகையாகப் பிரிக்கலாம்.

1) பௌதீக அம்சங்கள் :

வீடு: சாதாரண சூழல், உணவு, ஊக்கல், எதிர்பார்ப்பு,சமூக தொடர்பு, விழுமியங்கள், மனப்பான்மை. கற்றலுக்குரிய சந்தர்ப்பம் காலநிலை: புவியியற் பண்புகள் என்பவற்றைக் குறிக்கும் இதற்கு வாட்சன், சிறில் பேர்ட், லைசென்கோ, கண்டேல் பாக்ளி போன்றோர் முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

2) சமூக காலாச்சார அம்சங்கள்:

சமூகம் என்பது ஆண்கள், பெண்களை உள்ளடக்கிய அவர்கள் தம் இனத்தின் இயக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் கட்டியெழுப்பிய முறையான கட்டுப்கோப்புக்களை உடையதாய் விளங்கும் ஒரு குழுவாகும். கலாச்சாரம் ஒரு சமூகத்திலுள்ள அங்கத்தவர்களின் பொதுவான பண்புகளுடன் கூடிய நடத்தைகளின் பெறுபேறுகளும் கற்றலின் மூலம் அவர்கள் பெற்றுக் கொண்ட நடத்தையும் சேர்ந்ததே கலாசாரமாகும். இக்கலாச்சாரத்துக்குள் நமது வாழ்க்கை, பழக்கவழக்கம், சமய அனுஸ்டானங்கள், கலை நுட்பம், மொழியறிவு, ஜீவனோபாயம், அபிப்பிராயம், மனப்பான்மை, விழுமியங்கள் போன்றன அடங்கும்.

பரம்பரைமூலமோ அல்லது அனுபவ சூழ்நிலை மூலமோ வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஒவ்வொரு விருத்தி நிலைகளையும் கருத்தில் கொண்டு அதனை பல்வேறு பிரிவுகளாக பிரித்து நோக்கப்படுகின்றது.

## 2.2 குழந்தை விருத்திப் படிநிலைகள்

பிறப்பிற்கு முந்திய விருத்திப்படிகள்

இது கருவுற்று குழந்தை தாயின் கருவறையில் இருக்கும் கர்ப்ப காலத்தை குறிக்கும் 270 – 280 நாட்கள் அதாவது 1 – 9 மாதங்களாகும்.

1 ஆவது கிழமை:- சூற்பையில் உருவாக்கப்படும் சூழானது பலோப்பியன் குழாயினுடாக பயணம் செய்து கருப்பையினை அடையும் காலம்.

2 ஆவது கிழமை:- முளையமானது கருப்பையினுடைய சுவர்களில் இணைந்து துரிதமாக வளர்ச்சியடையும் காலப்பகுதி.

3ஆவது கிழமை:- முளையமானது குறிப்பிட்ட வடிவத்தினை எடுக்கும், தலை மற்றும் கால்பகுதி பிரதேசங்கள் தெரியும், இதயம் (Primitive heart) துடிக்க ஆரம்பிக்கும்.

4ஆவது கிழமை:- வாய் பகுதிகள் மற்றும் ஈரல் தோற்றம் பெறும், இதயம் விரைவாக விருத்தியடையும், மற்றும் தலை மற்றும் இதயப் பகுதிகளை வேறுபடுத்திப் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

6ஆவது கிழமை:- கைகள் மற்றும் கால்கள் வளர்ச்சியடைய ஆரம்பிக்கும், ஆனால் கைகள் மிகவும் சிறிதாக காணப்படும். ஈரல் இரத்த கலங்களை உற்பத்தி செய்யும்.

8 ஆவது கிழமை:- முளையம் கிட்டத்தட்ட 1 அங்குல நீளமுடையதாக காணப்படும். முகம், வாய் மற்றம் காதுகள் என்பவற்றை வேறுபடுத்தி பார்க்கக் கூடியதாக இருக்கும். தசைகள் மற்றும் cartilage என்பன விருத்தியடைய ஆரம்பிக்கும்.

12 ஆவது கிழமை:- Fetus கிட்டத்தட்ட 1 அங்குல நீளமுடையதாக காணப்படும். மனித உருவினை ஒத்ததன்மை (resemble) உடையதாக காணப்படும், இருந்தும் தலையானது ஒப்பீட்டளவில் பெரிதாக காணப்படும். முகமானது குழந்தை வடிவத்திலான வெளித்தன்மையினை கொண்டிருக்கும். கண்ணிமை, மற்றும் நகங்கள் உருவாக ஆரம்பித்திருக்கும். ஆணா அல்லது பெண்ணா என்பதினை இலகுவாக அடையாளப்படுத்திக் கொள்ளலாம். நரம்பு மண்டல தொகுதி மிகவும் அடிப்படை வளர்ச்சியிலேயே காணப்படும்.

16 ஆவது கிழமை:- Fetus கிட்டத்தட்ட 4 1/2 அங்குல நீளமுடையதாக காணப்படும். Fetus அசைவுகளை தாயினால் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். தலை மற்றும் உள்வாரியான இளையங்கள் (internal

organs) துரித வளர்ச்சியினை அடைந்து கொண்டிருக்கும். உடலினுடைய வடிவமானது குழந்தையினுடைய வடிவத்தினை ஒத்தாக காணப்படும்.

5ஆவது மாதம் :- கர்ப்ப காலம் அரைவாசிக் கட்டத்தினை அடையும். Fetus கிட்டத்தட்ட 6 அங்குல நீளமுடையதாக காணப்படும். இது பெருமளவிற்கு சுகந்திரமாக அசையக் கூடியதாக காணப்படும். கைகள் மற்றும் பாதங்களின் வளர்ச்சி பூர்த்தியடைதிருக்கும்.

6ஆவது மாதம்:- Fetus கிட்டத்தட்ட 10 அங்குல நீளமுடையதாக காணப்படும். கண்கள் பூரணமாக வளர்ச்சியடைதிருக்கும். நாக்கில் சுவையரும்புகள் தோற்றம் பெற்றிருக்கும், சிசுவானது சுவாசிப்பதற்கு தகுதியுடையதாகின்றது. குறிபிட்ட காலத்திற்கு முன்னர்(குறைபிரசவம்) பிரசவம் இடம்பெறும் போது குழந்தை மெல்லியதாக அழும்.

7ஆவது மாதம்:- இது முக்கியமான காலப்பகுதியாகும். குழந்தையானது கருவறைக்கு வெளியிலும் வாழக் கூடிய தகுதியினை பெற்றுக் கொள்கின்றது.

7ஆவது மாதம் தொடக்கம் பிறப்பு வரை:- சிசுவானது கருவறைக்கு வெளியே வாழ்வதற்கான பூரணமான தகுதியினை பெற்றுக் கொள்கின்றது. தசைகள் பலமடைந்து காணப்படும். சிசுவினுடைய அசைவுகள் உறுதியானதாகவும் விரும்பத்தக்கதாவும் இருக்கும். சுவாசம், சூப்புதல், மற்றும் பசியில் அழுதல் மிகவும் அதிகம், பார்வை மற்றும் கேட்கும் ஆற்றல் உறுதியாக ஏற்பட்டிருக்கும

1. தவளும் பருவம் குழந்தைப் பருவ ஆரம்ப பருவம் : இது 1 தொடக்கம் 3 வயது வரையான காலப்பகுதியை குறிக்கும்.
2. முன் குழந்தைப் பருவம், பள்ளிப் பருவம்: இது 3 தொடக்கம் 6 வயது வரையான காலப்பகுதி
3. குழந்தைப் பருவத்திற்கு இடைப்பட்ட பருவம்: இது 6 தொடக்கம் 12 வரையான வயதுகளில் இடம்பெறும்
4. இளையோர் பருவம்: இங்கு 12 தொடக்கம் 20 வயது வரையான காலப்பகுதி கட்டிளமைப் பருவம் என்போம்.
5. முழு வளர்ச்சிக்கு முன்னதான பருவம்: இது 20 தொடக்கம் 40 வயதுகளில்
6. நடுத்தர வயதுப் பருவம்: இது 40 தொடக்கம் 65 வயது வரையிலான காலப்பகுதியைக் குறிக்கும்
7. முழு வளர்ச்சிக்கு பின்னுள்ள பருவம்: இது 65 வயதிற்கு பின்னர் இறக்கும் வரையிலான நிலையினைக் குறிக்கும்.

இவ்வாறே மனித விருத்திற்கேற்றவாறு ஒவ்வொரு காலகட்டங்களும் நோக்கப்படுகின்றது. எனவே விருத்தி உளவியல் என்றால் என்ன என்பதனை மேற்குறிப்பிட்ட விடயங்களினூடாக

ஒரு தாய் கருவுருகின்ற போது பல்வேறு செயல்முறைகள் இடம்பெறுகின்றது. அதுமட்டுமன்றி அது பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளையும் கொண்டமைகின்றது. கருவுறுதல் என்றால் என்ன? அது எவ்வாறு இடம்பெறுகின்றது என்பதை நோக்கினால் ஓர் ஆணின் விந்திலிருந்து வெளியேறும் விந்தணுக்கள் அதாவது உயிரணுக்கள் பெண்ணினுடைய கருப்பை நுழைவாயினுள் திணிக்கப்படுகின்றது. பெண்ணின் கருப்பை சூலக வழியாக காணப்படும் கருமுட்டையானது வெளியாகிறது. கருமுட்டையும் உயிரணுக்களும் இணைகின்றது. அதாவது பாலணுவும் விந்தணுவும் இணைந்து கருக்கட்டல் செயல்முறை நிகழ்கின்றது.

இவ்வாறிருக்க பெண்ணினுடைய கருப்பையானது கருமுட்டையும் விந்தணுவும் இணைந்து கரு கருவுறுவதற்கு 2 – 3 நாட்கள் வரை கருக்கட்டல் செயல்முறை நடைபெறுகின்றது. ஆணின் உயிரணு 48 மணி நேரம் வரை காணப்படும். பெண்ணின் சினை முட்டை 24 மணி நேரம் மாத்திரமே கருவுறுவதற்கான அந்த முட்டையின் உயிர்நிலையாக காணப்படுகின்றது.

இது மூன்று படிநிலை வளர்ச்சியை அடைகிறது. ஒரு தாய் கருவுறும் போது அக்கருவானது மூன்று வளர்ச்சி படிநிலைகளை கொண்டமைகின்றது.

## வளர்ச்சி மற்றும் விருத்தி கொள்கைகள் (Principles of Growth andDdevelopment)

மனித வளர்ச்சியும், விருத்தியும் தொடர்ச்சியானதும், ஒழுங்கானதுமான ஒரு படிமுறையான செயற்பாடாக காணப்படுவதோடு சூழலும் பரம்பரையும் செல்வாக்குச் செலுத்துகின்றது.ஒவ்வொரு பருவ கட்டத்திலும் ஏற்படும் தொடர்ச்சி விளைவுகள் அனைத்தும் எதிர்வு கூறக் கூடியதும் குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படுவதுமாகும். ஒவ்வொரு கட்டத்தினுமுடைய கால அளவும் அதனுடைய தாக்கமும் மனிதருக்கு மனிதர் வேறுபட்டுக் காணப்படுகின்றது. மனிதனது கற்றல்செயற்பாடு முதிர்ச்சி செயல்முறைக்கு உதவும் அல்லது அதை மழுங்கடிப்பதாகவும் இருக்கலாம், ஆனால் இது என்ன கற்கப்பட்டது என்பதிலேயே தங்கியுள்ளது.ஒவ்வொரு விருத்திப் பருவமும் தமக்குரிய பண்புகளைக் கொண்டுள்ளது. உதாரணம் பியாஜேயின் கருத்துப்படி புலன்சார் நுண்திறன்களை (பிறப்பிலிருந்து 2 வயது வரை) குழந்தைகள் கற்கின்றார்கள்.

வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பது ஒரு நெறிப்படுத்தப்பட்டதாகவுள்ளது (தலையிலிருந்து பாதம்). மற்றும் மையத்திலிருந்து வெளியே நெறிப்படுத்தப்படுகின்றது. (உதாரணம்) குழந்தைகள் முன்பு தலையை தூக்கி எழும்பி இருப்பதற்கு, நடப்பதற்கு முன்பு ஒலி எழுப்பும், குழந்தைகள் திரும்புவதற்கு முன்னர் சிறிய பொருட்களை இறுக்கிப் பிடிக்கும்.

குழந்தைப் பருவத்தில் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியினுடைய வேகம் சமமற்றதாக காணப்படும். குறிப்பாக

குழந்தைப் பருவத்தில் வளர்ச்சி கூடுதலாகவும், அபிவிருத்தி குறைவாகவும் இருக்கும் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

வளர்ச்சி விருத்தி எளிமையிலிருந்து சிக்கலை நோக்கியதாக நகரும் (உதாரணம்) நடப்பதற்கு முன்பு எழும்பி இருக்கும், குழந்தை பேச கற்பதற்கு முன்னர் மழலைமொழி பேசும்.

குறிப்பிட்ட சில பருவங்களில் உள்ள வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியானது மற்றைய பருவங்களைவிட மிகவும் சிக்கலானது. விசேடமாக கர்ப்பக்காலத்தில் முதல் மூன்று மாதங்களும் (first trimester 10-12 weeks ) மிகவும் முக்கியமானதாகும் ஏனெனில் இக்காலப் பகுதியில் கருவானது பல்வேறுபட்ட தாக்கங்களுக்கு உட்படக் கூடியது. உதாரணமாக குறிப்பிட்ட நுண்ணங்கிகள், இரசாயன பதார்த்தங்கள் தாக்கம் அல்லது மருந்துகளினால் இக்காலம் பாதிக்கப்படும்.

வளர்ச்சியும், அபிவிருத்தியும் தனி ஒரு செயல்முறையாகவுள்ளது. இது உடல், உடலியல் நுண்திறன் அறிவு, மனவெழுச்சி, சமூக அம்சங்களாக பிரிக்கக்கூடும். கடைசி மூன்று அறிவு, மனவெழுச்சிசார், சமூகம் சார் அம்சங்களை ஒன்று சேர்த்து சமூகஉளவியல் அபிவிருத்தி என கூறலாம்.

தனிநபர் வளர்ச்சி அபிவிருத்தியில் வித்தியாசங்கள் இருக்கக் கூடும். ஒரு குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் வித்தியாசங்கள் இருக்கக் கூடும். உதாரணமாக நிறை, உயரம், நடத்தல், கதைத்தல் போன்ற திறன்களில் வித்தியாசம் இருக்கலாம். மனித வளர்ச்சி அபிவிருத்தியினது எல்லா குணம்சங்களும் மிக நெருக்கமான தொடர்புடையதாவும் ஒன்றில் ஒன்று தங்யிருப்பதாவும் காணப்படும். உதாரணமாக நடத்தல் நுண்திறனை கட்டுப்படுத்தப்படும் நுண்திறன் (Motor skill) சாதாரண உடல் வளர்ச்சி உணவு, சக்தி போன்ற உடலியல் (Physical) தேவைகளில் தங்கியிருக்கும்.

**விருத்தி உளவியலின் பயன்பாடுகள்**

1. நிறமூர்த்தங்கள் தொடர்பான அறிவை வழங்குவதனால் ஆரோக்கியமான குழந்தைசார்ந்த விடயத்தில் அக்கறை கொள்ளச்செய்கின்றது.
2. ஒருவர் சாதாரண நடத்தையை அமைத்துக் கொள்வதற்கு விருத்தி உளவியல் உதவுகின்றது.
3. உடல் ரீதியாக உள ரீதியாக வளச்சியடையாதவர்கள் சாதாரனமான வளர்ச்சியை அளவுகோளாகக் கொண்டு வாழ்க்கையில் விருத்தி பெற உதவுகிறது.
4. தனது வளர்ச்சியானது வயதுக்கு ஏற்ப உள்ளதா என்பதை அவதானித்து அதன்படி செயற்பட முடிகின்றது.
5. தனது உடல் உளவளச்சியானது வயதுக்கு ஏற்ப மாற்றமடைந்துள்ளதா எனபதை அறிய உதவுகின்றது.

6. மனிதனது வாழ்க்கையின் பல கட்டங்களை எடுத்துக் கூறி ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து விளக்கமளிக்கின்றது.
7. கருவுருகின்ற பருவம், குழந்தைப்பருவம், சிறுவர் பருவம், இளையோர் பருவம், முதியோர் பருவம் பற்றி பல கோட்பாடுகளை எடுத்துக் கூறுகின்றது.
8. குழந்தைகள் பெற்றால் மட்டும் போதாது அவர்களினது உடல் உள செயற்பாட்டிலும் அக்கறை கொள்ளவைக்க இத்துறை உதவுகின்றது.
9. ஒருவரது உடலில் மட்டும் விருத்தி ஏற்படுவது விருத்தி யாகாது அது உள்ளத்திலும் விருத்தி ஏற்பட வேண்டும் என்ற அறிவைப் பெறமுடியும்.
10. வளச்சிப் பருவத்தில் ஏற்படும் சிக்கல்களை இனங்கண்டு அதற்குத் தீர்வுகாண முற்படலாம்.
11. மனித ஆளுமையில் உடல் உளப் பண்புகள் அவசியமானது அல்லது செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை அறிய முடிகின்றது.

3. பிள்ளை வளர்ச்சி

பிறந்தது முதல் பாடசாலைக் கல்வி முடியும் வரையுள்ள காலப்பகுதிக்குள் வளரும் குழுவினரே பிள்ளைகள் எனக் கல்வி உளவியலாளர்கள் கருதுகின்றனர்.கல்வியின் தலையாய நோக்கம் குழந்தையின் வளர்ச்சிக் கூறுகள் சிறந்த முறையில் விருத்தி அடைவதோடு அவற்றில் பயன்மிக்க மாற்றங்களும் தோன்றுவதற்குத் துணை செய்வதாகும். பிள்ளைகளிடம் கல்வியின்றியும் இயற்கையான வளர்ச்சி நிகழும். ஆனால் அவ்வளர்ச்சி சிறந்த முறையில் அமையமாட்டாது என்பது கல்விச் சிந்தனையாளர்களின் கருத்தாகும்.

பிள்ளை வளர்ச்சி கூறு கூறாக ஏற்படுவதில்லை அது ஒரு முழுமையான வளர்ச்சியாகும். இம்முழுமையான வளர்ச்சியில் பல கூறுகள் இணைந்துள்ளன. அவற்றை நாம் ஐந்து பிரிவுகளாக வகுத்து நோக்கலாம்.

1. உடல்வளர்ச்சி
2. உள வளர்ச்சி
3. மனவெழுச்சி வளர்ச்சி
4. சமூகம்சார் வளர்ச்சி
5. ஒழுக்க வளர்ச்சி

பிள்ளை ஒருவனிடம் பிறந்தது முதல் பதினெட்டு வயது வரை ஏற்படுகின்ற வளர்ச்சியிலேயே பெரும்பாலும் கவனம் செலுத்துகின்றது. ஆகவே பிள்ளை வளர்ச்சி என்பது வளர்ச்சிப் போக்கின் ஒவ்வொரு பருவங்களிலும் உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, சமூகம் சார் வளர்ச்சி ஆகியவற்றில் ஏற்படுகின்ற முழுமையான வளர்ச்சியையே பிள்ளை வளர்ச்சி கருதுகின்றது.

**1.** உடல் வளர்ச்சி

வயது அதிகரிக்க உடலில் ஏற்படுகின்ற மாற்றங்கள் உடல் வளர்ச்சி எனப்படும். உடல் வளர்ச்சி வேகத்திலே பிள்ளைகளிடையே வேறுபாடுகள் காணப்படும். உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களும் விருத்தியும் பிள்ளைகளுக்குப் புதிய அனுபவங்களாக அமைகின்றன. ஏனைய வளர்ச்சிக் கூறுகளின் இயல்புகளுக்கு உடல் வளர்ச்சியே அடிப்படையாக விளங்குகின்றது.

**2.** உள வளர்ச்சி

உள வளர்ச்சி என்பது நுண்மதியுடன் தொடர்புடையது. புலனுணர்ச்சி, புலக் காட்சி, கற்பனை செய்தல், ஞாபகம், கிரகித்தல், கண்டுபிடித்தல் நெறிப்படுத்தல் முதலிய உளத்திறன்கள் உள வளர்ச்சியினுள் அடங்குகின்றன. பிள்ளைகளின் வளர்ச்சிப் போக்கிலே இந்த உளத் திறன்கள் எளியவற்றிலிருந்து சிக்கலானவையாக மாற்றமடைகின்றன என்பது உளவியலாளரின் கருத்தாகும்.

**3.** மனவெழுச்சி வளர்ச்சி

மனவெழுச்சி என்பது உணர்ச்சி என்பதிலும் வேறுபாடானது. மனவெழுச்சி என்பது தூண்டல்களால் தூண்டப்படுகின்ற மனநிலையாகும். மனவெழுச்சியிலே உணர்ச்சிகளும் உடலியல் தாக்கங்களும் அடங்கியுள்ளன. மனவெழுச்சியை ஏற்படுத்துகின்ற தூண்டிகள் உடலிலேயும் மாற்றங்களை உண்டாக்கும். சினம், பயம், வெறுப்பு முதலிய உணர்ச்சிகளுக்கு உட்படுவோரிடம் கண்கள் சிவத்தல், கைகால் நடுங்கல், குரல் அடைத்துப் போதல், கண்ணீர் கசிதல் முதலிய மாற்றங்களைக் காணமுடியும். குழந்தையின் அழுகையும் உடல் அசைவுகளும் அக் குழந்தையின் மனவெழுச்சிகளையே வெளிக்காட்டுகின்றன. குழந்தை வளர்ச்சி அடைகின்ற போது மனவெழுச்சி உறுதி அடைகின்றது. ஒரு பிள்ளையின் அறிவு அனுபவங்களுக்கு ஏற்ப அதன் மனவெழுச்சி அமையும்.

ஒரு பிள்ளை கட்டிளமைப் பருவத்தை அடையும் போது அதன் மனவெழுச்சிக் கோபம், வெறுப்பு பயம், மகிழ்ச்சி, பொறாமை, அன்பு, அச்சம் எனத் தனித்தனியாக வேறுபடுகின்றது. பிள்ளையின் ஒழுக்க வளர்ச்சியில் அதன் மனவெழுச்சி வளர்ச்சி பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதை நாம் உணர்தல் வேண்டும் தூண்டிகளின் மூலம் உள்ளத்தில் எழுகின்ற உணர்வே மனவெழுச்சி எனவும் கூறலாம். மனவெழுச்சியினால் உண்டாகின்ற உள மாற்றம் இரு இயல்புகனைக் கொண்டுள்ளன. அவை

1. ஒருவனிடம் ஏற்படுகின்ற உள்ளார்ந்த மாற்றம்
2. புறத்தே தெரிகின்ற மாற்றம்

மனவெழுச்சி ஒருவனது நடத்தையில் சமநிலையற்ற நிலைமையை ஏற்படுத்துகின்றது.இது அவனை அறியாமலே செயல்கள் நடப்பதற்கு காரணமாகின்றது. இச்செயல்கள் மனவெழுச்சிகளைச் சமநிலைக்கு கொண்டு வருகின்றன. சிலர் சினம் கொள்ளும் போது பொருட்களை உடைத்தும், மற்றவர்களுடன் சண்டை பிடித்தும் தமது மனவெழுச்சி உணர்வுகளிலே சமநிலை ஏற்படுத்திக் கொள்வர்.

மனவெழுச்சி மனிதனுக்கு எந்த வயதிலும் அவசியமான உயிரியல் தேவை எனலாம். பொருத்தமற்ற மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தி அவற்றை பொருத்தமான முறையில் வெளிப்படுத்தலே மனவெழுச்சி வளர்ச்சி எனக் கூறுதல் வேண்டும்.

மனவெழுச்சிகளை இரு பிரிவகளாக வகுக்கலாம்.

1. அழிவு சார் மனவெழுச்சிகள்
2. பாதுகாப்பு மனவெழுச்சிகள்

நாம் அழிவு சார் மனவெழுச்சிகளையே நன்னெறிப்படுத்த வேண்டும். இது கல்விச் செயன்முறையின் எந்நிலையிலும் அடைய வேண்டிய ஓர் இழுக்காகும்.

மனவெழுச்சிகள் எவ்வாறு தோன்றுகின்றன?

1. சிலர் ஹோர்மோன்களின் செயற்பாடுகளினால் தோன்றுகின்றன என்பர்.
2. வேறு சிலர் நரம்புகளின் தொழிற்பாடுகளினால் தோன்றுகின்றன எனக் கருதுகின்றனர்.
3. மக்டூகலின் இயல்பூக்கக் கோட்பாட்டில் மனவெழுச்சி ஊக்கங்களுக்குப் பிரதான இடம் அளிக்கப்பட்டுள்ளது.

சினம், வெறுப்பு, பொறாமை முதலான தீங்கான மனவெழுச்சிகளினால் உளத்தாக்கங்கள் உண்டாகலாம். பிள்ளைகளிடம் தீங்கான மனவெழுச்சிகள் ஏற்படுகின்ற போது அவற்றை சீராக்கிக் கொள்வதற்காக பெரியோர் சில உளவியற் செயன்முறைகளைக் கையாளலாம்.

1. தீங்கான மனவெழுச்சிகளை ஏற்படுத்துகின்ற தூண்டிகளை நெறிப்படுத்தல் அல்லது பிரதியீடு செய்தல்.
2. உண்மையான துலங்கல்களுக்குப் பதிலாக பிழையான துலங்கல்களைக் காட்டல்
3. மனவெழுச்சிக்குக் காரணமாக செயலைப் பெரியோர் செய்து காட்டல்.
4. மனவெழுச்சிகள் தோன்றுவதற்கான காரணிகளை அகற்றுவதற்காக வேறு விடயங்களில் மனதைச் செலுத்துதல், தியானம் செய்தல் இது மனவெழுச்சிகளின் பரவலாக்கல் எனப்படும்.

**4.** சமூகம்சார் வளர்ச்சி

உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி ஆகியவற்றினின்றும் ஒருவனுடைய சமூகம் சார் வளர்ச்சியைப் பிரித்து நோக்கமுடியாது. மனிதன் ஒரு சமூகப் பிராணி. மனிதன் சமூகத்தைப் பிரிந்து தனித்து வாழ முடியாது. மனிதனது நடத்தைகள் சமூகத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. மனிதனது சமூகம்சார் வளர்ச்சி என்பது அவன் வாழுகின்ற சமூகத்தில் பிணக்கின்றி இணக்கமாக வாழ்தற்குரிய அறிவு, திறன், மனப்பாங்கு, மனவெழுச்சிகள் ஆகியவற்றைத் தன்னுள்ளே வளர்த்துக்கொள்வதாகும். தான் வாழும் சமூகத்தின் வாழ்க்கை விழுமியங்கள், பண்பாட்டுக் கோலங்கள் அறநெறி, ஒழுக்கவிதிகள் சமூக உறவுகள் ஆகியவற்றிற்கு இணங்க அச்சமூகத்தோடு பொருத்தப்பாடு அடைந்து வாழ்வதற்கேற்ப உள்ளார்ந்த வளர்ச்சிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**5.** ஒழுக்க வளர்ச்சி

ஒழுக்க வளர்ச்சியானது சமூக வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புடையது. ஒழுக்க வளர்ச்சிக்கு சமூகநெறி, சுய கட்டுப்பாட்டுத்திறன் என்பன துணைபுரிவன. ஒழுக்கம் என்பது அறநெறி அடிப்படையிலான சமூக விழுமியங்களைக் கொண்டு மதிப்பீடு செய்யத் தக்க நடத்தை இயல்புகளாகும். நடத்தை வளர்ச்சி ஒழுங்காக நடைபெற்றால் மாத்திரமே ஒருவன் பண்பாளனாகவும் சமூக ஒழுக்கங்களையும் விழுமியங்களையும் நியமங்களையும் மதிப்பவனாகவும் சமூகத்தோடு பொருத்தப்பாடு அடையக் கூடியவனாகவும் உருவாக முடியும்.

இத்தகைய குணப்பண்புகளை விருத்தி செய்வதற்கு சமயநெறிக்கோட்பாடுகளை பயன்படுத்த முடியும். அதன் காரணமாகவே பாடசாலைக் கல்வியிலே சமயக் கல்விக்கு முக்கியத்தவம் அளிக்கப்பட்டுள்ளது. பிள்ளைகளிடம் ஒழுக்க வளர்ச்சியை ஏற்படுத்தவதற்கு புகழ்தல் வெகுமதி போன்று தண்டனை, பொருட்படுத்தாது விடுதல் முதலிய நுட்ப முறைகளைக் கையாளலாம்.

3.1 குழந்தைகளின் விருத்தி நிலைசார் கோட்பாடுகள்:

a. பியாஜே
b. எரிக் எரிக்சன்,
c. சிக்மன் புறைட்

**1. பிள்ளை வளர்ச்சி பற்றிய பியாஜேயின் கோட்பாடு**

ஜீன் பியாஜே தமது மூன்று பிள்ளைகளின் வளர்ச்சியை குழந்தைப் பருவம் முதல் கட்டிளமைப் பருவம் வரை அவதானித்து அறிந்து கொண்டார். குழந்தைகளிடம் மொழி, சிந்தனை, தீர்ப்பளித்தல், நியாயங்காணல் முதலிய உளத் தொழிற்பாடுகளும் எண்கள் , நேரம், இடவெளி, வேகம், பரப்பு, கனஅளவு ஆகிய எண்ணக்கருக்களும் எவ்வாறு வளர்ச்சி அடைகின்றதென ஆய்வு செய்தார்.

பிள்ளை வளர்ச்சி பற்றி கோட்பாடுகளுள் இவரது கோட்பாடு முதன்மை பெற்றுள்ளது. இவரது கோட்பாடு பிள்ளை வளர்ச்சியில் அதன் அறிவு வளர்ச்சி பற்றிய கோட்பாடாகும். இக் கோட்பாடு ஏனைய பிள்ளை வளர்ச்சி பற்றிய கோட்பாடுகளிலிருந்தும் வேறுபட்டது. சூழலுடன் ஏற்படுகின்ற தாக்கத்தால் நுண்மதி விருத்தியடைகிறதென இவர் கூறுகின்றார்.

எல்லா உயிரினங்களின் சிந்தனை இரண்டு அடிப்படையான செயன்முறைகளைக் கொண்டுள்ளது.

1. சூழலுக்கேற்பத் தழுவல்
2. புலக்காட்சி, ஞாபகம், நியாயங்காணல், ஆகிய உளத்தொழிற்பாடுகள் மூலம் பெறும் அனுபவங்களை ஒழுங்கமைத்தல்

மனித இனத்தில் ஒரு குழந்தை தனது வளர்ச்சிப் போக்கில் எதிர்ப்படுகின்ற பல்வகையான சூழல்களுக்கும் பொருந்தி வாழ்வதுடன் அச் சூழல்களின் சிக்கலான தன்மைகளுக்கு தனது நுண்மதி மூலம் ஒழுங்கான அமைப்பைக் கொடுத்து விளக்கம் பெறுகிறது – என்பது பியாஜேயின் அறிவு வளர்ச்சி பற்றிய கோட்பாடாகும்.

**சிந்தனை வளர்ச்சிப் பற்றி பியாஜேயின் கருத்துக்கள்**

ஜீன்பியாஜே இவர் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்தவர். சிறந்த உளவியலாளர். சிந்தனை பற்றி புதிய கருத்துக்களை வெளியிட்டுப் புகழ்பெற்றவர். சிந்தனைப் பற்றி மருத்துவ முறையில் ஆய்வுகளை நடத்தித் தமது முடிவுகளை வெளியிட்டார். இவரது மருத்துவ முறை பிள்ளைகளுடன் அளவளாவுதலே. இவர் முதலில் தமது மூன்று பிள்ளைகளிலே ஆய்வு நடாத்தினார். இவர்களது வளர்ச்சியை, குழந்தைப் பருவம் முதல் கட்டிளமைப் பருவம் வரை அவதானித்து அறிந்து கொண்டார். பின்னர் தமது துணை ஆய்வாளர்களுடன் இணைந்து,

1. மாணவரிடம் மொழி சிந்தனை, திர்ப்பளித்தல், நியாயங்காணல் ஆகிய உளத் தொழிற்பாடுகளும்.
2. எண்கள், நேரம், இடவெளி, வேகம், பரப்பு, கனவளவு போன்ற எண்ணக் கருத்துக்களும் எவ்வாறு வளர்ச்சி அடைகின்றவென ஆராய்ந்தார்.

**பியாஜேயின் சிந்தனைமுறை பற்றிய கோட்பாடு**

இவரது கோட்பாடு எல்லா உயிரினங்களினதும் சிந்தனை, இரண்டு அடிப்படையான செயன் முறைகளைக் கொண்டுள்ளது. என விளங்குகின்றது. அவை

1. சூழலுக்கேற்பத் தழுவல்

2. அனுபவங்களை ஒழுங்கமைத்தல், புலக்காட்சி, ஞாபகம், நியாயங்காணல் முதலிய உளத் தொழிற்பாடுகள் மூலமே இது நிகழ்கின்றது.

தாழ்ந்த உயிரினங்களில் சூழலுக்கேற்ற தழுவுதிறன் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதுடன் நின்றுவிடுகின்றது. அனுபவங்களை ஒழுங்கமைத்தலில் அவை சிறிதும் வளர்ச்சி பெறாத நிலையிலே உள்ளன. ஆனால், மனித இனத்தில் ஒரு குழந்தை தனது வளர்ச்சிப் போக்கில் ஏற்படுகின்ற பல்வகைச் சூழலுக்கும் பொருந்தி வாழ்வதுடன், அச் சூழலின் சிக்கல் நிறைந்த இயல்புகளுக்கு ஒழுங்கான அமைப்பைக் கொடுத்து விளக்கம் பெறுகிறது.

**திரளமைப்பு (அனுபவத் திரளமைப்பு)**

குழந்தைகள் பிறந்த சில நாட்களில் தமது வாயில் கிடைக்கும் எப் பொருட்களையும் சுவைத்தல், தமது கையிலே அகப்படுவனவற்றை இறுகப்பிடித்தல் ஆகிய தொழிற்பாடுகளினால் தமது சூழலுக்கு அமைப்புக் கொடுக்கின்ற திறனை வளர்த்துக்கொள்கின்றனர். இவர் தமது சூழலுடன் தூண்டற்பேறு பெறும்வகையில் தமது தொழிற்பாடுகளில் ஓர் ஒழுங்கையும் நடத்தையும் ஓர் அமைப்பையும் கட்டியெழுப்புகின்றனர். இவ்விதம் குழந்தைகள் சூழலுடன் இடைவினையாற்றி தமக்கென ஒரு நடத்தைக் கோலத்தை அல்லது சிந்தனை முறையில் ஓர் ஒழுங்கைக் கட்டியெழுப்புகின்றனர். இவை வரையறுக்கப்பட்டு பல சந்தர்ப்பங்களில் மீட்டல் செய்யப்பட்டு அல்லது இன்னதென அறியப்பட்டுப் பிரயோகிக்கப்படுகின்றன. இத்தகைய நடத்தைக் கோலங்களையே பியாஜே 'திரளமைப்பு' என அழைக்கின்றார். இவ்வாறு திரளமைப்புக்கள் வளர்ச்சியடையத் தொடங்கியதும் அவற்றை ஒவ்வொரு புதிய நிலையிலும் அவர்கள் பிரயோகிப்பர் இதன் விளைவாகவே குழந்தைகளின் சிந்தனைத் தொழிற்பாடுகள் வளர்ச்சியடைகின்றன.

**சிந்தனையும் திரளமைப்பும்**

திரளமைப்பு என்பதை உளவியலில் ஹெட் என்பவர் அறிமுகஞ்செய்தார். இவரின் கருத்தையே பியாஜே, பாட்லெட், பாவ்லோவ் ஆகியோரும் ஆதரித்தனர் திரளமைப்பு என்பதற்கு எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரைவிலக்கணம் இல்லை. திரளமைப்பு என்பது பெரும்பாலும் பழைய அனுபவங்களைக் கொண்ட ஒரு தொப்பு இது எல்லா தூண்டற்பேறுகளிலும் உள்ளது. அது எழுந்தவாறு அமையாத கூட்டான தன்மைகொண்ட ஒரு நடத்தையே குறிக்கும்.

**சிந்தனைசார் தொழிற்பாடு**

1. தன்மயமாக்கல்

2. தன்னமைவாக்கல் ஆகிய இரு அடிப்படைத் தொழிற்பாடகளைப் பொறுத்தே அமைகின்றது.

**தன்மயமாக்கல்**

குழந்தை சூழலில் உள்ள ஏதேனும் ஒரு பொருளை எதிர்ப்படும் போது தனது அறிவாற்றலின் தொழிற்பாட்டினால் அதற்கு ஏதேனும் ஓர் அமைப்பைக் கொடுப்பதே தன்மயமாக்கல் ஆகும். அப்போது குழந்தை தான் முன்னர் ஆக்கிய அனுபவத் திரளமைப்பில் அப்புது அனுபவத்தை உறிஞ்சி எடுக்கின்றது. குழந்தை தனது சூழலை ஆராயும் போது சுவைத்தல், இறுகப்பிடித்தல், ஆட்டுதல் போன்ற செயல்கள் மூலம் தன்மையாக்கல் நிகழ்கின்றது.

**தனன்மைவாக்கல்**

சில வேளைகளில் குழந்தையிடம் ஏற்கனவேயுள்ள திரளமைப்பில் பொருந்தமுடியாத அனுபவங்கள் எதிர்ப்படக்கூடும் அப்போது அக்குழந்தை தனது திரளமைப்பைத் திருத்தியமைத்து இப்புதிய அனுபவங்களை அதனுள் இயைபபடுத்த முயல்கின்றது. இவ்வாறு புதிய அனுபவங்களுக்கேற்ப திரளமைப்பை மாற்றி அமைப்பதே தன்மைவாக்கல் ஆகும்.

தன்மைவாக்கலின் போது ஒருவன் முயற்சித்தல், முயன்று தவறுதல், பரிசோதனை செய்தல், வினாவுதல், பிரச்சினை தீர்த்தல் போன்ற தொழிற்பாடுகளைக் கையாள்கின்றான்இ அதன் விளைவாக தனது அனுபவத் திரளமைப்பில் சிலவற்றை ஒன்று சேர்த்து புதிய திரளமைப்புக்களைப் பெறுகின்றான்.

தன்மயமாக்கலும் தன்மைவாக்கலும் ஒன்றையொன்று தழுவிய தொழிற்பாடுகளாகும் இவை இரண்டும் உயிரியல் சமநிலையையும் சமனற்ற நிலையையும் மாறி மாறி ஏற்படுத்திக் கொண்டேயிருக்கின்றன. பிள்ளையின் அறிவாற்றல் முதிர்வடையும் போது சமநிலைகளே அதிக அளவில் இடம்பெறுகின்றன என்று கருதப்படுகின்றது.

சிந்தனையின் பின் திரும்புமியல்பு

ஒரு பிரச்சினையை விடுவிக்கும் போது ஒருவர் சிந்திக்க ஆரம்பித்த நிலைக்குப் பின்னோக்கிச் சென்று சிந்திக்க வேண்டியுள்ளான். ஒரு பாத்திரத்திலுள்ள நீரை இன்னொரு உயரமான பாத்திரத்தினுள் ஊற்றினால் நீரின் உயரம் வேறாகத் தோன்றும் அப்போது அந்த கன அளவு மாறிவிட்டதா எனச் சிந்திக்கும் பிள்ளை தனது சிந்திக்கும் தன்மையைப் பின் திருப்பவேண்டியுள்ளான். சிந்தனையிலே அந்நீரை முந்திய பாத்திரத்தினுள் ஊற்றினால் என்ன நிகழும் என்று அனுமானம் செய்கிறான். இதனையே சிந்தனையின் பின் திரும்புமியல்பு எனப் பியாஜே கருதுகின்றார்.

**உளவளர்ச்சிப் (சிந்தனைவளர்ச்சி) பருவங்கள்**

குழந்தை பிறந்தது முதல் கட்டிளமைப்பருவம் வரை உளவளர்ச்சியானது பல வருடங்களினூடாக ஒழுங்கான முறையிலே மாற்றம் அடைகின்றது. ஒரு பருவத்திலுள்ள உள வளர்ச்சியின் இயல்பிலிருந்து ஆரம்பிக்கின்றது. இவ்வாறு தொடர்ச்சியாக ஓர் ஏறு நிரலில் உளத்திறன் வளர்ச்சியடைகின்றது. ஒவ்வொரு நிலையிலும் புதிய வகையான ண்ணக்கருக்கள் பெறப்படுகின்றன. என்பது பியாஜேயின் கருத்தாகும். பியாஜேயும் அவரது துணை ஆராய்ச்சியாளரான இல்ஹைடரும் இப்பருவங்களை வகுத்துக்காட்ட பெருந்தொகையான அவதானிப்புக்களையும் பரிசோதனைகளையும் நடத்தினர்

**உளவளரச்சிப் பருவங்கள்**

பியாஜே பல உப பிரிவுகளைக் கொண்ட நான்கு முக்கிய பருவங்களாக வகுத்துள்ளார் அவை

1. புலன் இயக்கப்பருவம் - வயது – பிறப்பு முதல் இரண்டு ஆண்டுகள்
2. தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம் - வயது – 2 – 7 ஆண்டுகள்
3. தூல சிந்தனைப் பருவம் - வயது – 7 - 12 ஆண்டுகள்
4. நியமச் சிந்தனைப் பருவம் - வயது – 12 – 15 ஆண்டுகள்

**1. புலன் இயக்கப்பருவம்**

பியாஜே இப்பருவம் தொடர்பான விபரங்களைத் தமது மூன்று குழந்தைகளையும் அவதானித்துப் பெற்றார். அவர் இப்பருவத்தை ஆறு உப பிரிவுகளாகப் பிரிக்கின்றார். இப்பருவத்தில் குழந்தை இயக்கச் செயல்களையே செய்வான். இவை அவனது புலனுணர்ச்சிகளிலேயே தங்கியுள்ளன. இப்பருவத்தில் மொழி பேச்சு என்பன மிகக் குறைவானதால் கருத்து நிலை உளத் தொழிற்பாடுகளும் குறைவு.

உப பிரிவுகளும் புலன் இயக்கங்களும்

1. பிறந்தது முதல் - 1 மாதம் வரை குழந்தை பிறந்து முப்பது நிமிடங்களில் தனது கைகளைச் சுவைக்கின்றது. பின்னர் தனது புலன் உணர்வின் தூண்டற் பேறுகளினுள் புதியனவற்றைத் தன்மயமாக்கி இயக்கங்களினாலான ஓர அனுபவத் திரளமைப்பை ஆக்குகின்றது.
2. 1 மாதம் - 3 மாதம் வரை ஒரு மாதத்தின் பின்னர் குழந்தை தனது வாய், கை, உடல் ஆகியவற்றின் அசைவுகளை இணைத்துத் தான் விரும்பிய வேளைகளில் விரலைச் சுவைத்தல் போன்ற வேலைகளைச் செய்கின்றது. இவ்வாறே புலன்களை இணைத்துச் செயலாற்றுகின்றது. ஆனால் ஒவ்வொரு புலன் மூலம் பெறும் புலக்காட்சிகள் வெவ்வேறாகவே காணப்படுகின்றன.
3. 3-8 மாதம் வரை இப்பருவத்தில் புலனுறுப்புக்களை இணைத்து பொருட்கள் சில உருவங்களை நிரந்தரமாகக் கொண்டுள்ள தன்மையை அறிகின்றனர்.

4. 8-12 மாதம் வரை - இப்பருவத்தில் இரண்டு அல்லது மூன்று திரளமைப்புகளை இணைத்து புதிய அனுபவங்களைப் பெறுவர்.
5. 12-15 மாதம் வரை - இப்பருவத்தில் இடம், காலம், பொருள்கள் பற்றிய எண்ணக்கருக்கள் ஆரம்பமாகின்றன. மறைந்த பொருட்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஆற்றல் ஆரம்பமாகும். 15 – ஆம் மாதமளவில் புதிய சூழ்நிலைகளுக்கேற்ப தன்னமைவாக்கம் பெற்றுப் புதிய பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனைப் பெறுவர்.
6. 15 – 18 மாதம் இரண்டு ஆண்டுவரை - இப்பருவத்திலே புலனியக்கச் செயல்களுக்குப் பதிலாக உளச் செயல்கள் ஆரம்பிக்கின்றன. ஞாபகம், விம்பவாக்கம், குறியீட்டுத் தன்மைகள் போன்றன வளர்ச்சி அடையும்.

**2. தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம் - (2 - 7 வயது)**

இது புலனியக்கப் பருவத்துக்கும் தூல சிந்தனைப் பருவத்துக்கும் இடையில் ஒரு நிலைமாறு பருவமாகும். பரந்த அளவு வளர்ச்சிப் பண்புகளைக் கொண்டுள்ளது. குழந்தைகள் குறியீடுகளைப் பயன்படுத்தவும் கருத்து நிலை எண்ணங்களை வெளிப்படுத்தவும் ஆரம்பிக்கின்றனர். இப்பருவத்தைப் பியாஜே இரண்டாக வகைப்படுத்தியுள்ளார்.

**அ. எண்ணக்கருவுக்கு முற்பட்ட பருவம் 2 – 4 1/2**
**ஆ. உள்ளுணர்வுப் பருவம் 4 1/2 – 7 வயது**

அ. எண்ணக்கருவுக்கு முற்பட்ட பருவம் 2 – 4 1/2
இப்பருவத்தில் செயல்களில் குறியீட்டைப் பயன்படுத்தும் ஆற்றல் அதிவிரைவாகவும் பரந்த அளவிலும் வளர்ச்சி அடைகின்றது.
இதற்கு மொழி வளர்ச்சி துணைபுரிகின்றது.
மொழி உதவியுடன் கடந்தகால நிகழ்வுகளை ஞாபகப்படுத்தவும், செயல்கள், பொருட்களை விளங்கவும் விபரிக்கவும் திறன் பெறுவர்.
பாவனை செய்வதன் மூலம் புதிய அனுபவங்களைத் தன்னமைவாக்கிக் கொள்கின்றனர்.
சிந்தனையில் தர்க்க முறையோ, தொகுத்தறி உய்த்தறி முறையோ இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக அசைவுகளை உயிர் என்பதற்கு ஆதாரமாகக் கொண்டு சிந்திப்பர். இதை பியாஜே குறுக்குச் சிந்தனை என்பார்.

ஆ. உள்ளுணர்வுப் பருவம் 4 1/2 – 7 வயது

இப்பருவத்தில் பிள்ளைகள் தமது செயல்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் காரணங்களைக் கண்டு சில எண்ணக்கருக்களைப் பெறுகின்றனர். ஆனால் சரியான முறையில் சிந்திக்க முடிவதில்லை கருத்து நிலையில் ஒப்பிட்டு நோக்கும் ஆற்றல் இருப்பதில்லை ஆனால் காட்சி நிலையிலே ஒரு நேரத்தில் ஒரு தொடர்பை மாத்திரம் ஒப்பிட்டு நோக்கக் கூடியவர்களாக

உள்ளர். சிந்தனை தன்முனைப்பு மையமாக உள்ளது. அதாவது தனது அனுபவத்துக்கு ஏற்ற பிறரின் செயல்களைப் புரிந்து கொள்கின்றனர் இப்பருவத்தில் கற்பசைன் சிந்தனை குறையத் தொடங்கும். பிள்ளைகள் உண்மை நிலைகளைப் பாவனை செய்வர்.

குழந்தை ஒரு நேரத்தில் இரண்டு பொருட்களை மாத்திரமே ஒப்பிடும் அதனால் , அண்மை, பிரிவு, தொடர்ச்சி போன்ற எண்ணக்கருக்களை விளக்கிக் கொள்ளும்.

3. தூல சிந்தனைப் பருவம் - பருப் பொருட் சிந்தனைப் பருவம் (7 – 11 வயது வரை )

இப்பருவத்திலே, காலம், இடம், கனவளவு, எண்ணிக்கை, ஒழுக்கம் ஆகியவற்றின் எண்ணக்கருவாக்கத்திலும் தருக்க சிந்தனையிலும் முக்கிய மாற்றம் நிகழ்கின்றது. நிகழ்ச்சிகள் உளச் செயல்களாக சிந்தனையில் இடம் பெறுகின்றன. சிக்கலான தொடர்புகளைப் பற்றிய விளக்கத்தைப் பெற்று இரண்டு அல்லது மூன்று தன்மைகளைப் கொண்டு பொருட்களை நிரற்படுத்தவர். முழுப்பொருட்களுடன் அதன் பகுதிகள் கொண்ட தொடர்புகளை விளக்குவர். கருத்து நிலையில் சிந்திக்க முடியாதுள்ளனர். விதிமுறைகள், கருதுகோள்கள் ஆகியவற்றில் இடர்பாடு கொண்டுள்ளனர். பொது விதி காண்பதிலும் தரவுக்கு அப்பால் அனுமானம் செய்வதிலும் கருத்துநிலைப் பிரச்சினைகளை விடுவிப்பதிலும் முதிர்வடையாதுள்ளனர். நீளம், பரப்பு, கோணங்கள் பற்றிய எண்ணக்கருக்கள் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. அநேகமாக பிள்ளைகள் ஏறு வரிசையில் அல்லது இறங்கு வரிசையில் நிலைகளை அமைக்கவும் ஒத்த பண்புகளை அவதானிக்கவும் திறன் பெறுவர்.

4. நியமச் சிந்தனைப் பருவம் (11 – 12 வயது – 15 வயது வரை)

இப் பருவத்திலே பிள்ளைகள் சமூக வாழ்க்கையிலும் கருத்துப் பரிமாற்றங்களிலும் ஈடுபடுவர். ஆகவே கருது கோள்களை அமைத்துச் சிந்திக்கும் திறன் பெறுகின்றனர். கொள்கைகளை உருவாக்குகின்றனர். விதிமுறைகள், ஒழுக்க விதிகள் பற்றிய மனப்பான்மைகள் மாறுபடுகின்றன. அவர்களின் அறநெறித்தீர்ப்பு நெகிழ்ச்சி உடையதாகவும் தீவிரப் போக்குடையதாகவும் மாறுகின்றது. இப்பருவத்திலே அவர்களின் திறன்கள் பரந்தளவில் விரிவடைகின்றன. கருது கோள்களைப் பெறுதல், எடுகொள்களை உருவாக்குதல் அவற்றை பரிட்சித்தல், பொதுத்தன்மைகளைக் காண முயற்சித்தல், கற்பனை அமைப்புக்களைக் கண்டுபிடித்தல் தமது தீர்ப்புக்களுக்கு தர்க்க ரீதியான நியாயங்களை வெளிப்படுத்தல் போன்ற பல்வேறு திறன்கள் இப் பருவத்தில் வளர்ச்சி அடைகின்றன.

பியாஜேயின் கருத்துக்களின் பயன்கள்

1. முன்பள்ளிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம் பற்றிய பியாஜேயின் கருத்துக்களை அறிந்து இருப்பதனால் கற்பித்தலைத் திறம்படச் செய்ய முடியும்.
2. ஆரம்ப இடைநிலைப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நியமச் சிந்தனைப் பருவம் பற்றிய பியாஜேயின் ஆய்வுகள் பயன் அளிக்கக் கூடியது.
3. சிந்தனை வளர்ச்சி பற்றிய ஆய்வுகளில் இவரின் பங்களிப்புமுதன்மை வாய்ந்தது. பிள்ளையின் அறிவு வளர்ச்சி பற்றி அறிய விரும்பும் எவரும் இவரது கருத்துக்களை அலட்சியம் செய்ய முடியாது.
4. குழந்தைகளின் உள வளர்ச்சிப் படிகளை அறிந்து அதற்கேற்ப கற்பித்தல் முறைகளைப் பிரயோகிக்க இவரது கருத்துக்கள் மிக்க பயனுடையன.
5. ஆரம்பப் பாடசாலைகளில் உள்ள பிள்ளைகள் உள்ளுணர்வுப் பருவம், தூல சிந்தனைப் பருவம் ஆகிய வளர்ச்சிப் படிகளில் இருப்பர். இப் பருவங்கள் பற்றிய பியாஜேயின் கருத்துக்கள் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தலுக்குப் பெருந்துணை புரியும்.
6. அவரின் ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி பிள்ளைகளின் சிந்தனை வளர்ச்சி அவர்கள் கற்பதற்கு வேண்டிய முதிர்ச்சி விசேட கல்வி உளச்சார்பு போன்றவற்றை மதிப்பிட முடியாது.
7. கலைத்திட்டம் வகுப்பதில் அவரது கருத்துக்கள் அதிகளவில் பயன்படக்கூடியன.
8. பியாஜேயின் கருத்துக்களைப் பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் சூழ்நிலையைக் கல்வியலாளர் அமைத்துக் கொள்ளலாம்.

## 3. எரிக் எரிக்சனின் விருத்தி நிலைகள்பற்றிய கோட்பாடுகள்

எரிக் எரிக்சன் ஒரு உளவியல் பகுப்பாய்வாளர் ஆவார். (1902-1994) எரிக்சன் படிநிலை கோட்பாடு, தனி நபரின் உயிரியல் வலிமை, மற்றும் சமூக கலாசார வலிமை ஏற்பாட்டு செயல்பாடாக எட்டு வாழ்க்கை படிநிலைகள் மூலம் முன்னெடுத்து அந்நபரின் முற்னேற்றம் பற்றி குறிப்பிட்டுள்ளார். ஒருவர் மற்றவர்களுடன் கொண்டிருக்கும் உறவுகளே சமூக வளர்ச்சி எனப்படும். இது வளரும் சூழல் , ஏற்படும் அனுபவங்களை பொறுத்தே வயதின் அடிப்படையில் பல படிநிலையில் அமைகின்றது. ஒவ்வொரு கால கட்டங்களிலும் மெல்ல மெல்ல பல்வேறு உளச்சிக்கல்களை தீர்வு செய்து கொள்ளும் பங்குகளில் அதிக ஆளுமை வளர்கின்றது. ஒவ்வொரு படிநிலையும் முன்னைய படிநிலையின் வெற்றிகரமான நிறைவில் தான் கட்டப்படுகின்றன. வெற்றிகரமாக நிறைவேறாத படிநிலைகளின் சவால்கள் எதிர்காலத்தில் பிரச்சினைகளாக மீண்டும் தோன்ற வாய்ப்புள்ளது. இருந்த போதிலும் ஒரு படிநிலையின் தேர்ச்சியானது அடுத்த படிநிலைக்கு முன்னேற தேவைப்படுவதில்லை.

இவரின் எட்டுபடிநிலைகளும் பின்வருமாறு.

1. நம்பிக்கை: அடிப்படை நம்பிக்கை எதிர் அவநம்பிக்கை (பிறப்பு – 2 வயது)

பிறப்பு முதல் 2 வயது வரையுள்ள குழந்தை பருவம். பிள்ளைகளின் அடிப்படை நம்பிக்கை உணர்வை விருத்தி செய்யும் காலம் இதுவாகும். ஒரு பிள்ளையிடத்தில் ஆளுமை வளர வேண்டுமாயின் நம்பிக்கை ஏற்பட வேண்டும். இவர்களின் தேவைகளான உணவு, உடை, ஓய்வு கிடைக்கும் போது நம்பிக்கை ஏற்படுகிறது. பெற்றோர் சூழவுள்ளோர் மேல் நம்பிக்கை வைத்து தனது பாதுகாப்பான இடமாக இவ்வுலகை அடையாளப்படுத்துகிறது. தனது தேவைகள் நிறைவேறாத போதும், போதாமலிருக்கும் போதும் தமக்குள் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திக் கொள்வர்.இதன் விளைவுகள் ஒத்துழையாமை, மனச்சோர்வு, பின்வாங்கல் போன்ற நடத்தைகளில் வெளிக்காட்டப்படும்.

2. விருப்பம்: தன்னாட்சி எதிர் வெட்கம் மற்றும் சந்தேகம் (2 - 4 வயது)

இது துள்ளு நடை பருவம். குழந்தைகள் அவர்களின் உடல்களின் மீது கட்டுப்பாட்டை செலுத்துவதற்கு ஆரம்பிப்பர். ஆடையணியும் பயிற்சி ஆரம்பமாகும். தான் ஒரு சுதந்திரமானவன் எனவும் முக்கியமான விடயங்களில் ஏனையோரின் உதவியையும் வழிகாட்டலையும் தன்னால் பயன்படுத்த முடியும் என கருதும்.உணவு உட்கொள்ளல் கழிவகற்றல் போன்றவற்றில் தானே ஈடுபட எத்தனிக்கின்றது. வலுவான உளநிலையை கொண்டிருப்பினும் வலுவான உடல்நிலை இல்லாமையால் தனக்குள் மனவிரக்தி, தோல்வி போன்ற உணர்வுகளை பெறுகிறது. ஏதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாது போனால் உளப்பிணி அல்லது வழமைக்கு புறம்பான நடத்தைகளில் ஈடுபடுவர்

3. நோக்கம்: முயற்சித்தல் எதிர் குற்றவுணர்வு (4-5 வயது)

இப்பருவமானது நான்கு வயது முதல் ஐந்து வயது வரை முன்பள்ளி பருவம் இதுவாகும்.இப்பருவத்துப் பிள்ளைகள் முதியவர்கள் போலச் செயற்பட ஆரம்பிப்பர்.போட்டிகளை விரும்பி அதில் வெற்றி அடையும் போது சந்தோஷமடைவர். தனது ஆற்றல் எல்லைகளுக்கு அப்பால் சென்று செயல்புரிய விரும்புவர். இவ்வார்வங்களில் தோல்வியேற்படும் போது அவர்களிடையே குற்றவுணர்வு ஏற்படும். இது ஆளுமை விருத்தியை பாதிப்பதாக காணப்படும். இப்பருவம் முக்கியமாக கையாளப்பட வேண்டிய பருவமாகும். விளையாட்டு இக்காலப்பகுதியில் முக்கியமானதாகும் என்கிறார் எரிக்சன்.

4. திறமை: முயற்சி எதிர்தாழ்வு சிக்கல் (5-12 வயது)

இப்பருவமானது பள்ளிப்பருவம். முதல் மூன்று விருத்திகளும் சரியாக அமையும் போது இப்பருவம் சிறப்பாக அமையும். இது ஒரு சந்தோஷமான கற்பனை பருவம். பிள்ளை வன்முறைக்கு செல்லாததும், அமைதியும், சரியான வளர்ச்சியும் கொண்ட பருவமாகும். இப்பருவத்தில் அறிவு, திறன்,

மனித உறவுகள், விளையாட்டு, ஒற்றுமை போன்றவற்றோடு பிள்ளை தொடர்புபட்டு காணப்படும். குடும்பத்திற்கு அப்பாலும் அறிவு, கலாசார திறன்களை பெறுவதில் ஈடுபடுவர். தம் பணிகளை செய்வதற்குரிய அறிவை தேடுவர். அத்தேவை நிறைவு பெறாவிடின் தாழ்வு மனப்பாங்கு ஏற்படும். இதில் பெற்றோர், பாடசாலை கவனம் செலுத்த வேண்டும்.

5. மெய்ப்பற்று: அடையாளம் எதிர் அடையாளக் குழப்பம் (13 - 19 வயது)

இப்பருவமானது 13 வயது 19 வயது வரையுள்ள முன் கட்டிளமைப் பருவம் இதுவாகும்.பிள்ளையானது தனது பலம், பலவீனம், இலக்கு, தொழில், பால் வகிபங்கு என தன் இயல்புகளைப் பற்றி அறிவையும் விளக்கத்தையும் பெறுகிறது இதனை விளக்க எரிக்சன் அடையாள நெருக்கடி என்ற பதத்தினை விஷேடமாக பயன்படுத்துகின்றார். இப்பருவத்து பிள்ளையிடம் உடலியல் மாற்றங்களும் மனவெழுச்சி சார் விளைவுகளும் ஏற்படுவதால் பல நெருக்கடிகளையும் குழப்பங்களையும் எதிர்கொள்வர். இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணுவது அவசியமாகும். இல்லையேல் பிள்ளையின் சுய அடையாளம் கரைந்து அவனை நெறி பிறழ்பவனாக மாற்றிவிடும்.

6. அன்பு: நெருக்கம் எதிர் தனிமை ( 20- 24 வயது)

இப்பருவமானது 20 வயது தொடக்கம் 24 வயது வரையுள்ள இள வளர்ந்தோர் பருவம் இதுவாகும். இப்படிநிலையில் பிள்ளைகள் பிறரிடம் நேசமாதல் வளர்ச்சியடையும். ஓத்த பாலாருடனோ, எதிர்பாலாருடனோ, தன்னுடைய சுயத்துடனோ நேசம் ஏற்படலாம். இதுவரை இடம்பெற்ற படிநிலையான ஆளுமை விருத்தி போதுமானவையாக அமையாதவிடத்து நேச உணர்வினை பிள்ளையால் அடையமுடியாது போகும். இதனால் பிள்ளை ஒதுங்க தொடங்கும். பாலியல் நேசம் என்பது நேசத்தின் தூரத்தில் வைத்தே எரிக்சனால் நோக்கப்படுகின்றது.பிள்ளை தனது சிந்தனை, உணர்வு, செயற்பாடு போன்றவற்றையெல்லாம் மற்றவர்களோடு பரிமாறிக்கொள்வது இந்த நேசத்தினாலேயாகும்.

7. கவனம்: உற்பத்தி எதிர் தேக்கம் (25 - 64 வயது)

நடுவளர்ந்தோர் பருவம் இதுவாகும்.நமக்கும் சமூகத்திற்கும் பயனுடைய ஆற்றலே உற்பத்தி என கருதப்படும்.இவ்வயதினர் உற்பத்தி செயற்பாடுகளில் முன்நிற்பர. ஆளுமை நிறையுணர்வினை நோக்கியதான படைப்பும் இங்கு உருவாகும்.இப்பருவத்தினருக்கு பொதுவாக உலகில் நல்லதோர் இடத்தினை அடைய முடியும். நல்லறிஞர்களாக விளங்கும் இவர்கள் தமக்குள் அறிவினைப் பகிர்ந்து கொள்வதுடன், வாழ்க்கையில் தத்துவத்தினையும் பகிர்ந்து கொள்வர். இனவிருத்தியிலும் பொருளாதார விருத்தியிலும் அக்கறை செலுத்தும் இப்பருவத்தினர் சமூகத்திலே கௌரவமான ஒரு இடத்தினை எதிர்ப்பார்ப்பர். இவ்வாறான உற்பத்தி நிலையை அடைய முடியாது போனால் அவர்களிடையே தேக்கம்-அசைவற்ற தன்மை காணப்படும். இது அவர்களிடையே சலிப்பை ஏற்படுத்துவதோடு தங்களால் சமூக நலனுக்கு உதவமுடியாமையின் தன்மையினையும் உணர்த்தும்.

8. ஞானம்: மன முழுமை எதிர் மன தளர்ச்சி (65- இறப்பு)

இப்பருவமானது 65 வயதிற்கு மேற்பட்ட முதிர்பருவம் இதுவாகும். வுாழ்வின் இறுதியை நோக்கிய நிலையில் நபர்கள் தமது வாழ்வில் சந்தித்த வெற்றிகளையும் தோல்விகளையும் வயது முதிர்ச்சியையும் இயல்புகளையும் ஏற்றுக்கொள்ளும் நிலைப்பாடு இப்பருவத்துக்குறிய இயல்பாகும். முதல் ஏழு பருவங்களையும் தீர்மானிப்பதில் வெற்றியடைந்த இவர்கள் சொந்த மேலாண்மையை அடைவர். இவர்கள் பிற மக்களுடைய கலாசாரம், எதிர்கால தலைமுறையினர் என்பவர்களோடு உறவுகளைஏற்படுத்துவர் . தம் வாழவை பின்னோக்கி பார்த்து தாம் பிழையான தீர்மானத்தை எடுத்ததாக உணர்ந்தால் தம் வாழ்வை குறைவான மேம்பாடாக கருதுவர். சரியான விடயத்தை செய்ய மேலும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்காது என்ற இயலாமையை உணர்வார்கள். இறுதியில் வெறுப்பு, இறுமாப்பு, அருவருப்பு, கசப்பு, இகழ்வு என்பவற்றிற்கு உள்ளாகின்றனர.

**சிக்மன் புறைட்டின் விருத்தி நிலைகள்**

உளப்பகுப்பாய்வு அணுகுமுறையின் படி ஒருவனது ஆளுமையை விளங்கிக் கொள்வதற்கு அவனது உணர்வுகள், மனப்பாங்குகள், உள எழுச்சிகளை சரியான முறையில் விளங்கிக்கொள்ள வேண்டும். இந்நிலைமையைக் கண்டறிய தனியாள் ஆளுமை அதனுடன் பிணைந்துள்ள நடத்தைக் கோலங்களை பிழையின்றி விளங்கிக்கொள்ள வேண்டும். உளப் பிரச்சினைக்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் இடையில் தொடர்புள்ளதாக அவுஸ்ரேலிய நாட்டு உளவியலாளரான சிக்மன் புறைட் கூறுகிறார். மனித நடத்தையில் நனவிலி மனதின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியுள்ளதாலும், தனிப்பட்டவர்களது இயற்கையான வளர்ச்சியுடன் ஆளுமை வளர்ச்சியடையும் என்பதை இவர் சுட்டிக்காட்டியுள்ளதாலும் இவர் முக்கியம் பெறுகிறார். தனது உளப்பகுப்புக் கோட்பாட்டிலும் , கனவுகள் பற்றிய கோட்பாட்டிலும், பால் உணர்வுக்கோட்பாட்டிலும் பல கருத்துக்களை வெளிப்படுத்தும் இவர், உளப்பகுப்புக் கோட்பாட்டில் உளச் செயற்பாடுகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கூறியுள்ளார். மேலும், அவர் ஆளுமை வளர்ச்சியில் தனிப்பட்டவர்களைத் தாண்டும் ஐந்து பிரதான பருவங்களை எடுத்துக் கூறியுள்ளார்.

**அத்தியாயச் சுருக்கம்**

கல்வி கற்கும் பருவம் என்பதுமுக்கியமான ஒரு பருவமாகும். இப்பருவத்தின் வளச்சியும் விருத்தியும் இன்றியமையாததோடு விருத்தியிலும் வளர்ச்சியிலும் ஏற்படும் குறைபாடுகள் பிள்ளைகளில் பல பாதகமான நிலமையை ஏற்படுத்துவதோடு அது கற்றலில் பல பாதகமான நிலமையை ஏற்படுத்தும்.

**பயிற்சி வினாக்கள்**

1. விருத்தி நிலை என்றால் என்ன?
2. வளர்ச்சியின் முக்கியத்துவம் யாது?

3. விருத்தி உளவியலாளர்களின் கருத்துக்களை விளக்குக.

உசாத்துணை நூல்கள்


1. சந்திரசேகரம், ப., (2011), கல்வித் தத்துவம், சேமமடு பொத்தகசாலை, யுஜி 50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு -11.
2. சுப்பு ரெட்டியார், த., (1981), கல்வி உளவியல், மல்லில்தூர் வாயன் கம்பனி வெளியீடு, சென்னை.
3. முத்துலிங்கம், க., (2012), கலியும் உளவியலும், சேமமடு புத்தகசாலை, கொழும்பு.
4. பாலசுப்பிரமணியம் தனபாலன், (2010), கல்விப் பிரயோக உளவியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு
5. Mangal. S.K, (2012), Advanced Educational Psychology ($2^{nd}$ ed), Asoke K. Ghosh, PHI Learning Private Limited, New Delhi
6. National Council of Educational Research and Training. (2014), Including Children With Special Needs: Primary Stage, Sri Aurobindo Marg, New Delhi

# அத்தியாயம் -3

**சுயபாதுகாப்பு, ஆரோக்கியம் போசாக்கு**

**அறிமுகம்**

**கற்றல் பெறுபேறுகள்**

**பிரதான சொற்கள்**

தனிநபர்பாதுகாப்பு சுகம் ஊட்டச்சத்து

3.1 ஆரோக்கியமும் ஊட்டச்சத்தும் - அறிமுகம்

3.2 ஆரோக்கியத்தைப்பாதிக்கும் காரணிகள்

3.3 முன்பள்ளி கல்வி குழந்தைகள் தொடர்பான நோய்கள்

3.4. முன்பள்ளி கல்வி குழந்தைகளின் உணவுப்பழக்கம்

3.5 ஆளுமை விருத்தி

3.6 ஆளுமையைப்பாதிக்கும் காரணிகள்

அத்தியாயச்சுருக்கம்

பயிற்சி வினாக்கள்

உசார்த்துணைகள்

---

அறிமுகம்

பாடசாலைச் சுகாதார சேவை, சுகாதாரக்கல்வி, சுகாதாரத்திற்கு உகந்த பாடசாலை என்ற விடயங்கள் அன்றிலிருந்து இன்றுவரை முக்கியமானதாகும். சுத்தம் சுகாதாரம் என்பது உடல ஆரோக்கியத்தினைப் பேணி மேம்படுத்துவதற்கு உடலைப்பராமரிப்பதை விளக்கும் விஞ்ஞானம் என வரையறை செய்யப்பட்டுள்ளது. உடலைச் சுத்தமாகப்பாதுகாப்பது சுயசுகாதாரம் எனப்படும்.இச்சுயசுகாதாரம் உடல நலத்துடன் வாழ்வதற்கு எல்லா உடல் உறுப்புக்களையும் சுத்தமாகப் பேணுவதன் முக்கியத்துவத்தைக் குறிக்கின்றது. ஏங்கள் உடலில் கவனம் செலுத்துவதைப் போல் உடைச் சுத்தத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

பிரதான சொற்கள்:சுகம், உடல, உடை, ஆரோக்கியம்,ஓய்வு

---

### 3.1 ஆரோக்கியமும் ஊட்டச்சத்தும் - அறிமுகம்

பக்றீரியாக்களின் தாக்கத்தினால் நோய் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் உள்ளதால் உடலைப்பாதுகாக்கவேண்டியுள்ளது.நல்ல பழக்கவழக்கங்கள் உடல் நலத்தைப் பேணுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இப்பழக்கவழக்கங்கள் ஆரம்பப் பிளளைப்பருவத்திலேயே ஆரம்பிக்க வேண்டும். இதற்கு பின்வரும் அடிப்படை விடயங்கள் முக்கியமானவையாகும். அதாவது தினமும் குளித்தல், கைகளைச் சுத்தமாக வைத்திருத்தல், கைக்குட்டை பயன்படுத்துதல், பற்களைப்பாதுகாத்தல், கண்களைப்பாதுகாத்தல், பொருத்தமான உணவு, போதுமான நீர் பருகுதல், மேலும் உடற்பயிற்சி, ஓய்வு, தோல்பராமரிப்பு, உடையைப் பேனுதல், உடலைப்பேனுதல், மலம் கழித்தல் போன்ற செயற்பாடுகள் இன்றியமையாததாகும்.

பிள்ளையின் இரண்டு வயது முதல் ஐந்து வயது வரையான காலமே முன் பிள்ளை பருவமாகும். இக்காலப் பகுதியில் பிள்ளை நடப்பதற்கு கற்றுக் கொள்கின்ற அதே வேளையில் சூழலை ஆராய்வதன் மூலம் அனுபவங்களையும் பெற்றுக் கொள்கின்றது. பொதுவாகவே, பிள்ளை பருவம் என்பது வாழ்க்கை வட்டத்தில் ஒரு நீண்ட காலமாகும். பிள்ளைகளை பொறுத்தவரை பிள்ளை பருவம் என்பது சமூகம் அவர்களை 'வளர்ந்தவர்கள்' என்று சொல்லும் வரையான காலம் என கருதப்படுகின்றது. குழந்தை பருவம் முடிந்து ஒப்பீட்டளவில் தங்கியிருக்கும் போது பிள்ளை பருவம் ஆரம்பமாகின்றது. இது அண்ணளவாக இரண்டு வயதிலிருந்து பாலியல் முதிர்ச்சியினை அடையும் வரை நீண்டு செல்கின்றது. சராசரியாக 15 வயதில் பெண் பிள்ளைகளும், 14 வயதில் ஆண் பிள்ளைகளும் பாலியல் முதிர்ச்சியடையும் போது கட்டிளமை பருவத்தினர் என அறியப்படுகின்றனர். தற்போது பிள்ளை பருவமானது முன் பிள்ளைப் பருவம் மற்றும் பின் பிள்ளைப் பருவம் என இரண்டு பருவங்களாக பார்க்கப்பட வேண்டும் என்பது பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முன் பிள்ளை பருவம் இரண்டு தொடக்கம் ஐந்து வயது வரையும் பின் பிள்ளை பருவம் ஆறு தொடக்கம் பாலியல் முதிர்ச்சியடையும் வரையானதாகும் என குறிப்பிடப்படுகின்றது (ஐ .எல். எம் மாஹிர், 2022 : 20-21)

முன் பிள்ளைப் பருவம் என்பது விரைவான உடல், உள ரீதியான வளர்ச்சியோடு ஒரு குழந்தையின் உணர்ச்சி மற்றும் மொழி வளர்ச்சியினால் இந்த கட்டத்தில் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். முன் பிள்ளைப் பருவத்தின் முக்கிய பண்புகளாக விரைவான உடல் வளர்ச்சி, கற்பனை உணர்வு , ஆர்வம் உணர்வு, மொழி வளர்ச்சி, விளையாட்டுத் தன்மை, உணர்ச்சி உறுதியற்ற தன்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதோடு சுற்றுச் சூழலிலும் தாக்கம் செலுத்துகின்றது. இப்பருவத்தில் உடல், உள, சமூக தேவைகள் காணப்படுகின்றன. உதாரணமாக:- உடலியல் தேவைகளான, போசனை வளர்ச்சி, பாதுகாப்பு அவ்வாறே உள, சமூக தேவைகளாக அன்பையும் ஆதரவையும் பெறுதல் மற்றும் உள வளர்ச்சிக்கு தேவையான ஊக்குவிப்பை பெற்றுக்கொடுத்தல் என்பன அடங்கும். எனவே,

உடல், உள, சமூக தேவைகளை பிழையின்றி நிறைவேற்றுவதன் மூலம் ஆரோக்கியமான புத்தி கூர்மையுள்ள, ஆத்ம அபிமானம் உள்ள தன்னம்பிக்கை உள்ள, ஆக்கத்திறன் மிக்க பிள்ளை சமூகம் ஒன்றை நாட்டுக்கு பெற்றுக் கொள்ளலாம்

அதாவது, உடலில் தேவைகளில் ஒன்றான ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவை குழந்தையின் வளர்ச்சியின் முக்கிய அம்சங்களாகும். ‘‘ஆரோக்கியம் என்பது முழுமையான உடல், உள, சமூக அம்சங்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்த நல்வாழ்வு நிலை என்று வரையறுக்கப்படுகின்றது’’ அதன் அடிப்படையில் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவை ஆரோக்கியமான உடலையும் மனதையும் பராமரிக்கும் முக்கிய பங்கு வகிக்கும் இரண்டு நெருங்கிய தொடர்புடைய காரணிகளாகும். ஊட்டச்சத்து என்பது நமது உடல் உணவை எடுத்துக்கொண்டு, அதனூடாக வளர்ச்சி, பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பதற்காக பயன்படுத்தும் செயல்முறை ஆகும்.

பொதுவாகவே, ஆரோக்கியமான உணவானது உகந்த ஆரோக்கியத்திற்கு தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள், விற்றமின்கள் மற்றும் போசனைகளை வழங்கும் பல்வேறு வகையான உணவுகளை கொண்டுள்ளது. அதாவது நல்ல ஊட்டச்சத்து என்பது பழங்கள், காய்கறிகள், முழு தானியங்கள், புரதம் மற்றும் ஆரோக்கியமான கொழுப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சீரான உணவை உட்கொள்வதை உள்ளடக்கியது எனலாம். முன் பிள்ளை பருவத்தின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து என்பதை எடுத்துக்கொண்டால் முன் பிள்ளை பருவத்தில் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து குழந்தையின் வளர்ச்சிக்கு முக்கியமானது இன்றைய காலகட்டத்தில் குழந்தைகள் விரைவான உடல், அறிவாற்றல் மற்றும் உணர்ச்சி வளர்ச்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றனர். எனவே அவர்களுக்கு சரியான ஊட்டச்சத்து மற்றும் சுகாதார பராமரிப்பு வழங்குவது மிகவும் அவசியமாகும்.

இவ்வாறாக, பிள்ளையின் வளர்ச்சியில் ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, குறிப்பாக வளர்ச்சியின் முதல் ஐந்து ஆண்டுகளில், இப்போதும் எதிர்காலத்திலும் அவர்களின் ஆரோக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். முன்பிள்ளை பருவத்திற்கு முன்பிலிருந்தே தாய்ப்பால் பிள்ளையின் வாழ்க்கையின் முதல் ஆறு மாதங்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். தாய்ப்பால் பிள்ளையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் வழங்குகின்றது மற்றும் தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்க உதவுகின்றது. சீரான போசனை மிக்க உணவு ஒரு பிள்னை வளரும் போது பழங்கள் காய்கறிகள் முழு தானியம் புரதங்கள் மற்றும் பால் பொருட்கள் உள்ளிட்ட சீரான மற்றும் மாறுபட்ட உணவை அறிமுகப்படுத்துவது முக்கியமாகும். அதாவது உடற்பருமன் மற்றும் பிற உடல்நல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் அதிக சர்க்கரை நிறைந்த உணவுகள் மற்றும் கொழுப்பு சார்ந்த உணவுகளை பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு கொடுப்பதை கட்டுப்படுத்துதல் சிறந்தது.

குறிப்பாக பிள்ளைகளுக்கு வெப்பமான காலநிலைகளில் உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருப்பதற்கு நீர் மற்றும் நீர் சத்துள்ள உணவுகள், பால், பானங்கள் மற்றும் சூப்புகளும் நீரேற்றத்திற்கு பங்களிப்பவையாகும்.

## பிள்ளையின் வேகமான வளர்ச்சிக்கு வழங்கப்படும் உணவுகள்

அதாவது சில முக்கியமான ஊட்டச்சத்துக்கள்:

- கல்சியம் எலும்புகளை பலப்படுத்துகிறது: பால் , தயிர் , மீன் எள்ளு, பாதம், அத்திப்பழம மற்றும் விதைகளில் காணப்படும்.
- புரதம் தசைகளை உருவாக்குகிறது: முட்டை, பருப்பு வகைகள், இறைச்சிகள், கடல் உணவுகள், காய்கறிகள், தானியங்கள் மற்றும் பால் பொருட்கள் ஆகியவற்றில் காணப்படுகிறது.
- கார்போஹைட்ரேட்டுகள் ஆற்றலை வழங்குகின்றன: முழு தானியங்கள், மாப்பொருள் அடங்கிய உணவுகள், உருளைக்கிழங்கு மற்றும் மாவுச் சத்துள்ள காய்கறிகள், சில மாவுச் சத்துள்ள பழங்கள் காணப்படுகிறது.
- இரும்பு வளர்ச்சியை ஆதரிக்கிறது: பருப்பு வகைகள், கீரை வகைகள் மற்றும் குயினோவா ஆகியவற்றில் காணப்படுகிறது.
- அத்தியாவசிய கொழுப்புகள்: மீன், வெண்ணெய், ஓமேகா – 3 கொழுப்பு அமிலங்கள், ஓமேகா – 6 கொழுப்பு அமிலங்கள் போன்றன அடங்கும்.

முன் பிள்ளை பருவத்தில் நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்க சரியான சுகாதாரமும் மற்றும் சுகாதார நடைமுறைகளும் அவசியமாகும். குறிப்பாக உணவு உண்பதற்கு முன்பும், கழியலையை பயன்படுத்திய பின்பும் அடிக்கடி கைகளை கழுவுதலை பழக்கமாக எடுத்துக் கொள்வதன் மூலம் கிருமிகள் பரவுவதை தடுக்கலாம் மற்றும் தொற்று அபாயத்தை குறைக்கலாம். தினமும் பல் துலக்குதல் மற்றும் பல் பரிசோதனைகள் மேற்கொள்ளல் ஆகியவை பல் சிதைவு மற்றும் அவ்வாறான பிரச்சனைகளில் இருந்து விடுபட உதவும். மேலும், கிருமிகள் பரவுவதை தடுக்க அல்லது தும்மலின் போது கைகளை தவறாமல் கழுவுதல் மற்றும் வாயை மூடுவது போன்ற அடிப்படை சுகாதார நடைமுறைகளை பற்றி குழந்தைகளை அறிவுறுத்தல் வேண்டும். அவர்களின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான உடற்பயிற்சி மற்றும் உடற்செயற்பாடுகளின் முக்கியத்துவத்தையும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு ஏற்படும் பொதுவான நோய்கள் மற்றும் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது தங்களை எவ்வாறு கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதை பற்றிய பெற்றோர்களுக்கான தெளிவூட்டல்களையும் வழங்குவது அவசியமாகும். முன் பிள்ளை பருவ கல்வியின் மற்றொரு முக்கியமான பங்காக சுய பாதுகாப்பு காணப்படுகின்றது. பிள்ளைகளின் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் தீங்கு விளைவிப்பவைகளிலிருந்து தங்களை

எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது தொடர்பாகவும், அறிமுகம் இல்லாதவர்களுடன் பேசாமல் இருத்தல் மற்றும் ஆபத்தான பொருட்களிலிருந்து விலகி இருத்தல் போன்றனவும் இதில் அடங்கும்.

தூக்கம் பிள்ளையின் வளர்ச்சிக்கு போதுமான தூக்கமும் அத்தியாவசியமாகும். இப்பருவத்தினருக்கு போதுமான தூக்கம் அதாவது வழக்கமான தூக்க அட்டவணையை பராமரிப்பதன் முக்கியத்துவம், ஆரம்பப் பிள்ளைப் பிள்ளை பருவத்தினருக்கு அதிக தூக்கம் தேவைப்படுகின்றது மேலும் அவர்கள் வளரும் போது குறைந்த தூக்கம் தேவைப்படுகின்றது ஆனால் இன்னும் நிலையான மற்றும் போதுமான ஓய்வும் வளர்ச்சியை ஆதரிக்கின்றது. பொதுவாகவே ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தை முன் பிள்ளை பருவக் கல்வியில் ஒருங்கிணைப்பது ஆரோக்கியமான பழக்கங்களை மேம்படுத்துவதற்கும், உடல்நல பிரச்சினைகளை தடுப்பதற்கும் அவசியமான அறிவு மற்றும் திறன்களின் அடித்தளத்தை வழங்குவதன் மூலம் இளம் வயதிலேயே கற்பிப்பதன் மூலமும் அவர்களின் வாழ்நாள் முழுவதும் அவர்களுக்கு நன்மை பயக்கும் ஆரோக்கியமான பழக்க வழக்கங்கள் மற்றும் நடத்தைகளை வளர்க்க உதவுகின்றது.

ஆரம்ப குழந்தை பருவத்தினரின் ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சியினை பாதிக்கும் பல்வேறு காரணிகள் காணப்படுகின்றன. அதாவது, பரம்பரை ரீதியான மரபியல் காரணிகளாலும் உடல், உளரீதியான காரணிகளாலும் மட்டுமன்றி பொதுவாகவே, பல சமூக பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளால் நேர்மறையான மற்றும் எதிர்மறையான வழிகளில் பாதிக்கப்படலாம். இருப்பினும், மரபியல் காரணிகள் மற்றும் மரபியல் மாற்றங்கள் குழந்தைகளின் சில சுகாதார நிலைமைகளில் தாக்கத்தை அதிகரிக்கும். சுற்றுச்சூழல் காரணிகள், மாசுக்கள் மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் பொருட்களின் வெளிப்பாடு குழந்தையின் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

குழந்தைகள் மிகவும் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்கள் என்பதால், பல பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பவர்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் விஷயங்களில் அவர்கள் எளிதில் பாதிக்கப்படலாம். அந்த வகையில் முன் பிள்ளை பருவம் தொடர்பாக கல்வி அமைப்புக்களில் உடல் நலம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்தும் போது இந்த காரணிகள் அனைத்தையும் கருத்தில் கொள்வது அவசியமாகும். இந்த காரணிகள் ஒவ்வொன்றையும் சரியான முறையில் பின்பற்றி கொள்வதன் ஊடாக அவர்களின் எதிர்கால கல்வி மற்றும் சமூக வெற்றிக்கு இது அடித்தளமாக அமைகின்றது. குழந்தை பருவத்தை அடைவதற்கு முன்பே குழந்தையின் ஆரோக்கியத்தை பாதிக்கும் காரணிகளும் உள்ளன உதாரணமாக:- தாயின் ஆரோக்கியம் அதாவது கர்ப்ப காலத்தில் தாயின் ஆரோக்கியம் வளரும் கருவின் ஆரோக்கியத்தில் குறிப்பிட்டதக்க தாக்கத்தை ஏற்படுத்தும் தாயின் ஊட்டச்சத்து மோசமான நிலையில் காணப்படுமாயின் நோய் தொற்றுகள்

மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களின் வெளிப்பாடு ஆகியவை குழந்தைகளுக்கு பல்வேறு உடல் நல பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

கருத்தரித்த நாளிலிருந்து குழந்தைக்கு இரண்டு வயது வரை முதல் ஆயிரம் (1000) நாட்கள் ஆயுட்காலம் மிக முக்கியமான வளர்ச்சி கட்டமாக கருதப்படுகின்றது. ஆரம்பகாலம் ஆரோக்கியமான குழந்தை வளர்ச்சியில் உடல், சமூக, உணர்ச்சி மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியின் களங்கள் அடங்கும். அறிவாற்றல் மற்றும் சமூக வளர்ச்சியில் தங்கள் திறனை அடைய தவறிய பெரும்பாலான குழந்தைகள் தெற்காசியா மற்றும் துணை சஹாரா ஆப்ரிக்காவில் வாழ்கின்றனர். உலகளவில் வறுமை மோசமான உடல்நலம் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பற்றாக்குறை கவனிப்பு காரணமாக ஐந்து வயதுக்கு உட்பட்ட 200 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் அறிவாற்றல் மற்றும் சமூக வளர்ச்சியில் தங்கள் திறனை அடைய தவறிவிட்டனர் அறிவாற்றல் வளர்ச்சி பிரச்சனையின் பரவல் விகிதம் 15% ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 33.5 சதவீதம் வளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் 9.9 சதவீத குழந்தைகள் 2500g கிராமுக்கும் குறைவான எடையுடன் பிறக்கின்றனர்.

இந்தப்பின்னணியில், முன் பிள்ளைப் பருவத்தினரின் ஆரோக்கியத்தில் பின்வரும் காரணிகளால் உலகளவிலும், இலங்கையிலும் பல்வேறுபட்ட தாக்கங்கள் குறித்து குறிப்பிடப்படுகின்றது. உலகளாவிய ரீதியின் அடிப்படையில் முன் பிள்ளை பருவத்தின் ஆரோக்கியத்தை பாதிக்கும் காரணிகளாக உடல் மற்றும் உளவியல் காரணிகள் சுற்றுச்சூழல் ,பொருளாதார, மற்றும் சமூக , கலாசாரக் காரணிகள் பரவலாக காணப்படுகின்றன.

- உடல் ரீதியான காரணிகள்:
  போதிய ஊட்டச்சத்து அத்தியாவசிய விட்டமின்கள் மற்றும் தாதுக்களின் பற்றாக்குறை உட்பட வளர்ச்சி குன்றிய பலவீனமான நோய் எதிர்ப்பு அமைப்பு மற்றும் பிற உடல் நல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். குழந்தையின் உடல் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சிக்கு சரியான ஊட்டச்சத்து அவசியம் ஊட்டச்சத்து குறைபாடு வளர்ச்சி குன்றிய வளர்ச்சி அறிவாற்றல் தாமதங்கள் மற்றும் பிற உடல் நல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி “ 2020 ஆம் ஆண்டு ஐந்து வயதுக்குட்பட்ட 149 மில்லியன் குழந்தைகளை ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக வளர்ச்சி குன்றியுள்ளனர்.” உடல் ரீதியான காரணிகளுள் மரபியலானது பிள்ளையின் உயரம், எடை மற்றும் புத்திசாலித்தனம், அறிவாற்றல் உள்ளிட்ட உடல் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி மரபணு மூலமும் பாதிப்படையும். உதாரணமாக:- நாள்பட்ட நோய்கள் அல்லது குறைபாடு குழந்தையின் உடல் திறன் மற்றும் நண்பர்களுடன் கற்றுக் கொள்ளும் மற்றும் பழகும் திறனை பாதிக்கலாம். இப்பருவத்தினருக்கு வழக்கமான உடற்பயிற்சியை வழங்குவது அவசியம். உடற்பயிற்சியின்மை அல்லது

மோசமான ஊட்டச்சத்து மூலம் உடல் பருமன், வளர்ச்சி தாமதங்கள் மற்றும் பிற உடல் நல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். யுனிசெப் இன் கூற்றுப்படி "ஐந்து வயது குட்பட்ட அனைத்து குழந்தை இறப்புக்களில் 45 சதவீதம் ஊட்டச்சத்து குறைபாடுடன் தொடர்புடையது." இலங்கையில் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வளர்ச்சி குன்றிய விகிதங்கள் பல ஆண்டுகளாக குறைந்துள்ளது இருப்பினும் யுனிசெப்பின் கூற்றுப்படி "2019 இல் இலங்கையில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 13.8 சதவீதத்தினர் வளர்ச்சி குன்றியவர்களாகவும் 14.6 சதவீதத்தினர் எடை குறைவாகவும் உள்ளனர்."

- உளவியல் ரீதியான காரணிகள்: மன அழுத்தம், அல்லது புறக்கணிப்பு போன்ற அதிர்ச்சிகரமான நிகழ்வுகள் குழந்தையின் மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தும். குடும்ப மோதல், வறுமை அல்லது சமூக வன்முறை போன்றவற்றின் வெளிப்பாடு உள்ளிட்ட நீண்ட கால மன அழுத்தம் கவலை மற்றும் மனச்சோர்வு போன்ற மனநல பிரச்சினைகளுக்கு பங்களிக்கும். மன இறுக்கம் போன்ற மனநிலை நிலைமைகளை குழந்தையின் கற்றலில் தொடர்புபடும் திறனை பாதிக்கலாம். நாள்பட்ட மன அழுத்தத்தின் வெளிப்பாடு மூளை வளர்ச்சியை பாதிக்கும்.
- சமூக காரணிகள்: வறுமை மற்றும் குடும்ப வன்முறை அல்லது போதை பொருள்கள் ஆகியவை குழந்தையின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை எதிர்மறையாக பாதிக்கலாம். தனிமைப்படுத்தப்பட அல்லது புறக்கணிப்பு உட்பட சமூக ஆதரவு இல்லாமல் குழந்தையின் சமூக உணர்ச்சி மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியில் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தும். இனவெறி அல்லது பாலின பாகுபாடு உள்ளிட்ட பாகுபாடு நீண்டகால மன அழுத்தத்திற்கு வழிவகுக்கும் மற்றும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். வன்முறை , போதை பொருள்கள் மற்றும் துஸ்பிரியோகம் போன்றவைகளால் குழந்தைகளின் அறிவாற்றல், உணர்ச்சி மற்றும் சமூக வளர்ச்சியில் தகக்கத்தை ஏற்படுத்தும்.
- பொருளாதார ரீதியான காரணிகள்: வருமானம் மற்றும் செல்வ சமத்துவமின்மை, தரமான சுகாதார ஊட்டச்சத்து மற்றும் கல்விக்கான ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிவகுக்கும். இது குழந்தையின் ஆரோக்கிய விளைவுகளை பாதிக்கலாம். புதிய பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற ஆரோக்கியமான உணவு விருப்பங்களுக்கான வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகள் அதாவது அதிகரித்த செலவுகளால் மலிவு விலையில் பொருட்களை கொள்வனவு செய்வதால் குழந்தைகளுக்கான பராமரிப்புச் செலவு, மோசமான ஊட்டச்சத்து என்பவை ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றது. முன் பிள்ளை பருவ வளர்ச்சியில் வறுமை எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் உலக வங்கியின் கூற்றுப்படி 2020 இலங்கையின் வறுமை விகிதம் 8.9 சதவீதமாக இருந்தது.

- சுற்றுச்சூழல் காரணிகள்: பாதுகாப்பான மற்றும் சுத்தமான தண்ணீருக்கான பற்றாக்குறை காரணமாக வயிற்றுப்போக்கு மற்றும் பிற நோய்கள் உள்ளிட்ட உடல் நலப் பிரச்சினைகள் முன் பிள்ளை பருவத்தினருக்கு அதிகளவில் ஏற்பட வழிவகுக்கும். வளி மாசடைவுகள், இயற்கை பேரழிவுகள் மற்றும் காலநிலை மாற்றம் என்பனவும் அதிகளவில் தாக்கம் செலுத்துகின்றது. குழந்தை வளரும் சூழலும் அவர்களின் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும். இலங்கையில் குறிப்பாக நகர்ப்புறங்களில் வளி மாசுபாட்டின் வெளிப்பாடு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.''ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்புகளில் 26 சதவீதம் மற்றும் மொத்த நோய் சுமைகளில் 25 சதவீதம் சுற்று சூழல் அபாயங்களுக்கு காரணமாக இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் மதிப்பிடுகின்றது''

இவ்வாறாக, பல காரணிகள் முன் பிள்ளைப் பருவ ஆரோக்கியத்தை பாதிக்கலாம். ஆரோக்கியமான வளர்ச்சியை உறுதிப்படுத்த இந்த காரணிகளை சரியான முறையில் பின்பற்றுவது அவசியமாகும். பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் சுகாதார நிபுணர்கள் அனைவரும் குழந்தை பருவ ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அதற்க்காக அவர்கள் முறையான வழிகாட்டல்களை பெற்றுக் கொள்வது கட்டாயமாகும். ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் ஊட்டச்சத்து, உடல் செயல்பாடு, நோய் தடுப்பு, சுற்றுச்சூழல் காரணிகள் மற்றும் பெற்றோர் கவனிப்பு போன்ற காரணிகள் அனைத்தும் முன் பிள்ளை பருவத்தில் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை பாதிக்கலாம். எனவே, இந்த காரணிகளை முறையாக நிவர்த்தி செய்துவதன் மூலம் ஆரோக்கியமான எதிர்காலத்தை ஊக்குவிக்கவும், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அடித்தளத்தை அமைக்கவும் முடியும்.

3. முன் பிள்ளை பருவ ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்த கல்வியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் நோய் தடுப்பு, சுகாதாரம், சரியான ஊட்டச்சத்து மற்றும் ஆரம்ப கால தலையீடு போன்ற தீர்வு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குழந்தைகளின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதன் மூலம் அவர்கள் முழு திறனையும் அடைய நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். பொதுவான கூறுகளாக உடல் வளர்ச்சி குழந்தைகளின் கணிசமான வளர்ச்சி மற்றும் முன் பிள்ளை பருவத்தில் பிள்ளைகளை பாதிக்கும் பல கூறுகள் மற்றும் நோய்கள் உள்ளன. இது பிறப்பு முதல் ஐந்து வயது வரையான காலத்தை குறிக்கின்றது. அதாவது காய்ச்சல், மூச்சு குழாய் அழற்சி மற்றும் நிமோனியா போன்ற நோய்களும் அடங்கும். இரைப்பை குடல் நோய் தொற்றுகள் இவை வயிற்றுப்போக்கு வாந்தி மற்றும் பிற அறிகுறிகளை ஏற்படுத்தும். பெரும்பாலும் வைரஸ் அல்லது பாக்டீரியாவால் இவை ஏற்படுகின்றன. முன் பிள்ளை பருவத்தில் ஏற்படும் காயங்கள்

விழுதல் தீக்காயங்கள் மற்றும் நீரில் மூழ்குதல் போன்ற விபத்துக்கள் சில வேளைகளில் கடுமையான காயங்களை ஏற்படுத்தும்.

சில பிள்ளைகளின் நோய்களை எவ்வாறு கண்டறிவது மற்றும் தடுப்பது முன் பிள்ளை பருவத்தில் நோய்களை கண்டறிவதில் சவாலானதாக இருக்கலாம். ஏனெனில், குழந்தைகள் தங்கள் அறிகுறிகளை தெளிவாக தெரிவிக்க முடியாமல் போகலாம் அல்லது முழுமையாக வளர்ந்த நோய் எதிர்ப்பு அமைப்பு இல்லாமல் இருக்கலாம். இருப்பினும் பெற்றோர்களும், பராமரிப்பாளர்களும் கவனிக்க கூடிய பல அறிகுறிகள் உள்ளன. அதன் மூலம் உடல் நல பிரச்சினைகளை குறிக்கலாம். பசியின்மை அல்லது தூக்கம் முறைகளில் மாற்றங்கள், எரிச்சல் , வம்பு அல்லது அழுகை காய்ச்சல், இருமல் , தும்மல் அல்லது நெரிசல், வயிற்றுப்போக்கு, வாந்தி அல்லது வயிற்று வலி, சொறி அல்லது பிற தோல் எரிச்சல், அசாதாரண சோர்வு அல்லது சோம்பல் மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் மூச்சுத் திணறல் பிள்ளைகளில் இந்த அறிகுறிகள் ஏதேனும் ஒன்றை அவதானித்தால் அடிப்படை காரணத்தையும், சரியான சிகிச்சையும் தீர்மானிக்க ஒரு சுகாதார நிபுணரை அணுகுவது அவசியமாகும்.

வளரும் நாடுகளில், ஒவ்வொரு நான்காவது குழந்தையும் ஒரு நாளுக்கு $1க்கும் குறைவான வருமானம் கொண்ட குடும்பங்களில், மோசமான வறுமையில் வாழ்கின்றனர். இதன் விளைவாக, ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 11 மில்லியன் குழந்தைகள் - ஒரு நாளைக்கு சுமார் 30,000 குழந்தைகள் - ஐந்தாவது பிறந்தநாளை அடைவதற்கு முன்பே இறக்கின்றனர், பெரும்பாலும் தடுக்கக்கூடிய காரணங்களால். இந்த குழந்தைகளில், 4 மில்லியன் குழந்தைகள் பிறந்த முதல் மாதத்தில் இறக்கின்றனர். உலகின் பல ஏழ்மையான நாடுகளில், குழந்தை இறப்பு விகிதம் மாறவில்லை அல்லது மோசமாகிவிட்டது. துணை- சஹாரா ஆப்பிரிக்காவில், குழந்தை இறப்பு சராசரியாக 1,000 பிறப்புகளுக்கு 173 இறப்புகள் மற்றும் தெற்காசியாவில் 1,000 க்கு 98 இறப்புகள் - பல மடங்கு தொழில்மயமான நாட்டின் சராசரி 1,000 க்கு 7 இறப்புகள், நிமோனியா, வயிற்றுப்போக்கு, மலேரியா, தட்டம்மை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு போன்ற சிறந்த சிகிச்சை அளிக்கக்கூடிய மற்றும் தடுக்கக்கூடிய நிலைமைகள் முன்னணியில் உள்ளன.

நோய்களுக்கான தடுப்பு மற்றும் தீர்வு நடவடிக்கைகள் குறிப்பிட்ட நோய் அல்லது நிலையை பொறுத்து மாறுபடும். இருப்பினும் சில பொதுவான உத்திகள் உள்ளன. அவை நோய் அபாயத்தை குறைக்க உதவுகின்றன. இது முன் பிள்ளை பருவத்தினரின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துகின்றன. இவற்றுள் வழக்கமான கைகழுவுதல் மற்றும் சுகாதார நடைமுறைகளை ஊக்குவித்தல், குழந்தைகள் தடுப்பூசிகள் குறித்து புதுப்பித்த நிலையில் இருப்பதை உறுதி செய்தல், சத்தான மற்றும் சீரான உணவை வழங்குதல், உடல் செயல்பாடு மற்றும் வெளிப்புற விளையாட்டு ஊக்குவித்தல் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பான வீட்டு

சூழலை உருவாக்குதல், சுகாதார நிபுணர்களுடன் வழக்கமான உடல்நிலை பரிசோதனைகளை ஊக்குவித்தல் என்பன அடங்கும்.

இவ்வாறாக, முன் பிள்ளை பருவத்திற்கு பங்களிக்கும் பொதுவான கூறுகளை அடையாளம் காண்பது பயனுள்ள தடுப்பு மற்றும் சிகிச்சை உத்திகளை வளர்ப்பதில் அவசியமாகும். மோசமான ஊட்டச்சத்து, புகைபிடித்தல் அல்லது சுற்றுச்சூழல் நாசுக்கள், போதிய தூக்கமின்மை அல்லது ஒழுங்கற்ற தூக்கம், நெரிசலான அல்லது சுகாதாரமற்ற சூழ்நிலையில் வாழ்வது ஆகியவை உடல் நல பிரச்சினைகளை வளர்ப்பதில் ஆரோக்கியம் தொடர்பாக குழந்தைகளில் அபாயத்தை அதிகரிக்கும் காரணிகள் ஆகும். 1999 இல் இறந்த 10.5 மில்லியன் குழந்தைகளில், 99% வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள், இதில் 36% ஆசியாவிலும் 33% ஆப்பிரிக்காவிலும் உள்ளனர். அனைத்து குழந்தை இறப்புகளில் 50 % க்கும் அதிகமானவை ஐந்து வயதுக்கு குறைந்தவர்களாகும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றது.

முன் பிள்ளை பருவ சில குறிப்பிட்ட நோய்க் காரணிகளைக் கண்டறிதல், எவ்வாறு நோய்த் தடுப்பு முறைகள் மற்றும் தீர்வுகளை நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

- சுவாச நோய் தொற்றுகள்:
  காய்ச்சல் மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் நிமோனியா போன்ற நோய்கள் இதில் அடங்கும். காய்ச்சல் இருமல் மூக்கு ஒழுகுதல் சுவாசிப்பதில் சிரமம் போன்றவை அறிகுறிகளாக இருக்கும்.
- இரைப்பை குடல் நோய் தொற்றுக்கள்:
  வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கால் வகைப்படுத்தப்படும் இரைப்பை குடல் அழற்சி போன்ற நோய்கள் இதில் அடங்கும். இது வைரஸ்கள், பாக்டீரியாக்கள் அல்லது ஒற்றுமைகளால் ஏற்படலாம்.

- தோல்நோய் தொற்றுகள்:
  இது இம்பெடிகோ போன்ற நிலைமைகளை உள்ளடக்கியது இது ஒரு பாக்டீரியா தோல் தொற்றாகும். இது சிவப்பு புண்கள் அல்லது கொப்பளங்களை ஏற்படுத்தும்.

- காது நோய் தொற்றுகள்:
  இது குழந்தைகளுக்கு ஏற்படும் பொதுவான நோயாகும். இது காது வலி காய்ச்சல் மற்றும் காது கேளாமை ஆகியவற்றை ஏற்படுத்தும்.

- சின்னம்மை:
  சிக்கன் பாக்ஸ் என்பது வெரிசெல்லா- ஜோஸ்டர் வைரஸால் (VZV) ஏற்படும் மிகவும் தொற்று நோயாகும். அரிப்பு, கொப்புளம் போன்ற சொறி ஏற்படலாம். சொறி முதலில் மார்பு, முதுகு மற்றும் முகத்தில் தோன்றும், பின்னர் உடல் முழுவதும் பரவி, 250 முதல் 500 அரிப்பு

கொப்புளங்களை ஏற்படுத்துகிறது. சிக்கன் பாக்ஸின் உன்னதமான அறிகுறி அரிப்பு, திரவம் நிறைந்த கொப்புளங்களாக மாறும் ஒரு சொறி, அது இறுதியில் சிரங்குகளாக மாறும். சொறி முதலில் மார்பு, முதுகு மற்றும் முகத்தில் தோன்றும், பின்னர் வாய், கண் இமைகள் அல்லது பிறப்புறுப்பு பகுதி உட்பட உடல் முழுவதும் பரவுகிறது. பொதுவாக கொப்புளங்கள் அனைத்தும் சிரங்குகளாக மாற ஒரு வாரம் எடுக்கும்.

- கை, கால் மற்றும் வாய் நோய்:
  இது ஒரு பொதுவான வைரஸ் தொற்று ஆகும், இது பெரும்பாலும் தொண்டையில் தொடங்குகிறது. கை- கால்- வாய் நோய் (HFMD) பொதுவாக coxsackievirus A16 எனப்படும் வைரஸால் ஏற்படுகிறது. 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றனர். காய்ச்சல், தலைவலி, பசியிழப்பு, கைகள், கால்கள் மற்றும் வாய்ப்பகுதியில் மிகவும் சிறிய கொப்புளங்கள் கொண்ட சொறி, அழுத்தும் போது மென்மையாகவோ அல்லது வலியாகவோ இருக்கும்.
- மூளைக்காய்ச்சல்:
  மூளைக்காய்ச்சல் என்பது மூளை மற்றும் முள்ளந்தண்டு வடத்தைச் சுற்றியுள்ள மெல்லிய திசுக்களின் வீக்கம் ஆகும், இது மூளைக்காய்ச்சல் என்று அழைக்கப்படுகிறது. இது பொதுவாக ஜலதோஷத்தை ஏற்படுத்தும் பாக்டீரியாவுடன் தொடங்குகிறது. இது பக்கவாதம், காது கேளாமை மற்றும் மூளை பாதிப்பை ஏற்படுத்தும்.
- தட்டம்மை: தட்டம்மை என்பது வைரஸால் ஏற்படும் ஒரு தீவிர நோய். வைரஸ் ஒன்று முதல் இரண்டு வாரங்கள் வரை நீடிக்கும். இன்று இது மிகவும் அரிதானது, தட்டம்மை மிக அதிக காய்ச்சலுடன் தொடங்குகிறது. ஏற்படக்கூடிய வேறு சில அறிகுறிகளாக சோர்வு இருமல், மூக்கு ஒழுகுதல் மற்றும் சிவப்பு, நீர் நிறைந்த கண்கள் போன்றவாகும்.

## நோய்த் தடுப்பு முறைகள் மற்றும் தீர்வுகளை நடவடிக்கைகள்

1. தடுப்பூசிகள்: தடுப்பூசிகள் முன் பிள்ளை பருவத்தில் நோய் தடுப்பூக்கு இன்றியமையாத அம்சமாகும். தட்டம்மை, சளி, ருபெல்லா, போலியோ மற்றும் பல தீவிரமான மற்றும் ஆபத்தான நூல்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க தடுப்பூசிகள் உதவுகின்றன. முறையான சுகாதாரம், அடிக்கடி கை கழுவுதல் உட்பட முறையான சுகாதாரத்தை பராமரிப்பது, நோய்கள் பரவாமல் தடுப்பதில் முக்கியமானது. குறிப்பாக உணவு உண்பதற்கு முன்பும், கழிப்பறையை பயன்படுத்திய பின்பும், வெளியே சென்ற பின்பும் கைகளை கழுவுவது சிறு குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்தல் அவசியமாகும்.

2. சமச்சீர் ஊட்டச்சத்து : போதுமான அளவு புரதம், கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் கொழுப்புகள் கொண்ட சமச்சீர் உணவு, உகந்த வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு அவசியமான ஒன்றாகும். ஒரு சமச்சீர உணவு ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய உடல்நல பிரச்சினைகளை தடுக்கவும் உதவும் 3
3. பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரம்: வயிற்றுப்போக்கு மற்றும் கொலரா போன்ற நீரினால் பரவும் நோய்கள் பரவாமல் தடுப்பதில் பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரத்திற்கான அணுகல் முக்கியமானது.
4. வழக்கமான உடல்நல பரிசோதனைகள்: உடல்நல பரிசோதனைகள் பெறுவதை குழந்தை மருத்துவர் அல்லது சுகாதார வளங்குனரின் வழக்கமான பரிசோதனைகளை சிறு குழந்தைகளின் உடல்நல பிரச்சினைகளை கண்டறிந்து தடுக்க உதவும்.
5. போதியளவு தூக்கம் : தூக்கம் மூளையின் வளர்ச்சிக்கும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்துக்கு முக்கியமானது. கைக்குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகள் ஒரு நாளைக்கு 14 தொடக்கம் 17 மணி நேரம் தூங்க வேண்டும் குழந்தைகள் 11 தொடக்கம் 14 மணிநேரம் தூங்குதல் அவசியம்.
6. உடல் செயல்பாடுகள் : வழக்கமான உடல் செயல்பாடு ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது. தசைகள் மற்றும் எலும்புகளை வலுப்படுத்துகின்றது மற்றும் உடல் பருமன் மற்றும் பிற உடல்நல பிரச்சினைகளை தடுக்க உதவுகின்றது.
7. நச்சுக்கள் வெளிப்படுவதை தவிர்த்தல்: ஈயம் ,புகையிலை புகை மற்றும் பூச்சிக்கொல்லிகள் உள்ளிட்டு நச்சுப் பொருட்களால் சிறு குழந்தைகள் குறிப்பாக பாதிக்கப்படுகின்றனர். பிற தீங்கு விளைவிக்கும் பொருட்களுக்கு ஆளாகாமல் இருப்பது உறுதி செய்து பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பான வீட்டு சூழலை வழங்குதல்.

இவ்வாறாக, தீர்வு நடவடிக்கைகளாக மருந்துகள், நுண்ணுயிர் எதிர்ப்புகள், பாக்டீரியா நோய் தொற்றுகளுக்கு சிகிச்சை அளிக்க பரிந்துரைக்கப்படலாம்.அதே நேரத்தில் வைரஸ் தடுப்பு மருந்துகள்,சில வைரஸ் தொற்றுகளுக்கு பயன்படுத்தப்படலாம். தினமும் அதிகளவான திரவங்களை, நீர் சத்துள்ள உணவுகளை உள்ளெடுப்பதன் ஊடாகவும் மூலமும் உடலில் தொற்று நோய்களை எதிர்த்து போராட முடியும். பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் அறிகுறிகளை உன்னிப்பாக கண்காணித்து சில நாட்களுக்கு பிறகு அவர்கள் நிலை மேம்படவில்லையாயின் மருத்துவ உதவியை நாட வேண்டும். இந்த நோய் தடுப்பு முறைகளை முன் பிள்ளை பருவத்தில செயற்படுத்துவதன் மூலம் சிறுவயதில் இந்த நோய்கள் பொதுவானவை என்றாலும் தடுப்பூசிகள் நல்ல

சுகாதார நடைமுறைகள் மற்றும் உடனடி மருத்துவ கவனிப்புகள் மூலம் பெரும்பாலும் ஆரோக்கிய சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்ப முடியும்.

சீரான ஊட்ட நிலைகாரணமாக, சரியான வளர்ச்சியும் ஊட்டக்குறைபாடு அற்றுப்போதலும் ஏற்படும்

நோய் எதிர்ப்புத்தன்மை விருத்தியடையும்

நோய்களாகும் நிலைகுறைவடையும்

நோய்களுக்கு ஈடுகொடுக்கும் ஆற்றல் அதிகரிக்கும்

நோய்கள் விரைவில் சுகமாகும்

ஆகவே சீரான உடல் நிலைகாரணமாக கீழ்வரும் நிலமை தோற்றுவிக்கப்படும்

உணவில் விருப்பு அதிகரிக்கும்

உணவுநன்கு சமிபாடடையும்

தமது செயற்பாடுகளில் ஊக்கமாக ஈடுபடவும் அதனால் பொருளாதார விருத்தியை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும்.

உட்கொணட உணவை உடல நன்கு பயன்படுத்திக் கொள்ளும்.இதனால் நோயிலிருந்து சுகமடைய அதிக உணவோ சக்தியோ தேவைப்படமாட்டாது.

**அல்லூட்டம் குறையூட்டம்**

சீரான ஊட்டம் நடைபெறுமாயின் ஊட்டத்துடன தொடர் புடைய பிரச்சினைகள் தோற்றம் பெறாது. மாறாக ஊட்டம் சரியாக நடைபெறாத சந்தர்ப்பங்களில் ஊட்டம் தொடர்பான பிரச்சினைகள் ஆரம்பிக்கும்.இவ்வாறு ஊட்டம் சீரற்று நடைபெறுமாயின் அதனை அல்லூட்டம் எனலாம்.இது இரண்டு நிலைகளில் ஏற்படலாம். அதாவது அதியூட்டம், குறையூட்டம். அதியூட்டம் என்பது உடலின் தேவைக்குக் கூடுதலான அளவு ஊட்டத்தை நெடுநாட்களுக்குப் பெறுவதன் விளைவாக அதியூட்டம் ஏற்படுகின்றது. மாறாக உடலின் தேவைகளுக்கு போதியளவான ஊட்டப்பதார்த்தங்கள் கிடைக்கவில்லையானால் குறையுட்டநிலை தோன்றும்.ஈக்குறையூட்ட நிலை பிள்ளைகளுக்கு ஏற்படுமாயின் அது பல பாதகமான நிலமைகளை ஏற்படுத்தும்.குறிப்பாக கற்றலில் பாதிப்பை ஏற்படுத்தும்.குறிப்பாக அயடின்குறைபாடு, விற்றமின் ஏ குறைபாடு, ஊட்டக் குருதிச்சோகை, புரதக் குறையூட்டம் போன்றவை ஏற்படுவதற்கு வறுமை முக்கியமானதாகும் இதனை தவிர்த்துக் கொள்வதற்கு பல நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம். குறிப்பாக குறையூட்டத்தைத் தவிர்த்தல், போசனையில் கவனம் செலுத்துதல், உணவுமானியம் வழங்கல், விவசாய உதவிகளைச் செய்தல், உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதல், சுகாதார வசதிகளை மேம்படுத்தல், போசாக்கு கல்வி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

அசாதாரண் குழந்தைகள் (Exceptional Children)

எல்லா பிள்ளைகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. வீட்டில், வகுப்பறையிலுள்ள அனைத்து குழந்தைகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். அவர்களிடையே பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. சிலர் விரைவாகவும் சிறப்பாகவும் அனைத்தையும் உடனடியாக கற்றுகொண்டு மிக சிறப்பாக செயற்படுகின்றார்கள். ஆனால் சிலர் மந்தமாக இருக்கின்றார்கள். கற்பதில் தொடக்கம் அனைத்திலும் மெதுவாகவே தொழிற்படுகின்றார்கள். இவர்களால் சமூகத்தில் பிறரோடு விரைவாக இணைந்து தொழிற்பட முடியாத நிலையிலுள்ளது. ஒரு குழந்தை சாதாரண குழந்தையிடமிருந்து உடல், மனவளர்ச்சி குன்றுவதாலோ, வேறுபடுவதாலோ, ஊனத்தாலோ அல்லது மீத்திறன் உடையதாக இருந்தாலோ அல்லது சிறப்புத் தேவைகள் அவர்களுக்குக் கொடுக்க நேர்ந்தாலோ அக் குழந்தையை அசாதார குழந்தை அல்லது சிறப்பு தேவையை வேண்டுவோர் என்கின்றோம்.

அசாதாரண குழந்தையை உடல் ஊனங்கள் உடையோர், அறிவு வளர்ச்சி குறைபாடு உடையோர், சமூக நெறிப் பிறழ்வு உடையோர் என வகைப்படுத்தலாம். உடல் ஊனம் உடையோரை குருடு, செவிடு ஊமை, கை கால் ஊனம் உடையோர் என வகைப்படுத்தலாம். அறிவு வளர்ச்சி குறைபாடு உடையோரை மீத்திறன் உடையோர், பிற்போக்குத் தன்மை உடையோர், மனவளர்ச்சி குறைவு உடையோர் என வகைப்படுத்தலாம். சமூகநெறிப் பிறழ்வு உடையோரை இளம் குற்றவாளிகள், பிரச்சினைக்குரியர்கள் என வகைப்படுத்தலாம்.

குழந்தை பருவத்திலிருந்து அவர்களின் தொழிற்பாடுகளை வைத்து அவர்களின் நிலையை, திறன் தன்மையை ஊகிக்க கூடியதாக இருக்கும். உடல் ஊனங்கள் உள்ளவர்களை கண்பார்வை இழப்பு குறைவு, காது மந்தம், காது கேளாமை, பேசும் சக்தி இழப்பு, கை கால் உறுப்புக்களில் ஊனம் போன்றவற்றை சிறுவயதிலே குழந்தைகளிடம் இனங்கண்டு அவற்றிற்கு தகுந்த சிகிட்சையளித்தால் இவ் ஊனங்களை ஒரளவுக்கு நீக்க இயலும். பார்வைக் குறைபாடு உள்ளவர்களை முழுமையாக பார்வையற்றவர்கள், குறைவாக பார்வையுள்ளவர்கள் என வகைப்படுத்தலாம். இவர்களின் உடல் நிலை நன்றாக இருக்கும். பார்வைக் குறைபாட்டால் கல்வி பெறுவதில் சாதாரண குழந்தை போல் இல்லாமல் சற்று திறமை குறைந்து காணப்படுவார்கள். மரபு நிலை காரணமாகவும் பிறப்பாலும் பிறந்த பின்னும் பார்வை குறைபாடு ஏற்படக் கூடும். கிட்டப்பார்வை, தூரப்பார்வை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குழிவு மற்றும் குவிவு வில்லைகளையுடைய கண்ணாடியை பயன்படுத்துவதன் மூலம் நிவத்தி செய்யலாம். இவர்கள் விற்றமின் A உடைய உணவுகளை உண்பதன் மூலம் ஒரளவு குணப்படுத்த முடியும். இவர்கள் கல்வி கற்பதற்கு

தொடு உணர்ச்சியால் உணரக் கூடிய ப்ரெய்லி (Braily) முறையில் கல்வி கற்பிக்கப்படுகின்றது.

ஒலியை கேட்கும் திறன் இல்லாதவர்கள் செவிடர் எனப்படுகின்றார்கள். காது கேட்காததால் பேச்சுத் திறன் பாதிப்படைகின்றது. இவர்களை சிறிதளவு கேட்கக் கூடியவர்கள், நடுத்தரமாக கேட்கும் தன்மை கொண்டுள்ளவர்கள், மிக அதிகமான செவிட்டுத்தன்மை உள்ளவர்கள் என வகைப்படுத்தலாம். தூண்டலுக்கு இயங்காமை, சரளமாக பேச்சுத்தன்மை கடினமாக இருத்தல், பேச்சில் தவறு ஏற்படுதல், ஒலிகளை கண்டுகொள்ளாமல் இருக்கும் குழந்தைகளை வைத்து அவர்களை இனங்காணலாம். மூன்று நிலைகளில் காது கேளாமை ஏற்படுகின்றது. பிறக்கும் முன், பிறக்கும் பொழுது, பிறந்த பின் ஆகிய மூன்று நிலைகளில் காது கேளாத்தன்மை ஏற்படுகின்றது. மரபு நிலை காரணமாக, தாய்க்கு தட்டம்மை ஏற்பட்டாலோ, அளவுக்கு அதிகமாகப் பயம், தாய் விபத்தில் தாக்கமடைதல், தாய் போதைப்பொருளுக்கு அடிமையாக இருப்பதால் கருவிலிருக்கும் குழந்தைக்கு கேட்கும் திறன் பாதிப்படைகின்றது. குழந்தை பிறந்த பின் குழந்தைக்கு காது நோயால் சீழ்வடிதல், காது நரம்பு பாதிப்படைதல், அளவுக்கதிகமான ஒலிகளை கேட்பதால், மூளைக்காய்ச்சல், மலேரியா, சத்தான உயவு இன்மை, விபத்து மற்றும் அதிர்ச்சியுர்லு் காது கேட்கும் திறன் குறைவடைந்து பாதிப்படைகின்றது. இவர்களுக்கு உதடுகளின் அசைவுகளை கண்டு வாசித்தல், சைகைகள் மூலம் பயிற்சியளித்தல் போன்றன மூலம் தொழிற் கல்வி தரப்படுகின்றது. காது கேட்கும் கருவியை பயன்படுத்துவதன் மூலம் இக் குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்.

நடக்க இயலாதவர்கள், கைகளை பயன்படுத்த இயலாதவர்கள் கை, கால் ஊனமுற்றவர்களாகும். பிறக்கும் பொழுது மரபில் காரணமாக ஏற்படும் குறைபாடு, மூளை வளர்ச்சியின்மை, போலியோ, காசநோய் போன்றவற்றால் ஏற்படும் ஊனங்கள், பிறந்த பின் விபத்துக்கு உள்ளாதல் போன்றவற்றால் கை, கால் ஊனம் ஏற்படுகின்றது. இவர்களுக்கு மருத்துவ சிகிட்சையளிப்பதோடு விளையாட்டு உடற்பயிற்சி மூலம் சிகிட்சையளிக்கப்படுகின்றது. சிறிதளவு பாதிக்கப்பட்டவர்கள் சாதாரண குழந்தைகளோடு சேர்ந்து படிக்கலாம். ஏனையவர்கள் அதற்ககென அமைக்கப்பட்ட தனிப்பள்ளிகளில் படிக்கின்றனர்.

அறிவுத்திறன் அதிகமாக உள்ள குழந்தைகள் மீத்திறக் குழந்தைகள் எனப்படுவர் என்று ஜேம்ஸ் ட்ரேவெல் கூறுகின்றார். ஒரு குழந்தையின் நுண்ணறிவு ஈவு 140 இற்கு மேல் இருந்தால் அக்குழந்தையை மீத்திறன் கூஎய குழந்தை எனலாம். இக்குழந்தைகளை இரண்டு வகைகளைாக பிரிக்கலாம். ஒன்று பொது ஆற்றல் மிக்க குழந்தை, மற்றொன்று குறிப்பிட்ட துறையில் மீத்திறன் மிக்க குழந்தைகள். பள்ளிகளிலும், வீட்டிலும், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மீத்திறன் உடைய குழந்தைகளை அதிகம் இனங்காணாததால் அவர்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மேலும் திறனை வளர்க்க முடியாமல் போகின்றது. மீத்திறன் கூடிய குழந்தைகள் சராசரி

மாணவர்களை விட அறிவாற்றல் கூடிய மாணவர்கள். மீத்திறன் கூடிய குழந்தைகளின் உள்ளார்ந்த உயர் திறன்களை வெளிப்படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் நான்கு வகையான கல்வித்திட்டங்கள் உள்ளன. அவை விரைவாக கல்வித் திட்டம், வளமை கல்வித்திட்டம், குறித்த காலத்திற்கு முன் பள்ளியில் சேர்த்தல் மற்றும் குழுவகை கல்வித்திட்டம்.

கற்றலில் பின்தங்கிய குழந்தைகள் என்பவர்கள் பள்ளிப்படிப்பில் பின்தங்கியவர்கள். இவர்களை மெதுவாக அல்லது குறைவான வேகத்தில் கற்போர் எனலாம். படிப்பிலும் மற்ற செயலிலும் பிற்போக்குக் குழந்தைகள் தங்களின் வயதை விட குறைந்தவர்களின் திறனை ஒத்து இருப்பர். இதற்கான காரணங்களாக குடும்பத்தில் தடைகள், பள்ளியில் தடைகள், போசாக்கு இன்மையாகும். உடல் வளர்ச்சியில் குறைபாடு உள்ளவர்கள், உடலில் உள்ள நோய்கள் பின்தங்கிய நிலைக்கான காரணங்களாகும். குடும்பத்தின் வறுமை, குடும்பத்தின் அளவு, குடும்பச்சூழல், பெற்றோரின் கல்வி, பழக்கவழக்கங்கள் போன்றவற்றால் குழந்தைகளின் கற்கும் திறன் பாதிப்படைகின்றது. குழந்தைகளை ஈர்க்காத பள்ளிச்சூழல், குறைந்த வசதியுள்ள பள்ளிகள், சரியான கற்பிக்கும் முறையை கையாளாத ஆசிரியர்கள் ஆகியவை குழந்தைகளின் கற்றல் திறனை குறைவடைய தாக்குகின்றன. இவர்களுக்கான ஊக்கமுடைய செயற்பாடுகள் மூலம் இவர்களை மெதுமெதுவாக மாற்றம் கொண்டுவந்து இவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தலாம்.

மனவளர்ச்சி குன்றியவர்களைச் சராசரிக்கும் கீழ் நுண்ணறிவு உடையவராகவும் தன்னையே பாதுகாக்கும் திறன் அற்றவர்களாகவும் தெளிவற்ற நிலையிலும் இருப்பார்கள் என்று உளவியல் அறிஞர் கிராஸ்மென் கூறியுள்ளார். இக்குழந்தைகள் தன்னைத்யொத்த குழந்தைகளை காட்டிலும் கற்கும் திறன் குறைவாகவும் இருப்பார்கள்.

மனநலம் குன்றியவர்களின் வகைகள்:

| நுண்ணறிவு ஈவு (IQ) | வகைகள் |
|---|---|
| 1. 140 இற்கு மேல் | அதிபுத்திசாலி ( மீத்திறன்) |
| 2. 120 – 140 | மிகச்சிறந்தவர் |
| 3. 110 – 120 | சிறந்தவர் |
| 4. 90 – 110 | சராசரி |
| 5. 80 – 90 | மந்தப்புத்தியுள்ளவர்கள் |
| 6. 60 – 70 | அறிவு வளர்ச்சி குன்றியவர்கள் |

| | |
|---|---|
| 7. 50 – 60 | மொரான் |
| 8. 20 – 50 | புத்திசுவாதினம் உள்ளவர்கள் |
| 9. 20 இற்கு குறைவு | முட்டாள் |

குழந்தை பிறந்த உடன் அழாமல் தாமதமாக அழுவது, தாய் நீண்ட நேரம் பிரசவ வலியால் பாதிக்கப்படும் போது குழந்தைகளின் தலை முதலில் வராமல் கால் முதலில் வரும் போது, குழந்தைகளின் எடை குறைவாக இருக்கும் போது அறிவு வளர்ச்சி குன்றுகின்றது.

நெறிபிறழ்வு என்பது குழந்தைகளின் அல்லது குமரப் பருவத்திலனரின் தீவிரமான சமூக விரோத நடத்தையைக் குறிக்கும் இத்தகைய நடத்தையில் ஈடுபடும் பெரியவர்களை நாம் குற்றவாளிகள் என்கின்றோம். ஒழுக்க நெறிகளை ஊட்டும் செயல்களுக்கு பள்ளியில் முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். பெற்றோர்கள் தங்கள் கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து தங்கள் குழந்தைகளுக்கு அன்பையும், பாதுகாப்பையும், சுதந்திரத்தையும், பொறுப்புணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும். அவர்களின் மனதிலுள்ள பயத்தையும் கவலையையும் போக்க வேண்டும். இவ்வாறு பெற்றோர்களும் ஆசிரியர்களும் மற்றும் அவர்களை சார்ந்த சமூதாயமும் சில விதிகளை கடைப்பிடிப்பதால் இளம் அசாதாரண நடத்தையுடையவர்களை குணப்படுத்த முடியும். சமூக நெறி பிறழ்வு நேராமல் தடுக்கவும் முடியும்.

**அத்தியாயச் சுருக்கம்**

ஆரம்பப் பிள்ளைப்பருவத்தில் சுயசுகாதாரம் என்பது முக்கியமானதாகும்.அத்தோடு பிள்ளைகளின் உடைக்கும் உளவியலுக்கும் இடையில் தொடர்பு காணப்படுகின்றது.எனவே ஆரம்பப் பருவத்திலுள்ள பிள்ளைகள் இவற்றை சரியாகப் பின்பற்றுவதன் மூலம் தங்களது கற்றல் செயற்பாட்டினை சரியாக மேற்கொள்ள முடியும்.

**பயிற்சி வினாக்கள்**

1. சுயசுகாதாரம் என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது.?
2. ஆரம்பப் பிள்ளைப்பருவப் பிள்ளைகளுக்குப் பொருத்தமான உடை பற்றி விபரிக்குக.
3. பிள்ளைப்பருவத்தினருக்குப் பொருத்தமான பழக்கவழக்கங்களை எடுத்துக் கூறுக?
4. உடல் ஆரோக்கியத்திற்கும் ஊட்டத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு யாது?
5. குறையூட்டம் கல்விக்கும் நீண்ட ஆயுளுக்கும் தடையாக இருக்கும் என்பதை ஏற்பீரா?

**உசாத்துணை நூல்கள்**

1. முத்துலிங்கம், க., (2012), கலியும் உளவியலும், சேமமடு புத்தகசாலை, கொழும்பு.
2. பாலசுப்பிரமணியம் தனபாலன், (2010), கல்விப் பிரயோக உளவியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. Mangal. S.K, (2012), Advanced Educational Psychology (2nd ed), Asoke K. Ghosh, PHI Learning Private Limited, New Delhi.
4. National Council of Educational Research and Training. (2014), Including Children With Special Needs: Primary Stage, Sri Aurobindo Marg, New Delhi

# அத்தியாயம் - 4

## ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்விசார் கலைத்திட்டம்

## பொருளடக்கம்


அத்தியாயம் 04

4. ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்விசார் கலைத்திட்டம்
   அறிமுகம்
   பிரதான சொற்கள்

   நோக்கங்கள்

   கற்றல் பெறுபேறு

4.4 ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வியின்முக்கிய கலைத்திட்டக் கூறுகள்

4.5 ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி கலைத்திட்ட உட்கூறுகள்

4.6 ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்விமுறையும் (Materials)

4.7 குழந்தைகளின் விருத்தியில் விளையாட்டின் முக்கியத்துவம்

அத்தியாயச் சுருக்கம்

பயிற்சி வினாக்கள்

பயன்படுத்தப்பட்ட நூல்கள்


### அறிமுகம்

பாடாலை கல்வி தொடர்பாக நோக்கும் போது ''கலைத்திட்டம் என்பது மிக பிரபல்யம் வாய்ந்ததொன்றாகும். நிறுவனம் சார்ந்த கல்வி முறைசார் கல்வி எனப்படுகின்றது. திட்டமிடப்பட்ட கலைத்திட்டம் காணப்படுவது முறைசார்ந்த கல்வியின் அடிப்படையான ஒன்றாகும். பாடசாலையின் முறையான நடைமுறை கல்வி நடவடிக்கைகள் அனைத்துமே கலைத்திட்டப்படியே நடைபெறுகின்றது.

பாடசாலையில் ஆசிரியர்களாலேயே கலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படு கின்றது. பாடசாலையில் கலைத்திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதுவே ஆசிரியரின் கடமையும் பொறுப்புமாகும். கலைத்திட்டத்தை திட்டமிடல்,


மாற்றியமைத்தல், மதிப்பிடல், அபிவிருத்தி செய்தல், போன்ற கலைத்திட்டம் சார்ந்த சகல நடவடிக்கைகளிலும் ஆசிரியர்கள் பங்கு கொள்ள வேண்டும்.

கலைத்திட்டம் தொடர்பான கருத்துக்கள் பண்டுதொட்டு இன்றுவரை விரிவடைந்து வந்துள்ளது. பண்டைக் காலத்தில் " கலைத்திட்டம" என்பது மிக எளிமையான ஒன்று எனக் கருதப்பட்டது எனினும் அது மிகச் சிக்கலான ஒரு கருத்து என்பது தெளிவு. திட்டமிடப்பட்டு சிறப்பான முயற்சியுடன் கற்றல் கற்பித்தல் நடைமுறைப்படுத்தப்படும் இடத்தில் ஒரு கலைத்திட்டம் உள்ளது எனக் கூறலாம். மாணவர்களுக்கு அனுபவங்களை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட அனைத்தும் கலைத்திட்டத்தில் அடங்கும் எனும் கருத்து பண்டைய காலத்தில் இருந்ததாக தெரியவில்லை.

**கலைத்திட்டம் தொடர்பான கருத்துக்களின் விரிகை**


லோட்டன் (1973) இனால் எழுதப்பட்ட சமூகமாற்றமும் கல்விக் கொள்கைகளும் கலைத்திட்டம் திட்டமிடல் எனும் நூலில் இடம்பெற்றுள்ளது

கலைத்திட்டம் பற்றிய பண்டைய கருத்து




கலைத்திட்ம் பற்றி தற்காலத்தில் விரிவாக கலந்துரையாடும் நிலை இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவாகியுள்ளது. கலைத்திட்ட கொள்கைகள், திட்டமிடல் முறைகள், மாதிரிகள், மதிப்பீட்டு முறைகள், ஒழுங்கமைப்பு கோலங்கள், ஒழுங்கமைப்புக்கள், உள்ளடக்கங்கள், அபிவிருத்திக் கோட்பாடுகள் என்றவாறு கலைத்திட்டம் தொடர்பான பல்வேறு அம்சங்கள் தற்காலத்தில் முன்வைக்கப்பட்டு பெரிதும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

கலைத்திட்ம் பற்றி தற்காலத்தில் விரிவுபடுத்தப்பட்ட விளக்கப்படம்




கலைத்திட்டம் என்பது தனியே மாணவர்களுக்கு அனுபவங்களை பெற்றுக்கொடுக்கும் ஒரு பாடமோ பாடப்பகுதியோ அல்ல என்பது கலைத்திட்ம் பற்றிய தற்கால கருத்தின் மூலம் தெளிவாகின்றது. மாணவர்களுக்கு அனுபவங்களை வழங்குவதற்காக பாடசாலையினால் ஒழுங்கு செய்து முன்வைக்கப்படும் சகல அம்சங்களும் சகல செயற்பாடுகளும் கலைத்திட்டத்தில் அடங்கும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் முறையான பாடங்களை கற்பிக்கும் நடவடிக்கைகளை மட்டுமன்றி மாணவர்களுக்காக பாடசாலையினால் ஒழுங்குசெய்யப்படும் விளையாட்டு விழாக்கள், கழக செயற்பாடுகள் போன்ற இணைப்பாடவிதான நடவடிக்கைகளையும் கலைத்திட்டமாகவே கருதுதல் வேண்டுமென கலைத்திட்ட சிறப்பறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

**கலைத்திட்டத்தின் பொறுப்பு**

சமூகத்தின் விரிவான தேவைகளை ஆற்றுவதற்காகச் சமூகத்தினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் ஒன்றாக கலைத்திட்டத்தை கருதலாம். கலைத்திட்டம் தொட்பான பொறுப்பு சமூகத்தை சார்ந்ததாகவும், பிள்ளைகளின் நிலைகள் தன்மைகளை சார்ந்ததாகவும் காணப்படுகின்றது. சமூகத்தில் மாணவர்களை நல்லதோர் நிலைக்கு கொண்டுவருவதற்காகவும் ஓர் முழுமையாக சமூகமயப்படுத்தப்பட்ட பிரஜையாக மாற்றும் பொறுப்பு சரியாக வடிவமைக்கப்பட்ட கலைத்திட்டத் தன்மைக்கு உண்டு எனக் கூறலாம். பாடசாலையில் ஆசிரியர் மாணவர் இடைத் தொடர்பினாலே கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கலைத்திட்டம் தொடர்பாக ஒவ்வொருவரதும் கண்ணோட்டத்திற்கமைய கலைத்திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்படும் பொறுப்புக்கள் பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. கலைத்திட்டதை வெவ்வேறு

கோணங்களில் நோக்கி விபரிக்க முடியும் என அயிஸ்னர், வலன்ஸ் (1974) ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

கலைத்திட்டத்தை,

1. அறிவாற்றல் விருத்தி செயன்முறை
2. தொழினுட்ப விருத்திச் செயன்முறை
3. பிள்ளையின் சுயதிறன் நிறைவுச் செயன்முறை
4. சமூக் சீர்திருத்த செயன்முறை
5. அறிவுபூர்வ மெய்மைகாண் செய்முறை

என்றவாறு நோக்கமுடியும் என அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

**கலைத்திட்டம் பற்றிய வரைவிலக்கணங்கள்**

- ஒக்ஸ்போட் ஆங்கில அகராதியில் ‘‘கலைத்திட்டம் என்பது பல்கலைக்கழகத்திலோ பாடசாலையிலோ காணப்படும் கற்கைப் பாடநெறி என வரையறுக்கப்பட்டுள்ளது.

- **கலைத்திட்ட அபிவிருத்தி எனும் நூலை எழுதிய டேலர்** (1974) கலைத்திட்டமானது பாடவிடயங்கள், கற்பித்தல் முறைகள், எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது எனவும் அவற்றின் இடைத் தொழிற்பாட்டினூடாகவே செயற்படு கலைத்திட்டம் உருவாகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

- **ஐக்கிய அமெரிக்க குடியரசில் வெளியிடப்பட்ட கென்ஸாஸ் அறிக்கையில்** (1958) கலைத்திட்டமானது அடிப்படையில் ஆசிரியரால் மேற்கொள்ளப்படுபவற்றின் பெறுபேறாக பிள்ளையிடத்தே ஏற்படுகின்றமையாகும், பிள்ளை பெறும் சகல அனுபவங்களும் அதில் அடங்கும் என கூறப்பட்டுள்ளது.

- வெற்றிகரமாக செயற்படுத்தக்கூடிய வகையிலும் நிதர்சன ரீதியில் சோதிக்க கூடியதாகவும் கல்விப் பிரேரணைகளின் இன்றியமையாக் கோட்பாடுகளையும் பண்புகளையும் முன்வைப்பதற்காகக் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியே கலைத்திட்டமாகும் என **ஸ்டென் ஹவுஸ்** (1975) குறிப்பிட்டுள்ளார்.

- இந்தியாவின் இடைநிலைக் கல்வி ஆணை அறிக்கையில் (1952) கலைத்திட்டம் என்பது பாடசாலையில் மரபு ரீதியாக கற்பிக்கப்படும் யாவற்றையும் கூட்டுமொத்தமாக கொண்டதே கலைத்திட்டம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

- மாணவர்களுக்கு அவர்களது ஆற்றல்களின் உச்ச மட்டத்திற்குப் பொருத்தமானவாறு உத்தேச கற்றல் பேறுகளை அடைவதற்கு உதவக்கூடியவாறாகப் பாடசாலையினால் வழங்கப்படும் திட்டமிடப்பட்ட சகல அனுபவங்களும் கலைத்திட்டமிடல் என **நகல், எவான்ஸ்** (1967) ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

- **வேர்விக் (1972) இனல் எழுதப்பட்ட " கலைத்திட்டத்தின் கட்டமைப்பும் வடிவமைப்பும்"** எனும் நூலில் மாணவர்களது உளவியல் தேவைகள், வசமுள்ள வளங்கள் தற்காலப் பண்பாட்டு போக்குகள் ஆகியவற்றுக்கு அமைய பாடசாலையினால் திட்டமிடப்படும் கல்வி செயன்முறை கலைத்திட்டமாகும் என்றார்.

**கலைத்திட்டத்தின் தன்மையும் விடயப்பரப்பும்**

பாடசாலை கலைத்திட்டத்தை விரிவான மூன்று பகுதிகளாக வகுக்கலாம்.

1. பாடசாலையின் பாடசாலை கற்பித்தல், வகுப்பறை கற்பித்தலை அடிப்படையாகக் கொண்ட முறைமையான கற்பித்தல்.

2. பாடசாலையில் மாணவர்க்கான சங்கங்கள், கழகங்கள், விளையாட்டு விழாக்கள் போன்றவை அடங்கிய பாட இணைச் செயற்பாடுகள்.

3. மாணவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற பாடசாலையின் சட்டதிட்டங்கள், வழமைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பாடசாலையின் பண்பாட்டுக் கோலமாகிய கலைத்திட்டம்.

கலைத்திட்டத்தை வடிவமைக்கும் போது அதில்,

1. இலக்குகளும் நோக்கங்களும் காட்டப்படல் வேண்டும்.

2. உள்ளடக்கம் தெரிவு செய்யப்பட்டு ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

3. கற்றல் கற்பித்தல் கோலம் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

4. மதிப்பீடு உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

என டாபா( 1962) என்பவரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

**கலைத்திட்ட அபிவிருத்திக் கோட்பாடுகள்**

இந்திய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி தொடர்பான தேசிய அவையினால் வெளியிடப்பட்டுள்ள " கலைத்திட்டமும் மதிப்பீடும்" எனும் நூலில் கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் பின்வரும் கோட்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றது.

1. பயன்பாடு பற்றிய கோட்பாடு.

2. பல்வகைமை பற்றிய கோட்பாடு

3. தேவை பற்றிய கோட்பாடு

4. பொருத்தப்பாடு பற்றிய கோட்பாடு

5. ஆயத்தம் பற்றிய கோட்பாடு

6. நெகிழும் தன்மை பற்றிய கோட்பாடு.

1. பயன்பாடு பற்றிய கோட்பாடு

மனிதனின் அறிவு திறன் மனப்பாங்கு அவனுக்கும் சமூகத்திற்கும் நன்மை தரும் வகையில் பயன் உடையதாக அமைதல் வேண்டும். அவ்வாறு பயன் தரும் வகையில் பிள்ளைகளை வழிப்படுத்தும் கலைத்திட்ட கோட்பாடு பயன்பாடு பற்றிய கோட்பாடு கூறுகின்றது.

2. பல்வகைமை பற்றிய கோட்பாடு

அறிவு பல்வகைப்பட்டது அதனை வெவ்வேறு வகைகளில், வழிகளில் பெறலாம். பல்வகைப்பட்ட அறிவைப் பெறுவதற்கு இயற்கையான ஊக்கம் காணப்படும் எனினும் சிறு பிள்ளைகளிடத்திருந்து அதனை சிறப்பாக முன்னேற்றும் முக்கிய காரணியாக கலைத்திட்டம் காணப்படுகின்றது.

3. தேவைகள் தொடர்பான கோட்பாடு

ஒவ்வொருவரும் நிறைவு செய்து கொள்ள விருப்பும் தேவைகள் இருவகைப்படும். உயிரியல் தேவைகள், உளத்தேவைகள் முக்கியமானவையாகும். இந்திய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி தொடர்பான தேசிய அவையினால் வெளியிடப்பட்டுள்ள ‘‘கலைத்திட்டமும் மதிப்பீடும்’’ எனும் நூலில் கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் பின்வரும் கோட்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றது. அதில் பிள்ளைகளின் தேவைகளையறிந்து கலைத்திட்டத்தை வடிவமைப்பது பற்றி தேவைக்கோட்பாடு தெளிவாக விளக்குகின்றது.

4.பொருத்தப்பாடு பற்றிய கோட்பாடு

மாணவர்களது வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் பொருத்தமான வகையில் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். மாணவர்களது தன்மைக்கு அமைவாகவும், அவர்களின் பிரதேச, மாகாண வேறுபாட்டுக்கு அமைவாகவும் அவர்களின் செயற்பாட்டுத் தன்மையை சிறப்பாக கலைத்திட்டத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளதை விபரிக்கும் கோட்பாாடு இதுவாகும்.

5. ஆயத்தம் பற்றிய கோட்பாடு

கற்பதற்காக முன்வைக்கும் யாதேனுமொன்றினைக் கற்கும் மாணவர் அதனை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கும் வேளையில் முன்வைப்பதே

மிகப்பயனுடையதாக அமையும். மாணவன் யாதேனும் ஒன்றினைக் கற்க ஆயத்தமாக இருக்கின்ற பொருத்தமான ஒரு சந்தர்ப்பத்தில் அதனை அம் மாணவர்களுக்கு முன்வைப்பது அவர்களது கற்றலை எளிதுபடுத்தும். இது பற்றியும் அதன் நுட்பம் பற்றியும் கூறும் கோட்பாடாகும்.

6. நெகிழும் தன்மை பற்றிய கோட்பாடு

மனித வாழ்கை பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டது. மாற்றமடைய முடியாத ஓர் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது கடினமானது. கலைத்திட்டத்தில் கட்டாய பாடங்களும் விருப்ப தொகுதி பாடங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அது கலைத்திட்டத்தில் மாணவர்களின் நலன்களை பெரிதும் கவனத்தில் கொண்டு அவர்களின் நெகிழும் தன்மை திறன்களுக்கு அமைவாக கலைத்திட்த்திலும் நெகிழும் தன்மையுள்ளதை விளக்கும் கோட்பாடு இதுவாகும்.

## 4.4 குழந்தைகளின் விருத்தியும் விளையாட்டு சூழலும்

ஆரம்பப் பிள்ளைப் பருவக்கல்வியில் குழந்தைகள் மிகவும் சுதந்திரமாக செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும். சில ஆரம்பக் கல்விக் கட்டங்களில் கற்றல் வளங்கள் அதிகமாகவும் சில பாடசாலைகளில் குறைவாகவும் காணப்படுகின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ளலாம். ஆரம்ப கல்வி நிலைகளிலுள்ள மாணவர்களின் தேவை என்பது ஒரே மாதிரியாக இல்லாததை நாம் பொதுவாகக் காணலாம். கற்கும் சூழல் என்பது தனிப் பாடத்திட்டத்தை மட்டுமல்ல. தேடும் ஆர்வம் விருத்தியடையக்கூடிய சூழல் என்பதும் இதில் ஓர் இடம் பெறுகின்றது.

குழந்தைகளின் பாடசாலை உட்புறச் சூழலானது பாதுகாப்பானதாக இருக்க வேண்டும், அங்கும் இங்கும் ஓடித்திரியக் கூடிய வசதி இருக்க வேண்டும். குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளில் முதலிடம் வகிப்பது இடவசதியாகும். நகர்ப்புறப் பாடசாலைக்கும், கிராமப்புறப் பாடசாலைக்குமிடையில் இந்த விடயத்தில் வேறுபாடு அதிகம். ஒரே இடத்தில் அல்லது ஒரு மேசையில் நீண்ட நேரம் அமர்ந்திருப்பது மனவெழுச்சி மற்றும் உடல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகும். மேலும் நேரம் என்பதும் இங்கு முக்கியம் பெறுகிறது. போதியளவு நேரம் வழங்கப்படும் போதுதான் சுய எண்ணப்படி அவர்கள் செயற்பட முடியும்.

மேலும் குழந்தைகளின் ஒழிந்து விளையாடும் இடம், உணவு உண்ணும் இடம், குழந்தைகள் தடையின்றி பொருட்களை உருவாக்கவும் கையாளவும் தேவையான இடம் முக்கியமானதாகும். அதேபோல் அங்குள்ள கருவி சாதனங்களை எடுக்கவும் கையாளவும் பின்னர் வைக்கவும் தெரிந்திருக்க வேண்டும். குழந்தைகளின் முழுமையான விருத்திக்கு அவர்களே தெரிவுகளையும் தீர்மானங்களையும் சுயமாக மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். அதேபோல் அமர்ந்திருந்து

புத்தகங்களைப் பார்க்கக் கூடியதும் கதைகளைக் கேட்கக் கூடியதுமான வசதிகள் இருக்க வேண்டும்.

பாத்திரமேற்று நடத்தல், தேடுதல்களை மேற்கொள்ளல், பல்வேறு கருவிகளைக் கையாளுதல், நிரப்புதல், கிளறுதல், கலத்தல் என்பனவற்றில் தனது திறன்களைப் பூரணமாக்கும் முயற்சியில் பங்கு கொள்வர். இங்கு போலக் கற்றல் அல்லது போலச் செய்தல் இடம்பெறுகிறது (Looking learning). மேலும் கற்பனை விளையாட்டுக்கள், மரக்கட்டைகளைக் கொண்டு விளையாடுதல், மட்டை தாள் போன்றவற்றைக் கொண்டு குழந்தைகள் தங்கள் தயாரிப்புக்களை மேற்கொள்ளவும், அதனைப் பாதுகாப்பாக வைத்து விட்டு வீடு செல்லவும் வாய்ப்பிருக்க வேண்டும்.

மரத்துண்டு, தாள் விளையாட்டிலிருந்து விடுவித்து படிப்படியாக எண், வடிவம், தொகை, நீளம், பரப்பு, நிறை, இடம் பற்றிய அறிவு வளர வாய்ப்பு ஏற்படுகிறது. வீடு கட்டப் பழகுதல், சித்திரம் கீறுதல் போன்ற பல விளையாட்டுக்களின் மூலம் குழந்தைகள் ஒன்றுகூடி வேலையில் ஈடுபடுகிறார்கள்; அறிவைத் தேடினார்கள்; உலகைப் புரிந்து கொண்டார்கள். அதாவது மணல், நீர், களிமண், ஓவியம், கழிவுப்பொருள் இவைகளைக் கொண்டு அவர்கள் பல செயற்பாடுகளில் ஈடுபடும் போது தண்டனையோ அல்லது தடையோ, அச்சமோ இல்லாமற் செயற்படுவார்கள். இவற்றின் மூலம் அவர்கள் மகிழ்ச்சியடைவதோடு மனவெழுச்சி ரீதியாக ஆரோக்கியம் பெறுகிறார்கள். அத்தோடு கதைகளைக் கேட்பதன் மூலமும், இசைகளை ரசிப்பதன் மூலமும் அவர்களிடம் அழகியல் உணர்வு விருத்தியடைகின்றது.

ஆரம்ப குழந்தைகள் கற்கும் நிலையங்களில் உட்புற வெளிப்புறச் சூழல் என்பது மிகவும் முக்கியமானதாகும். இவை இரண்டும் சேர்ந்து கற்கும் சூழலை வளர்க்கிறது.

பிள்ளைகளுக்கு விளையாட்டுக்கள் கீழ்வருமாறு உதவுகின்றது:

1. விட்டுக் கொடுக்கும் பண்பை வளர்த்தல்
2. கோபத்தை அடக்கக் கற்றுக் கொள்ளல்
3. மற்றவர்களோடு ஒத்துழைத்தல்
4. வெற்றியையும் தோல்வியையும் ஒன்றாக ஏற்கும் பண்பை வளர்த்தல்
5. தலைமைத்துவத்தைவிட்டுக் கொடுத்தல்
6. தலைமைத்துவத்தை ஏற்றல்
7. விதிகளையும் ஒழுங்குகளையும் ஏற்று நடத்தல்.

**அத்தியாயச் சுருக்கம்:**

மாணவர்களுக்கு அனுபவங்களை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட அனைத்தும் கலைத்திட்டத்தில் அடங்கும். இதனை ஒழுங்குமுறையாக படிமுறையாக வடிவமைப்பதே கலைத்திட்டமாகும்.

லோட்டன் (1973) இனால் எழுதப்பட்ட சமூகமாற்றமும் கல்விக் கொள்கைகளும் கலைத்திட்டம் திட்டமிடல் எனும் நூலில் இடம்பெற்றுள்ளது.

வேர்விக் (1972) இனல் எழுதப்பட்ட " கலைத்திட்டத்தின் கட்டமைப்பும் வடிவமைப்பும்" எனும் நூலில் மாணவர்களது உளவியல் தேவைகள், வசமுள்ள வளங்கள் தற்காலப் பண்பாட்டு போக்குகள் ஆகியவற்றுக்கு அடிப்படையாகவுள்ளது.

**பயிற்சி வினாக்கள்:**

1. கலைத்திட்டம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

2. கலைத்திட்டத்தின் நோக்கம் என்ன?

3. கலைத்திட்டம் பற்றிய வரைவிலக்கணங்கள் யாவை?

4. கலைத்திட்டத்தினை வடிவமைக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

5. கலைத்திட்ட அபிவிருத்திக் கோட்பாடுகள் யாவை?

**திறவுச் சொற்கள்:** கலைத்திட்டம், அறிவு, திறன், மனப்பாங்கு

**உசாத்துணை நூல்கள்:**


1. Mangal. S.K, (2012), Advanced Educational Psychology (2nd ed), Asoke K. Ghosh, PHI Learning Private Limited, New Delhi
2. National Council of Educational Research and Training. (2014), Including Children With Special Needs: Primary Stage, Sri Aurobindo Marg, New Delhi

# அத்தியாயம் 5

## ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வித் திட்டமிடலும் முகாமைத்துவமும்

**அறிமுகம்**

**பிரதான சொற்கள்**

**நோக்கங்கள்**

**5.1 திட்ட மிடல்**
**5.2 குறுங்கால நீண்டகால திட்டமிடல்**
**5.3 ஆரம்பப் பாடசாலைக்கான முகாமைத்துவம்**

### அறிமுகம்

ஆரம்பப் பிள்ளைப்பருவப்பாடசாலைகளில் அல்லதுநிறுவனம் ஒன்றில் காணப்படும் மனிதவளம், நிதிவளம் பௌதீகவளம் என்பவற்றை திட்டமிடல், உழுங்கமைத்தல்வழிநடத்தல்நிர்வகித்தல் கண்காணித்தல் ஆகிய வழிகளினூடாக வினைத்திறன் மிக்க முறையில் பயன்படுத்தி இலக்குக் குழுவினர் மத்தியில் அவர்களது அறிவு திறன் மனப்பாங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதனுடாக நிறுவனத்தின் நோக்கத்தை அடைதல் முகாமைத்துவம் எனப்படும்.

### பாடத் திட்ட மிடல்

பாடசாலை என்பது கற்றலுக்கான ஒரு நிலையமாகும். ஒருவருடத்தில் ஒருவகுப்பிற்காக நடைமுறைப்படுத்தப்படும் பாடவிதானத்தினுடாக மாணவர்களுக்கு வழங்கப்படும் அறிவு திறன்கள் மனப்பாங்குகள்என்பன எவ்வாறு பெற்றுக் கொடுக்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் திட்டமிடல் முக்கிய பங்கு வகிக்கின்றது.

நடைமுறைப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படும் கற்றல் நடவடிக்கைகள் பற்றிய வேலைத்திட்டத்தை முன் கூட்டியே தயார்படுத்திக் கொள்ளலே பாடத்திட்டமிடலாகும்.இத்திட்டமிடல வெற்றிகரமாக அமைவதற்கு 3 தேவைகள் நிறைவு செய்தல் வேண்டும்.

1. குறிக்கோள்களை நிறைவு செய்வதற்கு முறையான வழிவகைகள் இருத்தல்.

2. உத்தேச குறிக்கொள்கள் தெளிவானவையாக அமைதல்

3. அவ்வழிவகைகளின் வெற்றியை மதிப்பீடு செய்தல்

திட்டமிடப்பட்ட பாடமும் இச் சிறப்பியல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

திட்டமிடலின் போது ஆசிரியர் கீழ்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்

1. கல்வி அமைச்சின் வெளியீடுகள்

2. மாணவர்களின் தன்மை

3. கற்பித்தல் சார்ந்த விடயங்கள்.மேலும் திட்டமிடலானது பாடத்திட்டமிடல், பாடத்தைத் திட்டமிடல, செயற்திட்டங்களைத் திட்டமிடல்

ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்விநிலையங்களில் திட்டமிடல் என்பது மிகவும்அவசியமானதாகும் சிறந்த திட்டமிடல் ஊடாகவே ஆரம்பப் பிள்ளைப்பருவ நிலையங்கள் அடையவேண்டிய தேர்ச்சிகளைப் பெறமுடியும். ஆத்தோடு வளங்களை உச்சமாகப் பயஉச்சப்பயனைப் பெற்றுக் கொள்ளல், நேரம் விரையமாவதைத் தடுத்தல், சிறந்த தொடர்பாடலை வளர்த்தல், குழச் செயற்பாட்டின் மூலம் பிள்ளைகளின் திறனை மேம்படுத்தல், எதிர்பாக்கும் இலக்கினை அடைந்து கொள்ளல் போன்ற பல அம்சங்கள் காணப்படுவதை அவதானிக்கலாம். இத் திட்டமிடலானது குறுங்காலத்திட்டமிடல் , நீண்டகாலத்திட்டமிடல் என இரண்டுவகையாக நோக்க முடியும்.

**குறுங்கால நீண்டகால திட்டமிடல்**

திட்டமிடலின் வகைகளாக

1. நாளாந்த வேலைத்திட்டமிடல்

2. வாராந்த வேலைத்திட்டமிடல்

3. ஆண்டு வேலைத்திட்டமிடல்

4. சுற்றுலாவிற்கான திட்டமிடல்

5. ஒருங்கிணைந்த கற்றல் செயற்பாட்டினைத் திட்டமிடல்

6. புதிய பிள்ளைகளை வரவேற்கத்திட்டமிடல்

7. ஆண்டிறுதி கலை விழாவை அல்லது ஏனைய நிகழ்ச்சிகளைத்திட்டமிடல்

8. சமயநிகழ்ச்சிகளைத்திட்டமிடல்

9. சிறுவர் விளையாட்டு விழாக்களைத்திட்டமிடல்

## 5.3 ஆரம்பப் பாடசாலைக்கான முகாமைத்துவம்

சிறந்த கற்பித்தல், கற்றல் நிகழும் விதத்தில் வகுப்பை ஒழுங்கமைத்தலே வகுப்பறை முகாமைத்துவத்தில் முக்கியத்துவமானது. சிறந்த ஒழுங்கமைப்பின் மூலம் நோக்கங்களை எய்த வேண்டுமானால் செய்யவேண்டிய கருமங்களை வகைப்படுத்தலும் தெளிவுபடுத்தலும் அவசியமாகும். அக்கருமங்களுக்கிடையில் சிறந்த ஒழுங்கமைப்பும் தொடர்பாடலும் இருக்க வேண்டும். எனவேதான் ஆரம்பப் பிள்ளைப்பருவ ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையே சிறந்த தொடர்பாடல் இருக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில்

மனிதவளமுகாமைத்துவத்தில் தனிநபர் ஒருவர் சூழலுடனும் ஏனையவர்களுடனும் இசைவாக்கம் பெற பல நுட்பங்கள் உதவுகின்றன. ஆவை தொடர்பாடல் தேர்ச்சி நுட்பங்கள், ஆளகத் தொடர்புகள், ஆளிடைத் தொடர்புகள், முரண்பாடுகளைத்தீர்த்தல், மனவெழுச்சி அழுத்த முகாமை, தலைமைத்துவம், ஊக்கல், கலாசாரப்படுத்தல், நுண்மதி, சுயமதிப்பு, சமூகமயமாக்கல், நேரான சிந்தனைகள்குழச் செயற்பாடுகள் என்பன முக்கியமானவையாகும் எனப்படும்.

**வகுப்பறை முகாமைத்துவத்தில் பங்குகொள்ளும் ஆசிரியரின் பண்புகள்**

பிறருடன் பிள்ளைகளுடன் இணைந்து வேலை செய்வர்

தொடர்ந்து கற்றலில் ஈடுபடுவர்

ஆரம்பப் பள்ளியில் காணப்படும் ஆவணங்களைப முறையாகப் பேணுவர்

சிறந்த பலனைத்தரக் கூடிய வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடுவர்

மாணவர்களின் உடற்சுத்தம் சுகநல செயற்பாடுகள் உணவு, உடை, விடயங்களில் எப்போதும் கவனம் செலுத்துவர்.

மாணவர்களின்ஒற்றுமை, நல்லொழுக்கம், ஒத்துழைப்பு, கூட்டுறவு, சமாதானம், நல்லமனப்பாங்கு ஏற்படும் வகையில் முன்மாதிரியாகச் செயற்படுவர்.

முாணவர்களின் பாடவழிகாட்டி நூல்கள், துறைசார் நூல்கள், குறிப்புக்கள், கற்பித்தல் சாதனங்கள் முறையாகப் பயன்படுத்துவர்.

அரசாங்க உள்ளூராட்சித்திணைக்கள , கல்வித்திணைக்கள, சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சு போன்றவற்றின் வழிகாட்டல்களைப்பின்பற்றுவர்.

வகுப்பு நேரசுசி, பாடத்திட்டமிடல் கற்பித்தல், நாளாந்த வேலைத்திட்டம், கற்பித்தல் சாதனங்கள் போன்றவற்றை முறையாகப் பேணுவதோடு ஒழுங்காகப் பயன்படுத்துவர்.

**அத்தியாயச் சுருக்கம்:**

பிள்ளைகள் தொடர்ச்சியாக கற்றுக் கொள்வதற்கு திட்டமிடல் முக்கியமாகக் காணப்படுவதோடு முகாமைத்துவமும் அவசியமாகின்றது. இம் முகாமைத்துவம் சிறப்பாக செயற்படுவதற்கு திட்டமிடல் அவசியமானதாகும் அப்போதுதான் சிறந்த கற்றல் செயற்பாட்டினை எதிர்பாற்க முடியும். பிள்ளைகளுக்கு இடையே தொடர்பு அதிகரிப்பதற்கும், ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையே தொடர்பு அதிகரிக்கும். மேலும் பிள்ளைகளின் தொடர்பாடல் திறன், பேச்சுத்திறன், மனவெழுச்சித்திறன், பிள்ளைகள் சமூகமயமாகும் திறன் இதன் மூலம் அதிகரிக்கின்றது.

**பயிற்சி வினாக்கள்:**

1. கலைத்திட்டமிடல என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

2. திட்டமிடலின் நோக்கம் என்ன?

3. திட்டமிடல் பற்றிய வரைவிலக்கணங்கள் யாவை?

4. பாடத்திட்டமிடலை வடிவமைக்கும் போது ஆசிரியர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

5. முகாமைத்துவம் என்றால் என்ன?

**திறவுச் சொற்கள்: திட்டமிடல்**, தொடர்பாடல், அனுபவம், பிரச்சினைகளைத் தீர்த்தல்

**உசாத்துணை நூல்கள்:**


செல்வராஜா.மா, (2006) முன்பள்ளிக்கல்வி , மட்டக்களப்பு எவகிறீன் அச்சகம்

கல்விப்பீடம்(2005), முன்பள்ளிக் கல்விக் கோட்பாடுகள், திறந்த பல்கலைக்கழகம்

Sen Gupta.M, (2013), Early Childhood Care and Education, Delhi, PHI Learing Private Limited

## அத்தியாயம் - 06

**குழந்தைப் பாதுகாப்பு, ஆரோக்கிய விருத்தியில் : உடலியல், மனவெழுச்சி, இயக்கவிருத்திகள்**

அறிமுகம்

பிரதான நூலகள்

நோக்கங்கள்

6.1 உடல் வளர்ச்சி செயற்பாடுகள்

6.2 இயக்க வளர்ச்சி செயற்பாடுகள்

6.3 அறிவு வளர்ச்சி செயற்பாடுகள்

6.4 மனவெழுச்சி வளர்ச்சி செயற்பாடுகள்

6.5 மொழி வளர்ச்சி செயற்பாடுகள்

6.6 சமூக வளர்ச்சி செயற்பாடுகள்

மனித வாழ்வில், பள்ளி முன்பருவம் வரையிலான வருடங்களை மூன்று முக்கிய நிலைகளாகப் பிரிக்கலாம். அவை

1. சிசுப்பருவம், 2. மழலைப்பருவம், 3. குழந்தைப்பருவம் ஆகும்

இந்த மூன்று நிலைகளிலுமே ஆறு வளர்ச்சி மாற்றங்கள் நடைபெறுகின்றன. அவை உடல் வளர்ச்சி, இயக்க வளர்ச்சி, அறிவு வளர்ச்சி ,மனவெழுச்சி வளர்ச்சி, மொழி வளர்ச்சி, சமூக வளர்ச்சி என்பனவாகும்.

### 6.1 உடல் வளர்ச்சி (Physical Development)

வளர்ச்சி என்பது உடல் திசுக்களின் எண்ணிக்கையின் உயர்வாகும். குறிப்பாக உடலின் எடை மற்றும் உயரத்தில் உள்ள மாறுபாடுகளை உள்ளடக்கும். அதாவது வளர்ச்சியானது உடலில் ஏற்படக் கூடிய பரிமாண மாற்றங்களைக் குறிக்கிறது. உடல் வளர்ச்சி என்பது உடலில் பெருக்கம் அல்லது விருத்தியைக் குறிக்கிறது. பொதுவாக,இது உடலின் எடை மற்றும் உயரத்தில் உள்ள மாற்றங்கள், உடல் கூறுகளின் மாற்றங்கள் வளர்ச்சியைக் குறிக்கும்.தசை வளர்ச்சி நரம்பு மண்டலவாழ்வின் முதல் இரண்டு அல்லது மூன்று வருடங்களே மனித உடலின் மிக வேகமான வளர்ச்சிக் கால கட்டமாகும்.

வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆகிய இரண்டு சொற்களையும்மாற்றி உபயோகித்தாலும், அவற்றினிடையே ஒரு தெளிவான வேறுபாடு உண்டு. ஹர்லாக்கின் (Hurlock) கூற்றுப்படி பெருக்கம் அல்லதுமுன்னேற்றம் என்பது,

தொடர்ச்சியான, வரிசைக் கிரமத்தில் அமைந்த, வளர்ச்சியின் இலட்சியத்தோடு அமைந்த ஒன்றோடொன்று தொடர்புடைய, முரணற்ற மாற்றங்களைக் குறிக்கும்.முதல் நிலைக்கும், அதனை அடுத்து வரும் நிலைகளுக்கும் ஒரு தீர்க்கமான தொடர்பு உண்டு என்பதையே "முரணற்ற" என்ற சொல் குறிக்கிறது.

குழந்தையின் வளர்ச்சியில் பல்வேறு நிலைகள். பிறந்தது முதல் பதினைந்து நாள்கள் வரையில் குழந்தை "நியோநேட்" என்று அழைக்கப்படுகிறது. இப்பருவத்தைக் 'சிசுப்பருவம்" எனவும் அழைக்கலாம். பின்னர் இரண்டு ஆண்டுகள் வரையில் மழலைப் பருவம் எனப்படும் மூன்று முதல் ஆறு ஆண்டுகள் வரை குழந்தைப் பருவம் எனப்படும்.

புதியதாகப் பிறந்த சிசு சராசரியாக 6 முதல் 8 பவுண்டுகள் எடையுடனும், 18 அங்குல உயரத்துடனும் காணப்படுகிறது.மழலைப் பருவம் மற்றும் குழந்தைப் பருவங்களில் உடல்வளர்ச்சியில் காணப்படும்

விரைவாக வளர்ச்சியடையும். கண் பார்வை, முகர்தல், இவை தவிர, மழலைப்பருவத்தில் நரம்பு மண்டலம் மிகவும் உணர்ச்சி, கேட்கும் சக்தி, சுவை போன்ற உணர்ச்சிகளை அறியும் வகையில் குழந்தையின் உணர்ச்சி உறுப்புகளும் இப்பருவத்தில் நன்கு வளர்ச்சியடையும்.

உடல் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் பள்ளி, முன்பருவக் கல்வி மற்றும் ஆசிரியையின் பங்கு குழந்தைகளின் பெரிய, சிறிய தசைகள் வளர்ச்சியடையச் செய்வதில் முன்பருவக் கல்வி அதிக வாய்ப்புகளை அளிக்க முடியும். குழந்தையின் நடை, ஓட்டம், துள்ளல் போன்ற செயல்களைத் திறம்படச் செய்ய உதவுகிறது. பள்ளியின் உள்ளே உள்ளஅனைத்து வசதிகளும். விளையாட்டுக் கருவிகளும் குழந்தையின் உடல் வளர்ச்சியை ஊக்கவிக்கும்.

குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு முன் பருவப் பள்ளியில் ஆசிரியைகள், குழந்தைகளை ஏணி, சறுக்கு, ஊஞ்சல் போன்றவற்றில் விளையாட வாய்ப்பளிக்கின்றனர். இவற்றில் குழந்தைகள் குதித்து, ஓடி, ஏறி விளையாடுவர். இந்தச் செயல்களால் குழந்தைகளின் தசையும், இடுப்பு எலும்புகளும் நல்ல வலுவடையும். ஏற்றப் பலகை, மூன்று சக்கர வண்டி போன்றவை குழந்தையின் உடல் வளர்ச்சியில் குறிப்பாக கால்களின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. குட்டிக்கரணம் அடித்தல், குதித்தல், ஓடிப்பிடித்து விளையாடல், எறிபந்து, குத்துச்சண்டை முதலிய செயல்களிலும் குழந்தைகள் ஈடுபடுகின்றனர். இச்செயல்கள் தசைகள் ஒன்றோடொன்று நன்கு இணைந்து செயற்பட உதவுகிறது.

மண்தொட்டியில் விளையாடுவது, தோட்டவேலை, செல்லப் பிராணிகள் வளர்ப்புப் போன்ற வெளி விளையாட்டுகளும், குழந்தைகளின் தசை வளர்ச்சிக்கும், கண்களும் கைகளும் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கும் பெரிதும் உதவுகிறது. கோத்தல், சித்திரம் வரைதல், வெட்டி ஒட்டுதல்,

நடனம் போன்ற இசைக் கருவிகள் வாசித்தல், நாடகங்களில் நடித்தல், பாசிசெயல்கள் ஆகிய உள் விளையாட்டுகளும் குழந்தைகளின் சிறியதசை வளர்ச்சிக்கும், தசைகள் கட்டுப்பாட்டிற்கும், கண்கள், கைகள் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கும் பெரிதும் உதவுகின்றன. முன்பருவக் கல்விக்கூடங்களில் கொடுக்கப்படும் சத்துள்ளஉணவும், தின்பண்டங்களும் குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. அவர்களின் ஊட்டச்சத்தின் தேவையும் இதன் மூலம் ஓரளவு பூர்த்தி செய்யப்படுகிறது.

இச்சாதனங்களைக் கையாளும்போது குழந்தைகள் எந்தவிதமான ஆபத்தில் சிக்கிக் கொள்ளாமலும் மிகுதியாகப் பயனடையும் வகையிலும் ஆசிரியை செயல்களை மேற்பார்வையிட வேண்டும். உடல் வளர்ச்சியை ஊக்குவிக்கும் விளையாட்டுக் கருவிகள் முன்பருவக் குழந்தைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

ஒரு வயது முடியும் வரையிலும், குழந்தை கையெழுத்தும் தலையிலும் கரும்பலகையிலும் கோடுகள் போடுதல், வரைதல் பெரிய வெற்றுத் தாளின் நடுவே பென்சிலால் கிறுக்கும். பின்னர்த் ஆகியவற்றில் ஈடுபடும். சராசரியாக ஆறுவயது வரையில் குழந்தை எழுதுவதற்குத் தயார் நிலையில் இருக்காது, இந்த வயதில் கைகளின் நரம்புகளும், நுண்தசைகள் நல்ல வளர்ச்சி அடையாத நிலையில் கண்களும், கைகளும் ஒருங்கிணைந்து செயற்படுவது கடினமாகும். நான்காவது வயதில் சில பெரிய எழுத்துகளை எழுத ஆரம்பிக்கும். ஐந்தாவது வயதில் தன் பெயரை எழுதும்.

ஆறாவது வயதில், எழுத்துகள் அனைத்தும் கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தால் குழந்தை அதனையும் எழுதும். பார்த்து எழுதுதல் : இச்செயலுக்குக் கைகளும், கண்களும் இணைந்து செயற்படுவதுடன், ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் அறியக் கூடிய தன்மையும் குழந்தைக்கு அவசியமாகிறது. 2 முதல் 5 வயது வரையில் சில சித்திரங்களை வரைவதில் குழந்தை ஆர்வம் காட்டுகிறது. முன்பருவப் பள்ளியும், ஆசிரியையும் குழந்தைகளின் உடல் வளர்ச்சியை நிச்சயமாக ஊக்குவிக்கமுடியும்

## 6.2 இயக்க வளர்ச்சி (Motor Development)

வாழ்வின் முதல் ஐந்து ஆண்டுகளில் குழந்தைகளின் இயற்கையான செய்கைகள் அனைத்தும் நுண்ணிய இயக்க தசை வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. உடலின் பல்வேறு தசைகளின், இயக்கங்களின் வளர்ச்சியை இயக்க வளர்ச்சி (Motor Development) என்கிறோம்.இத்தகைய நுண்ணிய இயக்கங்கள்தேவைக்கேற்ப இயைந்து செயற்படுவதோடு மட்டுமல்லாமல்,அவை தாமாக இயங்கும் இயந்திரங்கள் போலவும் செயற்படுகின்றன. எந்த ஓர் உயிரினமும் தன்னிடம் எதிர்பார்க்கப்படும் பதில்விளைவு என்ன என்பதை ஆவலுடன் எதிர்பார்த்து, அதற்கு ஏற்றாற்போலத் தன்னுடைய அங்க நிலையைச் சரிக்கட்டும் போதுதான், அதன் செயலில் முன்னேற்றத்தின் வேகம் அதிகரிக்கிறது.

இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய அங்கநிலை செயலானது, புதிய சூழ்நிலைகளுக்கேற்பத் தன்னைச் சரிக்கட்டிக் கொள்ளும் சுதந்திரத்தை அளிப்பதொடு மட்டுமல்லாமல்,இனிவரும் காலங்களில் நுண்செயல்களின் சிறந்த வளர்ச்சிக்குக்குழந்தையைத் தயார் நிலையில் வைக்கிறது.

**இயக்க வளர்ச்சியின் நிலைகள்**

நான்கு வாரக் குழந்தை நான்கு வாரங்களே ஆன சிசு விழித்திருக்கும்பொழுது,மல்லாந்து படுத்த நிலையில் தலையை ஒரு புறம் சாய்த்திருக்கும். சிறிது நேரம் தலையை நடுநிலைக்குக் கொண்டு வந்து மீண்டும்உடனேயே சாய்த்துக் கொள்ளும். தலை சாய்ந்திருக்கும் திசையில் ஒரு கை நீண்டு இருக்கும். மற்றொரு கை, மார்பின் மீதோ,கீழேயோ இருக்கும், கையை நான்கு மாதக் குழந்தைஅங்குமிங்கும் ஆட்டி மகிழும்.நடுநிலையில் நிலைத்து நிற்கவும் ஆரம்பிக்கும்.

நான்கு மாதத்தில் குழந்தையின் தலை சுலபமாக நகரவும் காலத்தில் நல்ல வளர்ச்சியடைந்திருக்கும். குழந்தையின் முன்னால் தொங்கவிடப்பட்டிருக்கும் விளையாட்டப் பொம்மை தலை, தோள்கள் மற்றும் கைகளின் நகர்வுகளை ஊக்குவிக்கும். தலை யணையின் ஆதாரத்துடன் அமர்வதிலும், ஆதாரம் இன்றித் தலையை உயர்த்திப் பார்ப்பதிலும் குழந்தை மகிழ்கிறது. செயல்களுக்கு ஏற்ப தலையை அங்குமிங்கும் அசைக்கும்.

**ஏழு மாதக் குழந்தை**

28 வாரங்கள் முடிவடையும்பொழுது குழந்தையால் நிமிர்ந்து அமர முடியும். குழந்தையின் இயக்க வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் இருக்கும். ஒரு பொருளைக் கையில் எடுத்து, அதனைமற்றொரு கைக்கு மாற்றி விளையாடும். கைகளைக் காட்டிலும்,கண்களால் ஏற்படும் ஒத்துழைப்புகளே முன்னேறி இருக்கும். உருண்டு செல்லும் சிறு குண்டினை, அது செல்லும் திசைநோக்கிக் கண்களைச் செலுத்தும். ஆனால், அக்குழந்தையால் அதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை

**பத்து மாதக் குழந்தை**

இந்தப் பருவத்தில் குழந்தையால் தானே நிற்க இயலாவிட்டாலும், அதன் கால்கள் உடலின் எடையைத் தாங்கிக் கொள்ளப்பழகிக் கொள்கிறது. நடுநிலையாக அமர்வதில் நல்ல தேர்ச்சிபெறுகிறது் உட்கார்ந்த நிலையில், ஒரு புறமாகத் திரும்பவோ பலகோணங்களில் சாய்ந்து பார்க்கவோ, மீண்டும் சமநிலை அடையவோ முடிகிறது. அமர்ந்த நிலையிலிருந்து முன் கவிழ்ந்து படுக்கவோமுன் கவிழ்ந்து படுத்த நிலையிலிருந்து மீண்டும் அமரவோ முடிகிறது. முன் கவிழ்ந்து படுத்த நிலையில் குழந்தையால் பின்னோக்கிச்செல்லவோ, அசைந்தாடவோ, ஊர்ந்து செல்லவோ இயலும்.பற்றுகை உணர்வு குழந்தைகளிடம் பல நுண்ணிய திறமைகளை வெளிக்காட்டச் செய்கிறது. ஆட்காட்டி விரலும், பெருவிரலும் பக்குவப்பட்ட

வளர்ச்சியைக் காண்பிக்கிறது. பறித்தல்,சுட்டிக்காட்டுதல் போன்ற நகர்வுகளைச் செய்கிறது.

### ஒரு வயதுக் குழந்தை

ஒருவயதுக் குழந்தையால் பாதங்கள், கைகள் உதவியுடன் அல்லது முட்டிகள், கைகள் உதவியுடன் ஊர்ந்து செல்ல முடியும். தவழ்வதில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தாலும், நான்கு வாரங்கள் வரையில் அது பிறர் உதவியுடன் மட்டுமே சாய்ந்து நிற்கவோ, நடக்கவோ இயலும். அதன் பிறகே அது சுதந்திரமான சமநிலையில் நிற்கப் பழகுகின்றது. அதன் அதனது பற்றுகை உணர்வு நல்ல முதிர்ச்சி நிலையினை அடைந்ததாகவும், செய்திறன் மிக்கதாகவும், நுட்பம் வாய்ந்ததாகவும் இருக்கும். ஒரு பொருளினை எளிதில்பற்றிக் கொள்ளவும், பற்றிக் கொண்ட பொருளினை விடுவிக்கவும் கற்றுக் கொள்கிறது.

### பதினெட்டு மாதக் குழந்தை

குழந்தையின் கால்கள் ஓரளவு அதன் கட்டுப்பாட்டிலேயே நடக்கும் பாணியானது, ஓட்டத்தினைப் போல அல்லாமலும்,நடத்தல் தளர்நடை போன்றவற்றைக் காட்டிலும் மேம்பட்டதாயும்பெரியவர்களது நாற்காலியில் ஏறி அமர முயற்சி செய்கிறது. பிறர் இருக்கும். குழந்தைகள் நாற்காலியில் எளிதாக ஏறி அமர இயலும். உதவியுடன் மாடிப்படிகளில் ஏற முடியும். ஒவ்வொரு படியாகக் குதித்தோ, பின்னோக்கி ஊர்ந்தோ பிறர் உதவியின்றி அக்குழந்தையால் படிகளில் கீழிறங்கவும் முடியும்.கொண்டு நடக்க முயற்சிக்கும். பின்னர்த் தானே சக்கரங்கள்முதலில் நாற்காலியையும், தள்ளுவண்டியையும் தள்ளிக்பொருத்தின பொம்மையை இழுத்துக்கொண்டு தனியே நடந்து மகிழ்கிறது.

### இரண்டு வயதுக் குழந்தை

இரண்டு வயதுக் குழந்தை முழுமையான இயக்கச் செயல்களை மகிழ்வோடு செய்யும். அவனது முட்டிகளும், கணுக்கால்களும் முதிர்ச்சியடைய ஆரம்பித்ததால் அதனால் சமநிலையில் நிற்கஇயலும் வேகமாக ஓடவும் இயலும். படிகளில் கீழிறங்கும் பொழுது, அது தன்னிச்சையாக ஒரு கால், மற்றொன்றினைப் பின்தொடர்ந்து வரும் வகையில் குதித்து இறங்கும். ஒரு பந்தின்அருகில் நடந்து சென்று, உதைக்கச் சொல்லும்போது உதைக்கவும்முடியும். சமநிலையுடன் வேகமாக நடந்து செல்லும். ஆனால்,அதே வேகத்தில் மற்றொரு திசைக்குத் திரும்ப இயலாது. திடீரென நிறுத்தவும், சிறு திருப்பங்களை மேற்கொள்ளவும் முடியும். முரட்டுத்தனமாகக் குட்டிக்கரணம் அடித்து மகிழும். மகிழ்ச்சியான உணர்வுகளை நடனம் ஆடுதல், கைகளைத் தட்டி ஒலிஎழுப்புதல், உரக்க சப்தமிடுதல், விடாமல் சிரித்தல் போன்ற செய்கைகள் மூலம் வெளிப்படுத்தும்.மற்றவர்களிடம் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்ற நிலையிலும் தனக்குத் தானே பேசுவதிலும், தொடர்ந்து பேசுவதிலும் மகிழ்ச்சி கொள்ளும். தானாகவே உணவை

உட்கொள்ளும் திறனையும் பெறுகிறது. விரல்களின் நுண்தசை வளர்ச்சியின் காரணமாகப் புத்தகங்களின் பக்கங்களைப் புரட்டுவது எளிதாகிறது. ஆறு கட்டைகள் கொண்ட ஒரு கோபுரத்தைக் கட்ட முயன்று, அதில் வெற்றி காணுகிறது. கத்திரியைக் கைகளில் பற்றிக் காகிதங்கள் வெட்டும். ஊசி கொண்டு பாசிகள் கோக்கவும், பால் நிரம்பிய கோப்பையை ஒரு கையின் பெருவிரலால் பற்றிக் கொண்டு, மற்ற விரல்களை எதிர் போல வைத்து, மற்றொரு உள்ளங்கையில்அதனை வைத்துப் பிடித்துக் கொள்ள இயலும்.

**மூன்று வயதுக் குழந்தை**

மூன்று வயதுக் குழந்தை இயக்கச் செயல்களில் மிகுந்த ஆர்வமடைகிறது. பல மணி நேரங்கள் அமர்ந்த நிலையிலேயேவிளையாடுவதில் திருப்தியடைகிறது. வண்ணப் பென்சில்கள், உபயோகிப்பதிலும், விளையாட்டுப் பொருள்களைக் கையாளுவதிலும் விருப்பம் காட்டுகிறது. பார்த்து வரையும் பொழுதோ, தானே வரையும் பொழுதோ, நகர்வுகளை வரையறுப்பதில் அதிகத் திறன் பெறுகிறது.

நான்குவயது வரையில் குழந்தையால் ஒரு மனிதனை வரைய முடியாது. என்றாலும், கட்டுப்படுத்தப்பட்ட குறியீடுகள் இடுவதன் மூலம் அதனுடைய இயக்க வளர்ச்சியில் முன்னேற்றம் காணப்படுகிறது. ஆறு முதல் ஏழு கனசதுரக் கட்டைகளால் கோபுரங்கள் கட்டவும் முடியும். தன் பாதங்களைப் பதித்து ஓடும் திறனை அடையும். தன் ஓட்டத்தினைத் துரிதப்படுத்தவோ, குறைக்கச் செய்யவோ, முடுக்குகளில் திரும்பவோ, இடர்களைத் தவிர்க்க எண்ணி உடனேநிறுத்தவோ முடியும். பிறர் உதவியின்றிக் கால்களை மாற்றிவைத்துப் படியேற முடியும். மூன்று சக்கரச் சைக்கிளை மிதித்து ஓட்டி மகிழும். இரண்டு கால்களால் நிற்கவும், ஓடவும் நன்கு தேர்ச்சி பெற்ற குழந்தையால், ஒற்றைக்காலில் 2 அல்லது 3வினாடிகள் வரை நிற்க இயலும். நான்கு வயதுக் குழந்தை நான்கு வயதுக் குழந்தை சமநிலையுடனும், நேர்த்தியுடனும் ஓடும். கோலின் கூர்முனையினை, ஒரு சிறு துளையினை நோக்கி குறிபார்த்து எறிந்து, அந்த வெற்றியில் புன்முறுவல் செய்யும். மிகவும் எளிதாகத் தன் சட்டையின் பொத்தான்களைப் பொருத்தும். மிகவும் நேர்த்தியாகவும், துல்லியமாகவும் கைகளை அசைக்க இயலும்.

**ஐந்து வயதுக் குழந்தை**

ஐந்து வயதுக் குழந்தையினால் மிகவும் எளிதாக நொண்டிஅடிக்கவும், குதிக்கவும் முடியும். தன் திறமையில் நம்பிக்கையுடன்தன்னைத்தானே நடத்திச் செல்ல இயலும். ஒற்றைக்காலில் நிற்கவும் தன் கால் விரல்களில் பல நொடிகள் தொடர்ந்து நிற்கவும்முடியும். இத்தகைய இயக்க ஆற்றல்களின் முதிர்ச்சி, நடனம், தேகஉடற்பயிற்சி போன்றவற்றினைக் கற்றுக் கொள்ளத் தயாராக்குகிறது. தன் பற்களைத் தானே துலக்கிக் கொள்ளுதல், தலை வாரிக் கொள்ளுதல், முகம் கழுவுதல் போன்ற செயல்களைத் தன்னிச்சையாகச் செய்வதிலும், வண்ணப் பென்சில்கள், தூரிகைகள் கொண்டுவரைவதிலும் நல்ல தேர்ச்சி காண்பிக்கும். “மனிதன்“

என்றுஅடையாளம் காட்டுகிற வகையில் மனித உருவங்கள் வரையவும்இயலும்.

பெருந்தசை இயக்க வளர்ச்சியை ஊக்குவித்தல் நடத்தல், ஒரு பொருளிலிருந்து மேலோ, கீழோ அதனைத் தாண்டியோ குதித்தல், ஓடுதல், ஏறுதல், தவழ்தல், சறுக்குதல், உருளுதல், பந்தினை எதிர்த்தடித்தல், உயரமான ஒன்றின் மீதுஏறுதல் அல்லது தாண்டி நடத்தல் போன்றவை பெரும் தசைஇயக்க வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான சில செயல்களாகும்.

## 6.3 அறிதிறன் வளர்ச்சி (Cognitive Development)

பியாஜே (Piaget) என்ற ஸ்விட்சர்லாந்து உளவியல் அறிஞரின் கருத்துப்படி அறிதிறன் வளர்ச்சியானது பல நிலைகளில் நிகழ்கிறது: அறிதிறன் வளர்ச்சி தொடர்ச்சியானதாக மட்டுமின்றிப்படிப்படியாக நிருணயிக்கப்பட்ட வகையில் நிகழ்கிறது. இவ்வாறுபடிப்படியாக ஏற்படும் வளர்ச்சியானது பல வளர்ச்சி நிலைகளாகவும், அதற்கே உரித்தான நடத்தை மாற்றங்களைக் கொண்டதாகவும் அமைகிறது. உளவியல் அறிஞர்கள், நுண்ணறிவு என்பது,திறன்களைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் சொல் என்று கூறுகின்றார்கள்.

பிரிமன் என்ற அறிஞரின் கருத்துப்படி நுண்ணறிவு என்பதுகற்றல் திறன் மற்றும் ஆக்கச் சிந்தனைத் திறன் இவற்றினைக்குறிப்பிடுவதாக அமைகிறது.

இந்தப் பருவத்தில் குழந்தை சொற்களைப் பயன்படுத்துகிறது.பொருள்களைப் பெயர்களின் அடிப்படையில் அறிந்து கொள்கிறது. "தான் என்ற உணர்வு" (Ego) ஏற்படுகிறது. "பிறருடையகருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத நிலையில் குழந்தையிடம்

''தான், தனது'' என்ற எண்ணம் ஏற்படுகிறது.முன்கருத்துப் பருவத்தில் ஏற்பட்ட ஆராய்ச்சி, சிந்தனைசிறப்பான வளர்ச்சி அடைகிறது. இப்பருவத்தில் சிந்தனை உள்ளுணர்வுப் (Intuitive Stage) பருவத்தில் மேலும் வலுப்பெற்று ஆராய்வு ஆகியவற்றினைப் பயன்படுத்தி வெளிஉலகு பற்றியது உண்மை நிலையினை அறிந்து கொள்ளும் திறனைப் பெறுகிறது.

ஏழு முதல் பன்னிரண்டு ஆண்டுகள் வரையுள்ள பருவத்தினைபியாஜே திட்டமிட்ட செயல் நிலைப்பருவம் எனக் குறிப்பிடுகிறார்.இப்பருவத்தில் குழந்தையானது தன்னிடம் உள்ள பல கருத்துக்களைப் பயன்படுத்த ஆரம்பிக்கிறது. இப்பருவத்தில் பொருள்களை அதன் தொடர்பின் அடிப்படையில், மிகவும் திட்டவட்டமாக அறிந்துகொள்கிற காரணத்தால் இதனை பியாஜே திட்டமிட்ட செயல்நிலைப் பருவம்'' என்று குறிப்பிடுகிறார்.

முறையான செயல்நிலைப் பருவம் என்பது 12 வயது அல்லதுஅதற்கு மேற்பட்ட பருவத்தினைக் குறிக்கும். குழந்தையானது 12வயதில் பரிசோதனையின் அடிப்படையில் உண்மைகளை அறிந்துகொள்கிறது. ஏன்,

எப்படி என்ற கேள்வியின் அடிப்படையில்பொருள்கள் அல்லது நிகழ்ச்சிகள் பற்றிய உண்மை நிலையைஅதன் அடிப்படையில் பொருள்கள் பற்றிய முடிவினைப் அறிந்துகொள்கிறது. கருதுகோள்களை ஆராய்ந்துகிறது.

அறிதிறன் கற்றல் புலன்கள் மற்றும் அறிவுநிலை இவற்றின் அடிப்படையில்நிகழும் கற்றலை "அறிதிறன் கற்றல்" என்பர். எனவே அறிதிறன்கற்றல் என்பது புலன்காட்சி முறையாகத் தொடர்புபடுத்துதல், உண்மைகளை ஆராய்தல் மற்றும் புரிந்துகொள்ளுதல் போன்றசெயல்களைக் குறிக்கும்.

ஆரம்ப காலத்தில், ''குழந்தைகளுக்குப் பொருள்களின்நிலைத்த தன்மையைப் பற்றிய ஒரு தெளிவான எண்ணம் இருக்காது", என்ற பியாஜேவின் கருத்தினைப் பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக் கொள்கின்றார்கள்.

பள்ளி முன்பருவப்பள்ளியின் பங்கு : பொதுவாகக் குழந்தை தனது 3 வயது முதல் 5வயது வரை முன்பருவப் பள்ளியில் இருக்கிறது. இப்பருவத்தில்நாம் சொல்வதைக் குழந்தையால் புரிந்து கொள்வது கடினம்.தனது செயல்கள், படங்கள், பொம்மைகள் போன்ற பல்வேறு விளையாட்டுக் கருவிகள் மூலமாகக் குழந்தை தனது அறிவுத்திறனை வளர்த்துக் கொள்கிறது. ஆகவே, இந்த வாய்ப்புகளைஅளிப்பது இன்றியமையாத ஒன்று. விளையாட்டுக் கருவிகளும் பொருள்களும் : குழந்தைகளின் வெவ்வேறு அறிதிறன் வளர்வதற்கு ஒவ்வொரு நிலையிலும் விளையாட்டுக் கருவிகளும், பொருள்களும் கொடுக்கப்பட வேண்டும்.

ஆசிரியரின் பங்கு குழந்தைகளின் அறிவு வளர்ச்சியின்அளவைக் கொண்டு அவர்களின் தேவைக்கேற்ப விளையாட்டுச்சாதனங்களை அளிக்க வேண்டும். வயதுக்கேற்ப விளையாட்டுகளை ஊக்குவிக்க வேண்டும். அத்தோடு கூட இப்பருவத்தினருக்குத் தேவையான கதைகளைத் தேர்ந்தெடுப்பதிலும், அதைச்சுவையாகக் குழந்தைகளுக்குச் சொல்லும் திறனையும் பெற்றிருத்தல் வேண்டும். புத்தகங்களைக் கையாளும் முறையையும் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதும், வழி காட்டுவதும் ஆசிரியரின்கடமையாகும். சித்திரங்கள் வரைவதற்கும், ஆயத்த செயல்களில் ஈடுபாடு கொள்வதற்கும் குழந்தைகளை ஊக்குவிக்கவேண்டும். குழந்தைகளின் கற்பனை வளர்தையும், ஆக்கத்திறனையும் உருவாக்குவது ஆசிரியரின் கடமையாகும்.

### 6.4 மனவெழுச்சி வளர்ச்சி (Emotional Development)

மனவெழுச்சி என்பது உளவியல் மாற்றங்கள் நிறைந்தசெயல் வேகத்தைத் தூண்டக்கூடிய மனித மனத்தின் ஒருவிதக்கிளர்ச்சி நிலையைக் குறிக்கும். மனவெழுச்சிக்கு எடுத்துக்காட்டாக பயம், எதிர்பார்ப்பு, கோபம், ஏமாற்றம், வருத்தம், பொறாமை முதலியவற்றைக் கூறலாம். மனவெழுச்சியினை நேர்மறை மற்றும் எதிர்மறை மனவெழுச்சி என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். நேர்மறை மனவெழுச்சி இயற்கையிலேயே மகிழ்ச்சியைத்

தரக்கூடியதாகவும்,மற்றவர்களால் வரவேற்கக்கூடிய தன்மையுடையதாகவும் இருக்கும். அன்பு, மகிழ்ச்சி, நேசம், ஆர்வம், இரக்கம், முதலியவற்றைஉதாரணமாகச் சொல்லலாம். எதிர்மறை மனவெழுச்சி மகிழ்ச்சியற்ற எண்ணங்களின் வெளிப்பாடாகவும், மற்றவர்களால் விரும்பத்தகாத தன்மையுடையதாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாகக்கோபம், பொறாமை, பயம் முதலியன.

**மனவெழுச்சியின் வகைகள்**

பிறந்த குழந்தையிடம் பொதுவான மனவெழுச்சியை மட்டுமே நாம் காணலாம். ஆனால், குழந்தை வளர்ச்சி அடைய அடைய, ஒவ்வொரு வளர்ச்சி நிலைக்கான வளர்ச்சியினைப் பெற்றிருக்கும்.மனவெழுச்சி வளர்ச்சி குழந்தைகளின் மனமுதிர்ச்சியிலும், உடல்வளர்ச்சியிலும், கற்றலினாலும் ஏற்படுகிறது. மகிழ்ச்சியானவெழுச்சி மகிழ்ச்சியற்ற மனவெழுச்சி என இருவகையாகப் பிரிக்கலாம். மகிழ்ச்சியற்ற மனவெழுச்சிகள் விடாமல் தடுக்கப்படும்பொழுதும், ஆசை நிறைவேறாமல் கோபம்: குழந்தைக்கு தான் விருப்பப்பட்ட செயலைச் செய்ய போகும்பொழுதும் கோபம் ஏற்படுகிறது. கால்களைத் தரையில்உதைப்பதும், கைகளுக்கு எட்டிய பொருளை வீசி எறிவதும்அடிப்பதும் கோபத்தின் வெளிப்படாகும். பெரும்பாலும் ஆரம்பக்காலங்களில் விளையாட்டுப் பொருள்களுக்காகவும், தனது ஆசைகளுக்கு முட்டுக்கட்டை ஏற்படுவதாகவும், மற்றக் குழந்தைகளை அடிப்பதன் மூலமாகவும், மேலே கீழே குதித்தும், கீழே விழுந்தும், மூச்சை அடக்கிக் கொண்டும் குழந்தைகள் தங்களது கோபத்தினை வெளிப்படுத்துவார்கள். இது பெரும்பாலும் குழந்தை மற்றும் பெற்றோரிடையே உள்ள உறவினை மையமாகக் கொண்டே அமைந்திருக்கும். பாதுகாப்பின்மை, மன முறிவு, மனக்குழப்பம், நிலையற்ற தன்மையுடைய சமுதாய சட்டதிட்டம் முதலியவற்றால் ஏக்கம் ஏற்படுகிறது. பெற்றோர்களின் அதிகக் கண்டிப்பும் ஏக்கத்திற்கு காரணமாக அமைகிறது.

**மகிழ்ச்சியான மனவெழுச்சிகள் (Pleasant Emotion)**

புதுப்பொருள்கள், புது மனிதர்கள் மற்றும் வினோதங்களை அறிய ஆர்வமுள்ள இயல்பு என்பது அறியத் தூண்டும் ஆர்வமாகும். இத்தன்மை பள்ளி முன்பருவக் குழந்தைகளிடத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. இந்தப் பண்பு, குழந்தை வளர்ச்சி அடைய அடைய கேள்விகேட்பதன் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது. கேள்வி கேட்கும் தன்மை மூன்றாவது வயதிலேயே குழந்தைகளிடம் காணப்படுகிறது.

நான்கு வயதுக் குழந்தையை ”நடமாடும் கேள்விக்குறி” என்று அழைக்கின்றார்கள். இந்தப் பண்புச் சூழ்நிலையைப் பற்றிய விழிப்புணர்வையும், அறிவையும் அதிகரித்துக் கொள்ள உதவுகிறது. மனக்கிளர்ச்சி என்பதனை மகிழ்ச்சியின் உச்சகட்டம் என்று கூறலாம். புன்சிரிப்பு, செல்லமாகத் திட்டுதல், சிரித்தல் ஆகியவை இதன் வெளிப்பாடுகளாகும். நீண்ட நாட்களுக்குப் பிறகு அடைந்த வெற்றியும்

மற்றும் முயற்சியும் குழந்தைகளுக்கு களிப்பையும், சந்தோஷத்தையும்தரக்கூடிய மூலகாரணங்களாகும்.

மகிழ்ச்சியானது நல்ல உடல் ஆரோக்கியத்தினால் தூண்டப்படுகிறது. 2-ஆவது அல்லது 3-ஆவது மாதமுடிவில் குழந்தைகள் விளையாட்டின்மீதும் மற்றவர்களை கவனிப்பதிலும் கவனம் செலுத்த ஆரம்பிக்கிறது. புன்முறுவல், சிரித்தல், கை, கால்களை அசைத்தல் முதலியன மகிழ்ச்சியின் வெளிப்பாடாகும். மகிழ்ச்சியானது உச்சகட்டத்தை அடையும் போது குழந்தைகள் ஆரவாரமாகச் சத்தமிடல், உடம்பினைஅசைத்தல், கலகலப்பாகச் சிரித்தல் போன்ற செயல்களின் மூலமாகவும் வெளிப்படுத்துகிறது.

குழந்தைகள் தங்களது மனவெழுச்சியைப் பெற்றோர். அல்லது மற்றப் பெரியவர்களின் கட்டுப்பாடுகள் இல்லாதிருக்கும். பொழுது சுதந்திரமாகவும், விரைவாகவும் வெளியிடுவார்கள். குழந்தையின் மனவெழுச்சி உணர்ச்சிகரமானது மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தையின் மனவெழுச்சியானது சராசரி குழந்தையின் மனவெழுச்சியோடு ஒப்பிடும்போது மாறுபட்டு இருக்கும். ஏனெனில் மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தையிடம் எதிர்மறை மனவெழுச்சி மிகவும் உச்சகட்டமாகவும் அடிக்கடி நிகழக் கூடியதாகவும் இருக்கும். குழந்தையின் மனவெழுச்சி அடிக்கடி மாறுபடக் கூடியது சிரித்தலில் இருந்து அழுதலும், கோபத்திலிருந்து புன்முறுவல் பூத்தலும், பொறாமையிலிருந்து பாசத்திற்கு மாறுதலும் போன்ற உணர்ச்சிகள் அடிக்கடி மாறுபடும். அழும் குழந்தையிடம் இனிப்பைக் கொடுத்தால் அது உடனே மகிழ்ச்சியடையும்.

குழந்தைகளின் முதிர்ச்சி மனவெழுச்சிகளை வெளியிடுவதைக் கட்டுப்படுத்துகிறது குழந்தைகள் வளர்ச்சி அடைய அடைய, சூழ்நிலைக்கேற்பதங்களைத் தாங்களே மாற்றியமைத்துக் கொள்கின்றார்கள். ஏனெனில், அவர்களுக்குச் சமுதாயத்தில் ஒத்துக் கொள்ளப்படாத செயல்களைப் பற்றியும், தண்டனையைப் பற்றியும் அறிந்து கொள்கிறார்கள். இதன் காரணமாகக் குழந்தைகள் படிப்படியாக மனவெழுச்சிகளை அடிக்கடி மாற்றி வெளியிடுவதைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள்.

வேறுபட்ட மனவெழுச்சியின் வெளிப்பாடு குழந்தைகளின் வெவ்வேறு வயது நிலையினை நோக்கும் பொழுது அதனுடைய மனவெழுச்சி வெவ்வேறு விதமாக இருக்கிறது. பிறந்த குழந்தையிடம் மனவெழுச்சியானது பொதுவாக ஒரே மாதிரியாகக் காணப்படுகிறது. பின்னர்ப் படிப்படியாக அவை கற்றலின் மூலமாகவும் சூழ்நிலையின் காரணமாகவும் வேறுபடுகிறது. நடத்தையின் மூலமாக மனயெழுச்சியினை வெளியிடல் தெரியாமல் மறைக்க முடியும் தன்மையைப் பெற்றிருப்பார்கள். வயது வந்தவர்கள் தங்களது மனவெழுச்சியினை பிறருக்குத் கொண்டு வருகிறது. வரைமுறைகள் குழந்தைகளின் மனவெழுச்சியை ஒரு நிலைக்கண குழந்தைகள் தங்களது மனவெழுச்சியைப் பெற்றோர் . அல்லது மற்றப் பெரியவர்களின்

கட்டுப்பாடுகள் இல்லாதிருக்கும். பொழுது சுதந்திரமாகவும், விரைவாகவும் வெளியிடுவார்கள்.

குழந்தையின் மனவெழுச்சி உணர்ச்சிகரமானது மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தையின் மனவெழுச்சியானது சராசரி குழந்தையின் மனவெழுச்சியோடு ஒப்பிடும்போது சற்று மாறுபட்டு இருக்கும். ஏனெனில் மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தையிடம் எதிர்மறை மனவெழுச்சி மிகவும் உச்சகட்டமாகவும் அடிக்கடி நிகழக் கூடியதாகவும் இருக்கும்.

குழந்தையின் மனவெழுச்சி அடிக்கடி மாறுபடக் கூடியது சிரித்தலில் இருந்து அழுதலும், கோபத்திலிருந்து புன்முறுவல் பூத்தலும், பொறாமையிலிருந்து பாசத்திற்கு மாறுதலும்போன்ற உணர்ச்சிகள் அடிக்கடி மாறுபடும். அழும் குழந்தையிடம் இனிப்பைக் கொடுத்தால் அது உடனே மகிழ்ச்சியடையும்.

குழந்தைகளின் முதிர்ச்சி மனவெழுச்சிகளை வெளியிடுவதைக் கட்டுப்படுத்துகிறது குழந்தைகள் வளர்ச்சி அடைய அடைய, சூழ்நிலைக்கேற்பதங்களைத் தாங்களே மாற்றியமைத்துக் கொள்கின்றார்கள். ஏனெனில், அவர்களுக்குச் சமுதாயத்தில் ஒத்துக் கொள்ளப்படாத செயல்களைப் பற்றியும், தண்டனையைப் பற்றியும் அறிந்து கொள்கிறார்கள். இதன் காரணமாகக் குழந்தைகள் படிப்படியாக மனவெழுச்சிகளை அடிக்கடி மாற்றி வெளியிடுவதைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள்.

வேறுபட்ட மனவெழுச்சியின் வெளிப்பாடு குழந்தைகளின் வெவ்வேறு வயது நிலையினை நோக்கும் பொழுது அதனுடைய மனவெழுச்சி வெவ்வேறு விதமாக இருக்கிறது. பிறந்த குழந்தையிடம் மனவெழுச்சியானது பொதுவாக ஒரே மாதிரியாகக் காணப்படுகிறது. பின்னர்ப் படிப்படியாக அவைகற்றலின் மூலமாகவும் சூழ்நிலையின் காரணமாகவும் வேறுபடுகிறது.

நடத்தையின் மூலமாக மனயெழுச்சியினை வெளியிடல் தெரியாமல் மறைக்க முடியும் தன்மையைப் பெற்றிருப்பார்கள்.வயது வந்தவர்கள் தங்களது மனவெழுச்சியினை பிறருக்கு மறைக்க குழந்தை தன் மனவெழுச்சியை நேரடியாகக் காட்ட முடியவிட்டாலும் படபடப்பு, அமைதியின்மை, பகல்கடித்தல், விரல் சூப்புதல், முறைத்துப் பார்த்தல், அடிக்கடிஅழுதல் போன்ற செயல்களின் மூலம் வெளிப்படுத்துகிறது. வெழுச்சி பலமானதாக இருக்கிறது. ஆரம்ப காலத்தில் குழந்தை இருளைப் பார்த்துப் பயப்படும். ஆனால், முதிர்ச்சியடையும் .ஒவ்வொரு குறிப்பிட்ட வயதிலும், ஒரு குறிப்பிட்டபோது, அதன் பயம் தெளிய ஆரம்பிக்கிறது.

**குழந்தையின் மனவெழுச்சி வளர்ச்சியினைப்பாதிக்கும் காரணிகள்**

அறிவுத்திறன், பால்,சமூக - பொருளாதார சூழ்நிலை, உடல்நிலை, பிறப்பு நிலை,ஆளுமை ஆகியனவாகும். அன்பில் குறைபாடு ஏற்படும்போது, கவனிப்புக் குறையும் ’உணர்வு ஏற்படும் பொழுது,பொழுது பாதுகாப்பின்மை

மனவெழுச்சி பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மனவெழுச்சி வளர்ச்சியில்முன்பருவப் பள்ளியின் பங்கு மனவெழுச்சிப் பிரச்சினையைத் தடுக்கவும், தீர்க்கவும்,முன்பருவப் பள்ளி உதவுகிறது. முன்பருவப் பள்ளிக்கு வரும் குழந்தைகள் பாதுகாப்பு உணர்வையும், நம்பிக்கையையும் வளர்த்துக்கொள்கின்றார்கள்.

பாதுகாப்பு உணர்வும், நிறைவும் குழந்தைகளின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தி அடைவதைப் பொறுத்தும், குழந்தைகளின்உணவுப் பழக்க வழக்கங்களைப் பொறுத்தும், மற்றவர்களிடம் தான்பெறும் பதிலைப் பொறுத்துமே அமைகின்றன. இதன் அடிப்படையிலேயே குழந்தைகள் உலகத்தின் மீது நம்பிக்கை வைக்கக் கற்றுக் கொள்கின்றார்கள்.

முன்பருவப் பள்ளிப் பருவத்தினரின் மனவெழுச்சி வளர்ச்சியில் ஆசிரியர் முக்கியப் பங்கு வகிக்கிறார். குழந்தைகளின்உணர்வுகள் பெரியவர்களின் கருத்துகளினால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் அனுபவங்கள் அவர்களின் ஆயத்தச் செயலுக்கு அடிகோலுகிறது. குழந்தைகளின்பேச்சு, நடத்தை மூலமாக ஆசிரியர் அவர்களின் நேர், எதிர்மறை உணர்வுகளைப் பற்றி அறிய முடிகிறது. குழந்தைகள் எதிர்மறைஉணர்வுகளை வெளியிடும்போது ஆசிரியர் அவர்களைத் தண்டிக்கவோ, குற்றம் சொல்லவோ கூடாது. குழந்தைகளின் கவனம்சிதறப்படாமல் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். உடற்பயிற்சியின் மூலமாகவோ, அபிநயப் பாடல் மூலமாகவோ,கை வேலை மூலமாகவோ, குழந்தைகளின் எதிர்மறை உணர்வினை,வெளியிட வாய்ப்பளிக்க வேண்டும். ஆக்கச் செயல்கள் குழந்தைகளுக்கு அவர்களது உணர்வுகளை வெளிக்காட்ட உதவி செய்கிறது.அங்குப் பயன்படுத்தும் எல்லாச் சாதனங்களும், குழந்தைகளுக்கு இதன் மூலம் முன்பருவப் பள்ளியில் நடைபெறும் செயல்கள்பாதுகாப்பு உணர்வையும், நிறைவையும் தருகிறது. ஒத்த வயதுடைய குழுவினர் இருப்பதால் குழந்தைகளுக்கு மகிழ்ச்சிகரமான மற்றும் நிறைவான உணர்வுகள் பெறுவதற்கு மிகுந்த வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றன. இதிலிருந்து அந்தக் குழந்தை தானும்மற்றவர்களைப் போலத்தான் என்ற உணர்வினைப் பெறுகிறது. இது குழந்தைக்குப் பாதுகாப்பு உணர்வினைத் தருகிறது.

### 6.5 மொழி வளர்ச்சி (Language Development)

மொழி என்பது பிறருடன் தொடர்பு கொள்ள உதவும். இத்திறன், நமது எண்ணங்கள். நினைவுகள் முகத்தின் அறிகுறிகள் காட்டுதல், பேசுதல் எழுதுதல் ஆகும் 'பேசுதல்' மூலம் மொழி செயல் வடிவம் பெறுகிறது. ஒரு குழந்தையின் ஒத்துப்போகும் தன்மை நடை மொழி வளர்ச்சியைப் பொறுத்தும். சூழ்நிலைக் காரணிளைப் பொறுத்தும் அமைவதாகும். குழந்தையைச் சமூகத்துடன் ஒத்துப் போகச் செய்வதற்கு மொழி வளர்ச்சி மிகவும் இன்றி

சமூகத்தில் உள்ள மற்ற அனைவரிடமும் பகிர்ந்து கொள்வதற்கு மொழி ஒரு கருவியாக அமைகிறது. மனிதன், ஒருவரிடமிருந்து மற்றவர் தொடர்பு கொள்ளும் அவசியத்தை உணர்ந்த நாள். எவ்வளவு அவசியமோ, மொழியும் தனது கருத்துகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளவும் சமூகத் தொடர்பிற்கும் மொழி இன்றியமையாத்து.குழந்தைக்கு மொழி எவ்வாறு உதவுகிறது? முக்கியத் தலைப்புகளின் கீழ் பகுக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைக்கு மொழி பல வழிகளில் உதவுகிறது.

மொழி – மனவெழுச்சிகளை வெளிப்படுத்த உதவுகிறது சிசுப் பருவத்தில் குழந்தை தன் மகிழ்வினையும், துக்கத்தினையும், சிரித்தல் மற்றும் அழுகையின் மூலம் வெளிப்படுத்துகிறது. பெரும்பாலும் தன்னுடைய செய்கைகள் மொழி மூலம் வெளிப்பு முன்பருவக் கல்வி பெறும் காலங்களில் தன் மனவெழுச்சிகளைப்படுத்தத் தொடங்குகிறது.

குழந்தை பிறந்தவுடன், நுரையீரல் மூலமாகக் காற்றினை இழுத்து சுவாசிக்கும்போது, முதன்முதலாக ஒலியை உண்டாக்குகிறது. இதையே குழந்தையின் “முதல்அழுகை“ என்கிறோம். குழந்தை பிறந்து 28 நாள்கள் வரையில் இந்த ஒலிக்குக் குறிப்பிட்ட எந்த அர்த்தமும் கூற இயலாது. அழுவதையே, மழலைச் சொற்களின் வளர்ச்சியின் முதற்படியாகக் மனவெழுச்சியால் தூண்டப்படும்பொழுது குழந்தை தானாககருதப்படுகிறது. குழந்தை பிறந்து 15 முதல் 21 மாதம் முடியும்

பள்ளி முன்பருவக் கல்வி பொழுது தெளிவாகவும், அர்த்தத்துடனும் பேச ஆரம்பிக்கிறது. 2% வயதடையும்போது 90 சதவிகிதம் பேசக் கற்றுக் கொள்கிறது.4 வயதடையும்போது முழுமையாகப் பேசக் கற்றுக் கொள்கிறது. வார்த்தைகளைக் கற்றல் குழந்தையின் பேச்சுத் திறனானது, மற்றவர்கள் அதனுடன் பேசிப் பழகுவதைப் பொறுத்தே வளர்கிறது. சொற்களை அறிந்து கொள்வதில் ஏற்படும் வளர்ச்சி குழந்தையின் வளர்ச்சியில் ஒரு முக்கியப் பகுதியாகும்.

முதலில் பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும்பயன்படுத்தி எளிய வாக்கியங்களை அமைக்கும் குழந்தை, பள்ளி முன்பருவத்தில் 6 முதல் 8 வாக்கியங்கள் வரை முழுமையாகப்பேச ஆரம்பிக்கிறது. வருடத்திற்கு 500 முதல் 600 சொற்கள் வரைகற்றுக்கொள்கிறது. மூன்று வயதளவில் 11,000 முதல் 12,000 சொற்களையும் நான்கு வயதளவில் 15,000 சொற்களையும் ஒரு நாளில்பேசுகிறது. அதன் உரையாடலில் 10 முதல் 15 சதவிகிதம் கேள்விகளே நிறைந்திருக்கும். அவற்றிற்கு நாம் அளிக்கும் பொருத்தமானபதில்களே குழந்தைகளின் மொழி வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

**மொழி வளர்ச்சிக்கான காரணிகள்**

குழந்தையின் மொழி வளர்ச்சி பெரியவர்களின் பேச்சுத் தன்மையையும், அவர்களுடைய குடும்ப மற்றும் சமூகச் சூழலையும் பொறுத்து அமையும். குழந்தைகளின் மொழி வளர்ச்சிக்கானகாரணிகள் பின்வருமாறு

குழந்தையின் முதிர்ச்சி நிலையினைப் பொறுத்தே அதன் மொழி வளர்ச்சியும் அமைந்திருக்கும். குழந்தையின் அறிவு வளர்ச்சி குழந்தையின் மொழி வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது.குழந்தையின் ஆரம்ப வளர்ச்சிக் காலத்தில், ஏதாவது ஆரோக்கியக் குறைபாடு ஏற்பட்டால், அது குழந்தையின் மொழி வளர்ச்சியைப் பாதிக்கும் முக்கியக் காரணியாகும். குழந்தையின் குடும்பச் சூழ்நிலை, பெற்றோர் மற்றும் சுற்றத்தார் அதனிடம் பயன்படுத்தும் சொற்கள் ஆகியவற்றினாலும் அதனுடைய மொழி வளர்ச்சி பாதிக்கப்படும்.

குழந்தையின் பிறப்பு நிலை முதல் குழந்தைபெரியவர்களிடம் அதிகம் பழகுவதால் அவர்களின் மொழியைக்கொண்டிருக்கும் இரண்டாவது, 3ஆவது குழந்தை மற்றக்குழந்தைகளோடு பழகுவதால் அவர்கள் மொழியைக் கற்கும். சாதாரணமாகப் பெண் குழந்தைகள் விரைவில் பேசஆரம்பிப்பார்கள், அதிகமாகவும் பேசுவார்கள். முன்பருவப் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் மொழி வளர்ச்சி அதிகம். மொழி வளர்ச்சியில் பள்ளி முன்பருவக்கல்வியின் பங்கு பள்ளி முன்பருவக் கல்வியில் கொடுக்கப்படும் ஒவ்வொருசெயலும், அனுபவமும் மொழித் திறமையை வளர்க்கக் கூடியதாகஇருத்தல் வேண்டும். ஒரு செயலே குழந்தைகளின் வெவ்வேறுதிறமைகளைத் தூண்டுவதாக இருத்தல் வேண்டும். குழந்தைகளின்வளர்ச்சி நிலைக்கேற்ப ஆசிரியர், குழந்தைகளுக்கு மொழிவளர்ச்சிக்கான ஆயத்தச் செயல்களைக் கொடுக்க வேண்டும்.

குழந்தைகளைச் சுதந்திரமாகப் பேச ஊக்குவிக்கவேண்டும்.ஆசிரியர் தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம், குழந்தைகளின் அனுபவங்களைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும். பயந்த சுபாவமுள்ள மற்றும் ஆசிரியர் ஒவ்வொருகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களிடம் தன்னம்பிக்கை குழந்தை மீதும் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

கதை சொல்லுதல் நல்ல கதைகள் கேட்பது என்பது குழந்தைகளுக்கு மகிழ்ச்சிதரக்கூடிய ஒரு செயலாகவே இருந்து வருகிறது. கதையின் கருத்து தலைமுறைக்குத் தலைமுறை வேறுபட்டாலும், கதை கூறுதல்,கேட்பது, என்பது பொழுதுபோக்கிற்கும், கற்பித்தலுக்கும் இலக்கிய ரசனையை வளர்ப்பதற்கும் உதவும் ஒரு முக்கியக் கலையாகப்பயன்படுத்தப்பட்டு வருகிறது. கதை சொல்லுவது என்பதுமொழிக்கலையின். திறன்களை வளர்ச்சியடையச் செய்வதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாகவே இருக்கிறது. குறிப்பாகக் குழந்தை கதைகேட்கும்பொழுதும் கதை. சொல்லும்பொழுதும் பேசும் சந்தர்ப்

## 6.6 சமூக வளர்ச்சி (Social Development)

சமூகவியல் மற்றும் உளவியல் வல்லுநர்கள் ‘‘ஆளுமை’’ என்பதனைச் “சமுதாயக் கட்டுப்பாடுகளினால் விளையும் தன்மை’’ என்று கருதுகிறார்கள். பிறந்த குழந்தைக்குச் சமூக வளர்ச்சி ஏதும் கிடையாது. ஆனால், குழந்தை வளர வளர, சமூகமானது, குழந்தைச் சமுதாயத்தில் உள்ள மற்ற

அங்கத்தினர்களோடு இணைந்து செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட கற்றல் செயல் விளைவுகளே ‘‘சமூக வளர்ச்சி’’ எனப்படும். இரண்டு வயது முதல் ஆறு வயது வரை, குழந்தை, தான்எவ்வாறு சமுதாயத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது, வீட்டிற்கு வெளியே குறிப்பாக, தன் வயதையொத்த குழந்தைகளிடம்எவ்வாறு பழகுவது என்பதனைக் கற்றுக் கொள்கிறது. இத்தகையசெயல்கள் மூலம் குழந்தையின் சமுதாய தொடர்பு விரிவடைகிறது.

குழந்தைப் பருவம்ஒவ்வொரு வெற்றிகரமான சமூக இணக்கத்திற்கான சமூகநடத்தைகள் இந்தக் குழந்தைப் பருவத்தில் ஆரம்பித்து வளரஆரம்பிக்கிறது. ஆனால், மற்றவர்களுடன் சுமுகமான உறவை வளர்த்துக் கொள்வதற்கான சமூக நடத்தைகள் முழுமை பெற்றிருப்பதில்லை. இப்பருவமானது ஒரு இக்கட்டான பருவமாகும்.ஏனெனில் இப்பருவத்தில்தான் சமூகத்தைப் பற்றிய ஒருஎண்ணம், சமூக நடத்தை தோன்ற ஆரம்பிக்கிறது.

**சமூக வளர்ச்சியின் படிகள்**

இரண்டிலிருந்து மூன்று மாதம் வரை மனிதர்களை உயிரற்ற பொருள்களிடமிருந்து வேறுபடுத்திப்பார்க்கவும், தங்களுடைய தேவை மனிதர்களால் பூர்த்தி செய்யப்படுகிறது என்பதையும் குழந்தைகள் அறிந்து கொள்கிறார்கள்.

இப்பருவத்தில் குழந்தைகள் தனியாக இருப்பதைவிட, தன்னைவிட வயது முதிர்ந்தவரோடு இருப்பதையே விரும்புவார்கள். நான்கு மாதம் முதல் ஐந்து மாதம் வரை பொதுவாக இவ்வயதுக் குழந்தைகள், மற்றவர்கள் தங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என விரும்புகிறார்கள். அன்பு மொழிகள் போன்ற ஒவ்வொரு செயலுக்கும் எதிர்ச் நன்செயலை செய்கிறார்கள். மேலும் கீழும் குதித்தல், சிரித்தல்போன்ற செயல்களின் மூலம் மற்றக் குழந்தைகளின் கவனத்தை தன் பக்கம் ஈர்க்க முயல்வர்

நான்கு வயது வரையிலும், பெண் குழந்தைகளும், ஆண்குழந்தைகளும் ஒன்றாகச் சேர்ந்து விளையாடுவார்கள். அதற்குப்பின்பு சமூகக்கோட்பாடுகள் காரணமாகச் சில விளையாட்டுகள் ”பெண்களுக்குரியது” என ஆண் குழந்தைகள் விலகிவிடுவார்கள்.

இனத்தைச் சேர்ந்தவர்களுடன் சேர்ந்து விளையாடுவதைவிடத் பொதுவாக எல்லாக் குழந்தைப் பருவத்தினரும், தங்களுடைய இனத்தைச் சேர்ந்தவர்களுடனேயே விளையாட ஆரம்பிக்கிறார்கள். சமயம், சமுதாய நிலை பற்றிய சார்பெண்ணங்கள், பாலினச் சார்பெண்ணங்கள், தோன்ற ஆரம்பித்த பின்னரே தப்பெண்ணம் தளிர்விட ஆரம்பிக்கிறது.

பள்ளி முன்பருவக் கல்வி குழந்தைகளின் சமூக வளர்ச்சிக்கு வெவ்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாகப்பெரிதும் உதவுகிறது. ஒவ்வொரு குழந்தையும் தங்களுடையஅனுபவங்களை மற்றப் பள்ளித்

தோழர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். இப்பருவத்தின் போதுதான் குழந்தைகளுக்கு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், பகிர்ந்து கொடுக்கும் தன்மையும், தன்னுடைய முறை வரும்வரை காத்திருக்கக் கூடிய தன்மையும்வளர்கிறது.

குழுப் பயிற்சி மற்றும் அனுபவத்தின் மூலமாக ஒவ்வொருகுழந்தைக்கும் தன் நம்பிக்கை ஏற்படுவதற்கு முன்பருவப் பள்ளி அடிகோலுகிறது. தங்களைப் பற்றித் தாங்களே தெரிந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது. நண்பர்களின் குழுவில் இருக்கும்பொழுது ஒவ்வொரு குழந்தையும் பலம், நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு உணர்ச்சியைப்பெறுகின்றது.

பள்ளி முன்பருவக் கல்வி ஆசிரியை குழந்தைகளின் சமூக வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறார். ஏனெனில், மற்றவர் களிடம் எப்படிச் சுமூகமான உறவை ஏற்படுத்துவது என்ற முறையையும் அவர்களே கற்றுத் தருகின்றார்கள். அதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தருகிறார்கள்.குழந்தைகள் தங்களுடைய எண்ணங்களையும், கற்பனைகளையும் நண்பர்களிடமும் ஆசிரியரிடமும் பகிர்ந்து கொள்வதற்கு முன்பருவப் பள்ளி ஒரு சிறந்த அமைப்பாகத் திகழ்கிறது.

**அத்தியாய சுருக்கம்**

மாணவர்களிடம் பல்வேறுவகையான வளர்ச்சிகள் காணப்படுகின்றது. இவ் வளர்ச்சிச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் மாணவர்களின் எதிர்கால ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்துவதோடு இதில் ஏற்படுகின்ற பல பாதிப்புக்கள் அல்லது குறைபாடுகள் பல தாக்கங்களையும் ஏற்படுத்தும்.

**பயிற்சி வினாக்கள்**

1. உடல் வளர்ச்சியின் முக்கியத்துவம் யாது?
2. இயக்க வளர்ச்சியின் செயற்பாடுகளை விபரிக்குக.
3. சமூக வளர்ச்சியில் குறைபாடுள்ள பிள்ளைகளின் பண்புகளை விபரிக்குக?

**உசாத்துணை நூல்கள்**

1. Seamus Hegarty,(2011) Education & Childern With Special Needs,London, Sage Publication.
2. Yeseldyke.J.E & Algozzine.B (1998).,Special Education : A pratical approach for teachers, New Delhi Kanishka Publishers
3. Sen Gupta.M, (2013), Early Childhood Care and Education, Delhi, PHI Learing Private Limited

**அத்தியாயம்- 07**

# குழந்தைகளின் விருத்தியும் கற்றலும் பற்றிய மதிப்பீட்டு முறைகள் (Assement Methods)

அறிமுகம்

பிரதான சொற்கள்

நோக்கங்கள்

6.1 மதிப்பீட்டு முறைகள்
6.2 கற்றல் செயற்பாட்டைமதிப்பிடுவதற்கான கருவிகள்
அத்தியாயச்சுருக்கம்
பயிற்சி வினாக்கள்
உசார்த் துணை நூல்கள்

**அத்தியாயம் பற்றிய சுருக்கமான விபரிப்பு**

-------------------------------------------------------------------------------------------------------------------

வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயன்முறைகளின் முகாமைத்துவத்துக்காக கற்றலின் வலிவு மற்றும் மெலிவுகளை இனங்கானுதல் அத்தியாவசியமாகும். மதிப்பீடு அத்தியாவசியமான நிர்ணயித்தலாகும். அது பிள்ளைகளினுடையதை மட்டுமல்லாமல் ஆசிரியர்களினதும் இயலுமை, இயலாமையை இனங்காண முடியும். எதிர்பாக்கப்பட்ட மட்டத்தை பிள்ளைகள் எய்தக் கூடியவாறு வெளிக்காட்டப்பட்ட கற்றல் இடர்பாடுகளை நீக்கக் கூடியவாறு நடவடிக்கைகளை எடுக்க ஆசிரியர்கள் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். அத்தோடு ஏதாவது பொருத்தப்பாடின்மை அல்லது இயலாமை இனங்காணப்படின் கற்பிக்கும் முறைகளில் விருத்தியை ஏற்படுத்துமாறு ஆசிரியர்கள் உட்சாகப்படுத்தப்படுகிறார்கள்.

**அத்தியாயத்தின் நோக்கம்**

குறித்த ஓர் அளவீட்டுடன் ஒப்பிடுகையில் கருத்துள்ள ஒரு நடவடிக்கையின் இறுதியில் அதன் வெற்றி எத்தகையது என்பதைத் தீர்மானிக்கின்ற செயல் முறையை மதிப்பீடு எனலாம் மதிப்பீடு, அளவீடு, பரிட்சைகள் என்பவைகள் முக்கியமானவையாகும் மதிப்பீடுஎன்றால் என்ன எனபதை அறிவதோடு மதிப்பீடு என்பது புதிதல்ல. இதுமிகவும் பழமையான ஒன்றாகும்எனினும் நவின யுகத்தில் இவ்விடயம் விஞ்ஞானத்தேவைகளுக்கு ஏற்றவாறு அபிவிருத்தியடைந்துள்ளது**.**

**பிரதான சொற்கள் :** அளவிடு, மதிப்பீடு, குறை நிறைகள்

**கற்றல் பெறுபேறுகள்**

பாடத்திட்டத்தை மதிப்பிடல்

கற்பிக்கின்ற முறையை மதிப்பிடல்

மதிப்பீட்டுச் செய்முறையை மதிப்பிடல்

ஆசிரியர்களின் திறமையை மதிப்பிடல்

**மதிப்பீடு**

மதிப்பீட்டு என்பது ஒரு பொருள் தகுதி, மதிப்பு மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றின் முறையான உறுதிப்பாடு ஆகும், தரநிலைகளின் தரத்தால் நிர்வகிக்கப்படும் அடிப்படைகளைப் பயன்படுத்தி. முடிவெடுப்பதில் உதவுவதற்கு எந்தவொரு நோக்கத்திற்காகவும், திருத்தியமைக்கக்கூடிய கருத்துக்கணிப்பு / முன்மொழிவு அல்லது வேறு எந்த மாற்றீட்டையும் மதிப்பீடு செய்ய ஒரு அமைப்பு, திட்டம், அல்லது வேறு எந்த தலையீடு அல்லது முன்முயற்சியால் உதவ முடியும் அல்லது முடிவடைந்த எந்தவொரு நடவடிக்கையையும் நோக்கம் மற்றும் குறிக்கோள்களைப் பொறுத்து சாதனை அல்லது மதிப்பின் அளவை உறுதிப்படுத்த உதவும்.

மதிப்பீடுகளின் முதன்மை நோக்கம், முன்னர் அல்லது ஏற்கனவே உள்ள முன்னெடுப்புகளைப் பற்றிய நுண்ணறிவுகளைப் பெறுவதற்கு கூடுதலாக, பிரதிபலிப்பை செயலாக்க மற்றும் எதிர்கால மாற்றத்தை அடையாளம் காண உதவுவதாகும்.

“மதிப்பீடு’’ என்பது பரீட்சை நடத்தி, தரமும் சான்றிதழும் வழங்கப்படும் ஒரு செயன்முறையாகும், என பெரும்பாலான மாணவர்களும் பெற்றோரும் என்ணியுள்ளனர், எனினும் மதிப்பீடு என்பது அதனிலும் பரந்த ஓர் எண்ணக்கருவாகும் என்பதை நாம் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

மதிப்பீட்டை, சோதனைகளுக்கு மாத்திரம் வரையறைப்படுத்துதலானது, கற்றல் – கற்பித்தல் செயன்முறைக்கு மதிப்பீட்டின் மூலம் கிடைக்கும் சேவைகளையும் அதன் முக்கியத்துவத்தையும் புறக்கணிப்பதாகவே அமையும். மதிப்பீட்டின் மூலம் அதனிலும் பரந்த பணி ஆற்றப்படுகின்றது. ஏற்றுக்கொள்ளப்பட்ட நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடையும் எதிர்பார்ப்புடன் பாடத்திட்டம், பாடநூல், கற்றல் கற்பித்தல் சாதனங்கள் போன்ற பலவற்றைப் பயன்படுத்தி ஆசிரியரும் மாணவர்களும் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடுகின்றனர். இந்நோக்கங்களும் குறிக்கோள்களும் எந்த அளவுக்கு அடையப்பட்டன, அடையப்படுகின்றன

என்பதை இடையிடையே முறைமையாகப் பரிசீலிக்கும் செயன்முறையே மதிப்பீடு ஆகும்.

மதிப்பீடானது ஆசிரியருக்கும் மாணவருக்கும் கல்வி முகாமையாளர்களுக்கும் கொள்கை வகுப்போருக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் பெற்றோருக்கும் முக்கியமானது

**மதிப்பீட்டின் நோக்கங்கள்**

- பாடத்தின் வலுவான நலிவான பகுதிகளை இனங்காணல்.
- பிள்ளைகளுக்கு பின்னூட்டலை வழங்கி ஊக்குவித்தல்,
- கற்றல் அடைவுமட்டத்தை அறிதல்,
- சித்தி, சித்தியின்மை போன்ற தீர்மானங்களை மேற்கொள்ளல்,
- பாடத் தெரிவுகளில் வழிகாட்டுதல்,
- ஆசிரியரின் கற்பித்தல் முறைகளின் பொருத்தப்பாட்டை அறிதல்,
- விரைந்து கற்பவர்களையும் மெல்லக் கற்பவர்களையும் இனங்கண்டு குழுக்களாக்குதல், வகுப்பாக்கம் செய்தல்,

**மதிப்பீட்டின் பிரதான அம்சங்கள்**

மதிப்பீடு இரண்டு பிரதான அம்சங்களைக் கொண்டுள்ளது.

1) மாணவர் மேற்கொள்ளும். முன்னேற்றத்தை ஆதாரமாகக்

கொடுக்கலாம். அதனூடாக அவர்களது தன்னம்பிக்கையையும் சுய ஆர்வத்தையும் தூண்டி விடலாம்.

2) மாணவர் முழுமையாகப் பெற்ற பெறுபேறுகளைக் காட்டி அவற்றில் அவர்கள் முன்னேற வேண்டும்

**மதிப்பீட்டின் வகைகள்**

மதிப்பீடானது பல்வேறுவகையாகக் காணப்படுகின்றது. அவையாவன

1. இறுதிமதிப்பீடு
2. அமைப்புமுறை மதிப்பீடு
3. தொடர் மதிப்பீடு

4. கண்டறிமதிப்பீடு என வகைப்படுத்தப்படும்

1) **இறுதி மதிப்பீடு** , கூட்டு மதிப்பீடு/ குறுந்தொகை மதிப்பீடு (Summative Assessment)

பொதுவான கல்விச் செயன்முறையொன்றின் ,றுதியில் நடாத்தப்படும் மதிப்பீடு இறுதி/ கூட்டு மதிப்பீடு எனப்படும். மாணவனது ஒட்டுமொத்தமான செயலடைவு மட்டத்தைத் தீர்ப்புச் செய்வதற்காகவே அவ்வாறானதெரு மதிப்பீடு திட்டமிடப்படும். தரம் வழங்குவதற்கு அல்லது எதிர்வரும் பணிகளுக்கு மாணவர் தயார் நிலையில் உள்ளனரா என்பதைத்தீர்மானிப்பதற்கு கூட்டு / இறுதி மதிப்பீடு பயன்படுத்தப்படும். அத்தோடு, பாடசாலைக்கு அப்பாற்பட்ட எனினும் மாணவர் தொடர்பாகக் கரிசனைகாட்டும் சேவை வழங்குவோருக்கும் இறுதிமதிப்பீடு மூலம் கிடைக்கும் தகவல்கள் முக்கியமானவையாகும். உயர்கல்விக்காக மாணவர்களைத் தெரிவு செய்து கொள்ளும்போதும் தொழில்களுக்காக ஆட்களைத் தெரிவு செய்யும்போது இறுதி மதிப்பீட்டு அதாவது கூட்டு மதிப்பீட்டுப் பெறுபேறு ஒரு நியதியாக, பொதுவாக எல்லா நாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றது.

கால அளவின் (தவணை. வருடம்) முடிவில் கற்பவரின் அறிவையும் ஆற்றல் முன்னேற்றத்தையும் அளவிட மேற்கொள்வது. பரீட்சைகள் - மூலம் கற்பவரின் முன்னேற்றத்தை அளவிடல். இது, கற்றலின் மதிப்பீடாகும். கற்பவர் பரீட்சை எழுத வேண்டும். அதனை ஆசிரியர் பார்த்துப் புள்ளியிட்டுக் கொடுத்தல், இது மாணவர்களுக்கு இறுதிப் புள்ளி அல்லது தரங்களை வழங்க உதவும்.

2) **அமைப்பு முறை மதிப்பீடு**

ஒரு பாடத் தொடரின் அல்லது பாட அலகின் இடைநடுவே மேற்கொள்ளப்படுவது. இம்முறை கற்பவரை மேலும் கற்பதற்குத்தூண்டும் முறையாகும். மாணவர்கள் கற்றுக் கொண்டிருக்கும் போதே வகுப்பறையில் நடைபெறும். இம்முறையில் ஓர் ஆசிரியர் தனது மாணவர்களுக்கு எவை தெரியும், எவை தெரியாது என்பதைப் புரிய காத்திராது உடனுக்குடன் வைக்கும். இறுதிநிலை வரைக்கும் ஆசிரியர் மாணவர்களுக்கு உதவி. கற்கச் செய்வது. இது கற்றலுக்கான மதிப்பீடாகும்.

3) **தொடர்மதிப்பீடு** /உருவாகுநிலை மதிப்பீடு (Formative Assessment)

கற்கைக் காலத்தின் முடிவுவரை காத்திராது கற்கைக் காலம் முழுவதும் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்படுவது தொடர்மதிப்பீடு மதிப்பீட்டுக்காகக் கவனித்து, ஆகும். இம்முறையில் கற்பவரை கவனித்து அவரது குறிப்புக்கள், அடையாளம் போன்றவற்றால் பதிவுசெய்துஅவதானித்தல் ஆகும். இது அவதானம் மூலம் மேற்கொள்ளும் இலகுவான முறையாகும். இது ஒருவரைக்செயலை மதிப்பிடுவது. இம்முறையில் முழுமையாக

நோக்குகிறோம். அடைவை மட்டும் பார்க்கவில்லை. உதாரணமாக, கற்பவர் கற்றலில் ஏதேனும் பின்னடைவை எதிர்நோக்கினால் அவரது வீட்டில் அவரது நாம் ஒரு பிள்ளையை பிள்ளையின் கல்வி அறிவின் சமூகத்தில் உள்ள பிரச்சினைகள் காரணங்களாகலாம்.

ஒரு பிள்ளையைப் பற்றிய தகவல் அறிவதற்கு நீங்கள் பல்வேறுபட்ட மதிப்பீட்டுச் சூழலை அமைக்கலாம்

- தனியாக கற்பவரிடம் கேள்வியைக் கேட்டல்.
- கற்பவரை ஒரு செயலைச் செய்து காட்டச் சொல்லல்.
- ஒரு குழுச் செயற்பாட்டில் அவரை அவதானித்தல்.
- கற்பவர்களைக் குழுவாக சொல்லல்.
- ஒரு செயலைச் செய்து காட்டச் சிறிய பரீட்சை மேற்கொள்ளல். சில வினாக்கள்)

இம்முறையில் கற்பவருடைய செயற்பாட்டு வேலைகளைச் சேர்த்தெடுத்து ஒரு கோவையில் அல்லது ஒரு பையில் பேணப்படும். அவற்றை மதிப்பிடுதலின் மூலம் பிள்ளையின் அடைவை அறிய முடியும். செயலடைவுக் கோவையிலுள்ள சேகரிப்புக்கள் ஆசிரியரது கற்பித்தலையும் மதிப்பிட உதவும். அதனுள் கற்பவரின் வருடம் முழுவதும் செயற்பாடுகளைச் சேர்த்துப் பாதுகாப்பாக வையுங்கள். கற்பவரின் நடக்கும் பெயரும் திகதியும் எழுதப்பட வேண்டும். செயலடைவுக் கோவையில் பேணக்கூடிய விடயங்கள் சித்திரங்கள், படங்கள். கணிதச் செயற்பாடுகள், ஆங்கிலக் கட்டுரைகள், பிள்ளையின் ஆக்கங்கள், கைவேலைகள், எழுத்தாக்கங்கள். மதிப்பீட்டு முறை மதிப்பீட்டுச் செயற்பாடுகள் ஒவ்வொரு பாடத்துக்கும் கைநூலில் உள்ளடக்கப் பட்டுள்ளன. இது இலகுவான அவதானத்தில் தொடங்கி, செவிமடுத்துக் கேட்டல், மதிப்பிடும் குறிப்பிட்ட எழுத்துவேலைகள் செல்கிறது.

4) **கண்டறி மதிப்பீடு**

இது ஒரு பொதுவான சோதனையோ அவதானிப்போ அல்ல, மாறாக ,து ஒரு சிறப்பான செயன்முறையாகும். குரோன்லன்ட் (1998) என்பவரின் கூற்றுப்படி, (formative) உருவாகுநிலை மதிப்பீடொன்றினால் கண்டறிந்து திருத்த முடியாத வகையில் மாணவரிடத்தே நீண்டகாலமாக ,ருந்துவரும் கற்றல் பிரச்சினைகளை ஆராய்வதற்கு கண்டறிசோதனைகள் தேவை.

**சுருக்கம் :-**

- கல்வி நிறுவனங்கள் குறிப்பாக முன்பள்ளி கல்வி நிறுவனங்கள் கல்வியுலகில் பிரதான இடம் வகிக்கின்றது.

- கற்பித்தலில் ஆசிரியர்களுக்கு பெரும் பொறுப்பு வழங்கப்படுகின்றது. மேலும் இவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கேற்ப செயற்படுவதன் மூலம் அவர்களை அவர்களது பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்ற வாய்ப்பளிக்க முடியும்
- கற்பித்தல் சாதனங்கள், கற்பித்தல் முறைகள் என்பன கற்றல், கற்பித்தலை வெற்றி கொள்ள உறுதுணையாக அமைகின்றது.
- கல்வி நிறுவனங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு நிவர்த்தி செய்வதன் மூலம் கல்வியுலகை வெற்றியடையச் செய்ய முடியும்.
- கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் மாணவர்களுக்கு உன்னதமான எதிர்கால வழங்க முடியும்.

**பயிற்சி வினாக்கள் :-**

01) சுருக்கமான விடை தருக

1. முன்பள்ளி நிறுவனங்கள் என்றால் என்ன? அவை எதிர்கொள்ளும் சவால்கள் 3 தருக?
2. கற்பித்தலில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி சிறுகுறிப்பெழுதுக?
3. கற்பித்தல் சாதனங்களின் வகைகள் எவை?
4. கற்பித்தல் முறைகள் 3 தருக?
5. கல்வி நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் 4 தருக?

**உசாத்துணை நூல்கள் :-**


1. அருள்மொழி. சே (2010). பிள்ளை வளர்ச்சியும் கற்றலும், சாய்ந்தமருது, றோயல் புத்தக நிலைய வெளியீடு
2. சந்திரசேகரம், ப., (2011), கல்வித் தத்துவம், சேமமடு புத்தகசாலை, யுஜி 50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு -11.
2. சார்ள்ஸ் வெரேக்கர், (1973), அரசியற் கொள்கையின் வளர்ச்சி, கல்வியியல் வெளியீடு, கொழும்பு.
3. சிவானந்தமூர்த்தி, க., (2012) *ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும்,* லங்கா புத்தகசாலை, கொழும்பு.
4. சிவகுமார், த., (2007), விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும், மேற்கு ஊரெடு, சுண்ணாகம், யாழ்ப்பாணம்.
5. சுப்புரெட்டியார், த., (1981), கல்வி உளவியல், மல்லில்தூர் வாயன் கம்பனி வெளியீடு, சென்னை.
6. நடராஜன், வீ., (2010), சிறப்புக் கல்வி, சாரதா பதிப்பகம், சென்னை.
7. மகேசன், ஏ., (2010), விசேட கல்வியும் ஆலோசனை வழங்கலும், ஷாரா அச்சகம், ஏறாவூர்.

8. சபா ஜெயராசா, (2004) ஆபத்து விளிம்பில் கற்போர், குமரன் புத்தக இல்லம்.
9. செல்வராஜா.மா, (2006) முன்பள்ளிக்கல்வி , மட்டக்களப்பு எவகிறீன் அச்சகம்.
10. ---------------------------(2009)இ கல்வியியல், மட்டக்களப்பு, எவகிறீன் அச்சகம்.
11. கல்விப்பீடம்(2005), முன்பள்ளிக் கல்விக் கோட்பாடுகள், திறந்த பல்கலைக்கழகம்
12. தேசிய கல்வி நிறுவகம். (1993)கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும் பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறைஇ மகரகமஇ
13. சரோஜினி, பி. ஆர்., ராஜமோகன், அர்., (2009), சிறப்ப கல்விசார் சிந்தனைகள், சாரதா வெளியீடு, சென்னை.
14. சிவகுமார்,த (2010), விஷேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும், கொழும்பு. சேமமடு பதிப்பகம்.
15. பக்கீர் ஜ:.பார், ப.கா. (2009). மாணவர்களின் வகுப்பறை நடத்தை, கொழும்பு குமரன் புத்தக இல்லம்.
16. மகேசன், ஏ., (2010), விசேட கல்வியும் ஆலோசனை வழங்கலும், ஷாரா அச்சகம், ஏறாவூர்.
17. ஜெயராசா. ச, (2008), ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
18. ஜெயராசா. ச, (2011), ஆசிரியர் வாண்மையியல், சேமமடு புத்தகசாலை, கொழும்பு.
19. ஜெயராசா. ச, (2001), குழந்தைக் கல்விச் சிந்தனைகள், போஸ்கோ வெளியீடு, நல்லூர், யாழ்ப்பாணம்.

**English**

1. Bee Heleem (1985) The Developing child, New York, Harper and Row Publishers.
2. Cronbach .L.J (1954) Educational Psychology, New York, Harcourt Publication
3. Erikson, E.H, (1950), Childhood and society, New York, Norton Publication
4. Kochhar, N. (2006) Methods and Techniques of Teuching, New Delhi, Sterling publishers, Pvt.
5. Ramnath Sharma (2005)., Guidance and counseling, India, Surjeet Publications.
6. Dunn,L,M (1980.)Exceptional children in schools Holt, Rineharn and Winston inc, New Delhi.

7. Meena Cariappa and Geeta.D. (1978), How to Help Your Disabled Child., PVT Ltd, New Delhi.
8. Somnath Saraf, (1986), Education in Human Values, Vikas Publishing house PVT Ltd, New Delhi.
9. Paul Ramsden , (1982)Learning to Teach in Higher Education., London.
10. Hirst, H.P, (1974), Moral Education in a Secular Society, London.
11. William, Gray, (1978), Teaching for Reading and writing , London,
12. Algozzine,B & Yaseldyke,J (2006), The fundamental of Special Education, Califonia, Crown Press.
13. Mangal. S.K, (2007), Educating Exceptional Children: An Introduction to Special Education, Prentice –Hall of India Private Limited, New Delhi.
14. Seamus Hegarty,(2011) Education & Childern With Special Needs,London, Sage Publication.
15. Yeseldyke.J.E & Algozzine.B (1998).,Special Education : A pratical approach for teachers, New Delhi Kanishka Publishers.
16. Sen Gupta.M, (2013), Early Childhood Care and Education, Delhi, PHI Learing Private Limited

**Web Sites**

1. www.carecourses.org
2. www.childcareexchange.com
3. www.indiana.edu

**சஞ்சிகைகள்:**

அகவிழி- 2009, கொழும்பு

குறிப்புகள் -----------------------------------------------------------------------